க. பொ. த. (உயர்தரம்)

# இரசாயனவியல் பயிற்சி



பொது இரசாயனம்

அசேதனஇரசாயனம்

தொகுப்பு:

A. T. வேலும்மைலும் B. Sc. (Special)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனப் பயிற்சி

## பொது இரசாயனமும் அசேதன இரசாயனமும்

A. T. வேலும்மைலும் B. Sc. (Special)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| அலகு | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆவர்த்தனப் பாகுபாடு, அணு அமைப்பு பொது | | 1 |
| | ,, | பல்தேர்வு வினாக்கள் | 14 |
| 2. | ஒட்சியேற்றம் தாழ்த்தல் | | 40 |
| 3. | பண்பறிபகுப்பு, கனமானப் பகுப்பு, நிறைமாணப் பகுப்பு | | |
| | | பலதேர்வு வினாக்கள் | 47 |
| | | கட்டுரை வினாக்கள் | 60 |
| 4. | கூட்டம் I-ம் II-ம் | பலதேர்வு வினாக்கள் | 70 |
| | | கட்டுரை வினாக்கள் | 77 |
| 5. | கூட்டம் III-ம் IV-ம் | பலதேர்வு வினாக்கள் | 83 |
| | | கட்டுரை வினாக்கள் | 87 |
| 6. | கூட்டம் V-ம் VI-ம் | பலதேர்வு வினாக்கள் | 90, 97 |
| | | கட்டுரை வினாக்கள் | 96, 99 |
| 7. | கூட்டம் VII | பலதேர்வு வினாக்கள் | 104 |
| | | கட்டுரை வினாக்கள் | 110 |
| 8. | தாண்டல் மூலகம் | பலதேர்வு வினாக்கள் | 113 |
| | | கட்டுரை வினாக்கள் | 116 |
| 9A. | பலவினப்பயிற்சி | கட்டுரை வினாக்கள் | 121 |
| | | பலதேர்வு வினாக்கள் | 132 |
| 9B. | பலவினப்பயிற்சி | பலதேர்வு வினாக்கள் | 139 |
| | விடைகள் | | 153 |
| 9C. | பலவினப்பயிற்சி | கட்டுரை வினாக்கள் | |
| 9D. | கூற்றுக் காரணம் | | |
| | பலதேர்வு வினாக்கள் | | 23 |
| 10. | அமைப்பு வினாக்கள் | | 32 |


படம் 2




படம் 1







படம் 3




படம் 4




படம் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 1 123ம் வினா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | ↓↑ | ↓↑ | ↑ | | | | | | |
| b | ↓↑ | ↓ | ↓ | ↓ | | | | | |
| c | ↓ | ↓ | ↓ | ↓ | ↓ | | | | |
| d | ↓ | ↓↑ | ↑ | ↑ | | | | | |
| e | ↓ | ↑ | ↑ | | ↓↑ | | | | |

வெளியீடு:

திருமதி P. மனுவேல்பிள்ளை
2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

# அலகு 1

## ஆவர்த்தனப்பாகுபாடு, அணுவமைப்பு பொது

1. உலோகங்களுக்கும், உலோகம் அல்லாத மூலகங்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளை ஆராய்க.

2. அணுக்கள், இலத்திரன்கள், புரொத்தன்கள், நியூத்திரன்கள் ஆகியவை மூலகங்களில் இருக்கின்றன என்பதற்கு ஆதாரமாகவுள்ள பரிசோதனைச் சான்றுகளைச் சுருக்கமாகக் கூறுக.

3. லிதியம், சோடியம், பொற்றாசியம் ஆகியவற்றின் அணுவெண்கள் முறையே 3, 11, 19. இவற்றின் அணுக்களின் இலத்திரன் கட்டமைப்பை உய்த்தறிந்து, பின்வருவனவற்றை விளக்குக:

(அ) வலுவளவு

(ஆ) இம் மூலகங்களின் இயல்புகளில் உள்ள ஒற்றுமைகள்.

4. பின்வருவனவற்றை விளக்குக:

(அ) அயன் கொள்கை.

(ஆ) பங்கீட்டுப் பிணைப்பு. வெள்ளீயமும் ஈயமும் வலுவளவு 2ஐயும் 4 ஐயும் காட்டுகிறது. இதனை எவ்வாறு விளக்கலாம்?

5. இரு மூலகங்கள் A யும் B யும், அவற்றின் கருக்களில் முறையே 6 புரோத்தன்கள், 6 நியூத்திரன்களையும், 12 புரோத்தன்கள், 12 நியூத்திரன்களையுங் கொண்டுள்ளன. ஒவ்வொரு மூலகத்திற்கும் பின்வருவனவற்றை உய்த்தறிக.

(அ) அதன் அணு நிறை. (ஆ) அதன் அணுவெண்;

(இ) வலுவள விலத்திறன்களின் எண்ணிக்கை.

(ஈ) அதன் உலோக அல்லது உலோகமல்லாத தன்மை.

6. ஆவர்த்தனப் பாகுபாட்டின் சரித்திரத்தை சுருக்கமாக விபரிக்கவும். கல்சியம், துரந்தியம், பேரியம் ஆகியவற்றை ஒரே கூட்டத்தில் வைப்பதற்குக் காரணங்கள் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.** ஆவர்த்தன அட்டவணையின் தொடர்பில், மேல்வருவன வற்றிற்கு வரைவிலக்கணங்கூறி, உதாரணங் காட்டி விளக்குக.

(அ) எட்டன்

(ஆ) குற்றுவர்த்தனமும் நெட்டாவர்த்தனமும்

(இ) தாண்டல் மூலகங்கள் (ஈ) மூலகங்களின் குடும்பம்

(உ) வலுவளவும் கூட்டவெண்ணும்.

**8.** பின்வருவனவற்றிற்கு விளக்கக்குறிப்புக்கள் கூறுக.

(அ) சொடியின் கதிர்த் தொழிற்பாட்டு இடப் பெயர்ச்சி விதி

(ஆ) ஆவர்த்தன அட்டவணையில் மூலே விட்டத் தொடர்புகள்

(இ) தாண்டல் மூலகங்கள் (ஈ) சமவுரு இயல்பு.

**9.** மூலகங்களின் பாகுபாடு ஏன் ஆவர்த்தனப் பாகுபாடு என அழைக்கப்படுகிறது. Al, Si, P, S, Cl ஆகிய ஐந்து மூலகங்களும் இரண்டாவது குறுகிய ஆவர்த்தனத்திலுள்ளன. இவற்றை இந்த ஒழுங்கில் அடுக்குவதற்குக் கூடியளவு காரணங்கள் கொடுக்கவும்.

**10.** ஆவர்த்தனப் பாகுபாட்டில் மூலகங்கள் (அ) கூட்டங்களாக (ஆ) ஆவர்த்தனமாக, ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவ்வொழுங்குகள் எவ்வாறு அணு அமைப்புடன் சம்பந்தப்பட்டதென விளக்குக.

**11.** ''அணு எண்'' என்பதனல் யாது விளங்குகிறீர். இரசாயன மூலகங்களைப் பாகுபடுத்துவதற்கு ''அணு நிறை''யிலும்பார்க்க ''அணு எண்'' கூடிய உபயோகமுள்ளதெனக் கருதப்படுவதற்கான காரணத்தை விளக்குக.

மேல்வரும் தரவைக் கொண்டு எவற்றை உய்த்தறிவீர்.

| மூலகம் | ஐதரசன் | ஆகன் | பொற்றுசியம் |
|---|---|---|---|
| அணு எண் | 1 | 18 | 19 |
| அணு நிறை | 1·0)3 | 39·94 | 39·10 |

(அ) அணு ஆரையின் பெறுமானம் மூலகங்களின் இரசாயன இயல்புகளில் மிகப் பிரதான இடத்தைப் பெறுகின்றது என்பதை அயனுக்கச்சத்தி, இலத்திரநாட்டச்சத்தி என்பவற்றுடன் தொடர்பாக்கி விளக்குக.



அயனுக்க சக்தியின் பெறுமதிகள்

(i) அணு ஆரை

(ii) ஓபிற்றல்களிலுள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை

(iii) ஓபிற்றல்களின் வகை, என்பவற்றில் எவ்வாறு தங்கியுள்ளது என்பதை விளக்குக.

**12.** ''மூலகங்களின் இரசாயனவியல்புகளிலும் பௌதிகவியல்புகளிலுமுள்ள ஆவர்த்தனம்'' என்பதன் கருத்து என்ன? இவ்வியல்பு மூலகங்களின் ஆவர்த்தனப்பாகுபாட்டிற்கு எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

**13.** மூலகங்களின் பாகுபாட்டிற்குப் பின்வருபவர்கள் என்ன அம்சங்களைக் கொடுத்துதவியிருக்கிறுர்கள்:

(அ) தொபரைனர் (ஆ) உலோதர் மேயர்

(இ) நியூலந்து (ஈ) மெண்டலீவு

மெண்டலீவின் பாகுபாடு என்ன முறைகளில் திருத்தப்பட்டிருக்கிறது?

**14.** தாற்றனின் (Dalton's) அணுக் கொள்கையிலுள்ள முக்கிய அம்சங்களைக் கூறுக. நிறைமான விதிகள் இக்கொள்கைக்கு எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைக் காட்டுக. தற்போதைய அறிவு இக்கொள்கையை எவ்வாறு திருத்தியிருக்கிறது?

**15.** பின்வருவன, ஆவர்த்தன அட்டவணையின் மூன்றும்வரிசை மூலகங்களினது சில சாதாரண சேர்வைகளாகும்.

| | |
|---|---|
| Na OH | Si $(OH)_4$ அல்லது $H_4$ Si $O_4$ |
| Mg $(OH)_2$ | P (OH $_3$ அல்லது $H_3$ $PO_3$ |
| Al $(OH)_3$ | Cl (OH) அல்லது HOCl |

(அ) மூன்றும் வரிசை மூலகங்களின் இலத்திரன் உருவமைப்புகளின் அடிப்படையில், இச் சேர்வைகளின் அமில-கார நடத்தைகளின் ஒழுங்கு வரிசையை விளக்குக.

(ஆ) பின்வருவனவற்றை எடுத்துக் காட்டுவதற்கான சமன்பாடுகளை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) நீர்க் கரைசலில் ஒவ்வொரு சேர்வையினதும் அயனுக்கம்.

(ii) ஒவ்வொரு சேர்வையும், அமிலமாகவோ, அல்லது காரமாகவோ அல்லது இரண்டுமாகவோ தொழிற்படும் தாக்கம்.

**16.** மேல்வருவன பற்றிச் சுருக்கமாக விவரிக்கவும்:

(அ) உலோதர் மேயரின் அணுக்கனவளவு வளைகோடு.

(ஆ) நியூலந்தின் எட்டெண் விதி

(இ) உலோகங்களினதும் உலோகமல்லாதவைகளினதும் இயல்புகள்.

**17.** மென்டலீவின் காலம்வரை, மூலகங்களின் பாகுபாட்டின் சரித்திர வரலாற்றை ஆராய்க. மென்டலீவின் பாகுபாட்டிலுள்ள சிறப்புகளைக் காட்டுக.

**18.** பின்வருவனவற்றை விளக்குக:

(அ) செப்பிலும் சோடியம் கூடிய தாக்குதன்மையுடையது.

(ஆ) செப்புச் சல்பேற்றுக் கரைசலிலிருந்து செப்பை, நாகம் மாற்றீடு செய்கிறது.

(இ) சோடியங் குளோரைட்டு ஒரு மின்வலுவுள்ள சேர்வை.

(ஈ) ஆசனிக்கு ஓர் உலோகப்போலி.

(உ) மக்னீசியம் பண்பறிவதற்குரிய பகுப்பில், கூட்டம் III இல் ஐதரொட்சைட்டாக வீழ்படிவதில்லை.

**19.**

(i) (அ) $ns^2np^2$ (ஆ) $nd^{10}(n+1)s^2$ எனும் பொது இலத்திரநிலையமைப்புடைய மூலகங்களில் ஒவ்வொரு வகைக்கும் மூன்று உதாரணங்கள் தருக.

(ii) சோடியத்தினதும் செம்பினதும் இலத்திரனிலையமைப்பை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக:

(அ) சோடியம் உடனடியாக ஒட்சியேற்றம் அடைகின்றது. ஆனால் செம்பு உடனடியாக ஒட்சியேற்றம் அடைவதில்லை.

(ஆ) சோடியம் இருவலுவுள்ள கற்றயன் நிலை அடைவதில்லை, ஆனால் செம்பு இருவலுவுள்ள கற்றயன்நிலை அடையும்.

(சோடியம், செம்பு என்பவற்றின் அணுவெண்கள் முறையே 11, 29)



(iii) வலுவளவின் இலத்திரன் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, மேல்வருவனவற்றை விளக்குக:

(அ) பொற்றசியங்குளோரைட்டு ஓர் உயர்ந்த உருகுநிலையுடைய திண்மம்.

(ஆ) காபன் நாற்குளோரைட்டு ஒரு கொதிநிலை குறைந்த திரவம்.

**20.** ஆவர்த்தன அட்டவணையில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தில் இருக்கும் மூலகத்தின் இரசாயன இயல்புகள் அணு நிறை கூடும்போது மாற்றம் அடைகின்றன.

(a) இம்மாற்றத்திற்கு உரிய காரணத்தை விளக்குக. உமது விளக்கத்திற்கு ஆதாரமாக கூட்டம் IV B யில் உள்ள மூலகங்களை C தொடங்கி ஈயம் வரையுள்ளனவற்றைத் தெரிவு செய்க.

(b) (a) யில் குறிப்பிட்ட குணதியங்களை உபயோகித்து, V ம் கூட்ட மூலகங்களான நைத்தரசன், பொசுப்பரசு, ஆசெனிக்கு, அன்றிமணி, பிஸ்மத் ஆதிய மூலகங்களில் ஈற்றில் இருக்கும் மூன்றினது முக்கிய இரசாயன இயல்புகளையும், பிணைப்புத் தொடர்புகளையும் குறிப்பிடுக.

**21.** (i) (அ) நைதரசன் குடும்ப மூலகங்களினதும் (ஆ) நாணய உலோகங்களினதும் பொது இலத்திரனிலையமைப்பைத் தருக.

$BF_3$ உடன் $NH_3$ சேர்ந்த இணைந்த சேர்வையின் இலத்திரனமைப்பைக் காட்டுக.

(ii) அணுவெண் 35ஐ உடைய மூலகத்தின் இலத்திரனிலையமைப்பை எழுதுக. இவ்விலத்திரனிலையமைப்பை அடிப்படையாகக் கொண்டு இம்மூலகத்தின் முக்கிய இரசாயனப் பண்புகள் மூன்றினை விளக்குக.

**22.** பின்வருவனவற்றிற்கு விளக்கங்கள் கூறுக.

(a) திண்ம காபனீரொட்சைட்டும், திண்ம நப்தலீன் ஆகிய இரண்டும் அறை வெப்ப நிலையில், வெளியில் வைத்தால் சுலபமாக ஆவியாகக் கூடியவை ஆனால் வளியின் முன்னிலையில் சூடாக்கினால், காபனீரொட்சைட்டுப் பதங்க மாகும் ஆனால் திண்ம நப்தலீன் உருகித் திரவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23.** (அ) அணுவெண் (ஆ) இலத்திரனிலையமைப்பு, என்பவையால் யாது விளங்குகிறீர்? மூலகப் பாகுபாட்டிலுள்ள தாண்டல் மூலகங்களின் இடத்திற்கு இலத்திரனிலையமைப்பு எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது?

மேல்வருவனவற்றுள் இரண்டை விளக்குக:

(அ) சடத்துவ வாயுமூலகங்களினது உறுதிச் சமநிலை.

(ஆ) ஐதரசனைக் காரவுலோகங்களினுடனும் அலசன்களினுடனும் ஆவர்த்தன பாகுபாட்டில் சேர்த்தல்.

(இ) நைதரசன் குடும்ப மூலகங்களின் அணுவெண் அதிகரிக்க இம் மூலகங்களின் உலோகமல்லாத சிறப்பியல்புகள் குறைகிறது.

**24.** (அ) மேல்வருவனவற்றின் மூன்றின் கட்டமைப்புக்களைக் குறிக்க:

(i) $H_2O$ (ii) $H_3PO_4$ (iii) $CO_2$ (iv) $H_3PO_2$ (அணுக்களைச் சுற்றிய இலத்திரனமைப்புக்களைத் தரத் தேவையில்லை.

**25.** ஆவர்த்தனவட்டவணையிலுள்ள (அ) தாண்டலற்ற மூலகங்களைக் கொண்ட ஓர் ஆவர்த்தனத்தினதும் (ஆ) தாண்டலற்ற மூலகங்களைக் கொண்ட ஒரு கூட்டத்தினதும் மூலகங்களின் மின்னெதிரியல்பின் பொதுவான மாறுபாடுகளை எவ்வாறு இம் மூலகங்களின் இலத்திரனிலையமைப்புகளுடன் சம்பந்தப்படுத்துவீர்?

A, B, C, D ஆகிய மூலகங்கள் முறையே Z, Z+1, Z+2, Z+3 ஆகிய அணுவெண்களைக் கொண்ட தாண்டலற்ற மூலகங்களாகும். D எனப்படும் மூலகம் ஒரு காரவுலோகமானால், மேல்வருவனவற்றைப் பற்றிக் குறிப்பிடுக:

(i) BD ஆகிய சேர்வையிலுள்ள பிணைப்பின் இயற்கையும் இச் சேர்வையின் (BD) இரசாயனவியல்புகளும்.

(ii) $B_2$ ஆகிய மூலக் கூற்றிலுள்ள பிணைப்பின் இயற்கை.

(iii) C யினது இலத்திரனிலையமைப்பு.

**26.** (அ) பொஸ்பரசின் பின்வரும் அமிலங்களின் கட்டமைப்புக்களை எழுதுக:

(i) பொஸ்போரிக் கமிலம் $H_3PO_4$



(ii) ஐப்போ பொஸ்பர சமிலம் $H_3PO_2$

(iii) பைரோ பொஸ்போரிக் கமிலம் $H_4P_2O_7$

**27.** (i) ஒவ்வொரு மூலக்கூறு அமிலத்திற்கு ஒரு பொசுபரசு அணுவைக் கொண்ட பொசுபரசுவின் எளிய ஒட்சியமிலங்களின் இலத்திரநிலையமைப்புகளைச் சுட்டிக் காட்டுக.

(ii) மேல்வருவனவற்றைத் தருக:

(அ) $H_4P_2O_7$ என்பதன் இலத்திரனிலையமைப்பு

(ஆ) (i) இல் கூறப்பட்ட ஒவ்வோர் ஒட்சியமிலங்களிலுமுள்ள பொசுபரசுவின் ஒட்சியேற்றவெண்.

(இ) (i) இல் கூறப்பட்ட ஒட்சியமிலங்கள் சோடியமைதரொட்சைட்டுடன் அனுபவிக்குந் தாக்கங்கள்.

**29.** ஐதரசனை தொழிற்துறையிலாக்குவதற்கு இரு மின்பகுப்பற்ற முறைகளைச் சுருங்க விபரிக்க.

(அ) ஐதரசனின் முக்கிய தொழிற்துறைப் பயன்பாடுகள் மூன்றினைத் தருக.

(இ) ஐதரசனை காரவுலோகங்களுடன் பகுப்பதற்கு இரு காரணங்களும், அலசன்களுடன் பகுப்பதற்கு இரு காரணங்களும் தருக.

(ஈ) $NH_3$, $H_2O$, HF எனும் சேர்வைத் தொடரின் அமில-உப்பு மூலக் குணங்களில் காணப்படும் மாற்றத்தை விளக்குக.

**29.** (i) $H_2O$, $NH_3$, $CO_2$ ஆகிய மூலக் கூறுகளின் உருவங்களைச் சுட்டிக் காட்டுக.

ii) $SO_2$, BaO, $K_2O$ ஆகிய ஒட்சைட்டுகள் நீருடன் அனுபவிக்கும் இரசாயனத் தாக்கங்களின் வேற்றுமைகளை விளக்குக.

(iii) $SiCl_4$, $AlCl_3$, KCl ஆகிய ஏலைட்டுகள் நீருடன் அனுபவிக்கும் இரசாயனத் தாக்கங்களின் வேற்றுமைகளை விளக்குக.

**30.** (i) பொசுபரசு - 31 உம் பொசுபரசு - 32 உம் அணுவெண் 15 ஐக் கொண்ட பொசுபரசுவின் இரு சமதானிகளாகும். பொசுபரசு - 32 எனப்படுவது கதிர்த் தொழிற்பாடுடையதும் 14·5 நாட்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை உயிராகக் கொண்ட β - கதிர் வீசலே வெளியிடுவதுமாகும். தடித்த எழுத்துக்களில் தரப்பட்டவைகளை விளக்குக.

(ii) α - கதிர் வீசல்களிலிருந்து β - கதிர் வீசல்கள் வேறுபடுகின்ற இரண்டு இயல்புகளைத் தருக.

(iii) இரதபொட்டின் அணுவினது கருமாதிரியுருவை நிரூபிப்பதற்கு எவ்வாறு α - கதிர் வீசல் பயன்பட்டதெனச் சுட்டிக் காட்டுக.

**31.** பின்வருவனவற்றில் நான்கிற்குச் சிறு குறிப்புக்கள் எழுதுக:

(அ) டியூலோங் பெற்றிற்றின் விதி

(ஆ) தாண்டல் மூலகங்கள்

(இ) மின்வலுச் சேர்வைகளும் பங்கீட்டு வலுச் சேர்வைகளும்

(ஈ) சமதானிகள் (உ) கதிர்த் தொழிற்பாட்டுக் கதிர்கள்.

**32.** கதிர்த் தொழிற்பாட்டுக் கதிர்கள் யாவை, அவற்றின் இயல்புகளைத் தொடர்பு செய்க.

அரை உயிர்க்காலம் என்பது பற்றி என்ன விளங்குகிறீர்.

**33.** மேல்வருவனவற்றை விளக்கவும்

(அ) செப்பிலும் சோடியம் தாக்குதன்மை கூடியது

(ஆ) இரும்பின் அணுநிறை 55·5

(இ) பொற்ருசியம் இருகுரோமேற்று ஒரு ஒட்சியேற்றும் கருவி

(ஈ) காபன் நாற்குளோறைட்டு ஒரு பங்கீட்டு பிணைப்புச் சேர்வை

(உ) மங்கனீசு பல வலுவளவுகளைக் காட்டுகிறது.

**34.** ஆவர்த்தன அட்டவணையில் ஒரு கூட்டத்திலும் ஒரு ஆவர்த்தனத்திலும் எவ்வாறு அணு ஆரை மாறுகின்றது என்பதை வரைபட மூலம் காட்டி விளக்குக.

(a) அயன் ஆக்க சக்தி என்ருல் என்ன.

(b) மின் எதிரியல்பு என்ருல் என்ன.



**35.** ஆவர்த்தன அட்டவணையில் மாங்கனிசை (அணு எண் 25) சரியான இடத்தில் எவ்வாறு சேர்ப்பீர். இம்மூலகத்தின் இரசாயன இயல்புகளை அயலிலுள்ள மூலகங்களின் இரசாயன இயல்புகளுடன் தொடர்பு செய்து எவ்வாறு இம்மூலகத்தின் நிலை பொருத்தமாக அமைகின்றது எனக் காட்டுக.

$$2\,KMnO_4 + 10\,FeSO_4 + 8\,H_2SO_4 = K_2SO_4 + 2\,MnSO_4 + 5\,Fe_2(SO_4)_3 + 8\,H_2O$$

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் சமன்பாடு அதனுல் குறிக்கப்பட்டிருக்கும் இரசாயனத் தாக்கத்தை திருப்திகரமாக விளக்கவில்லை என தர்கிக்குக.

**36.** பின்வரும் கூற்றை ஆராய்க.

ஆவர்த்தன அட்டவணையில் உள்ள எல்லாக் கூட்டங்களுள்ளும் அலசன்களின் (கூட்டத்தின்) குணுதிசயங்கள் மிகவும் சீராக மாறுபடுபவை.

**37.** ஒரு அயன் என்பதைப்பற்றி என்ன விளங்குகிறீர்.

பின்வருவனவற்றில் அயன்கள் இருக்கின்றன என்பதற்கு என்ன ஆதாரங்கள் உள்ளன. (a) உப்புக்களின் நீர்கரைசலில் (b) பாறையுப்பின் ஒரு பளிங்கில்.

**38.** ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் குற்றுவர்த்தனத்திலுள்ள மூலகங்களின் இரசாயன இயல்புகளைப் பற்றிய சிறு கேள்விகள் சில தரப்பட்டுள்ளன.

அம்மூலகங்கள் முறையே, அலுமினியம், ஆகன், குளோறீன், மக்னீசியம், பொசுப்பரசு, சிலிக்கன், சோடியம், கந்தகம் ஆகும்.

பின்வருவனவற்றிற்கு சுருக்கமான விடை தருக.

(a) மேற்படி மூலகங்களின் இரசாயனக் குறியீடுகளைத்தந்து, அவற்றை அணு எண் ஏறு வரிசையில் ஒழுங்கு செய்க.

(b) பின்வரும் மூலகங்களின் அணு எண்களையும் இலத்திரனிலையமைப்புக்களையும் தருக.

Ar, Cl, Si

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) முதலாம் குற்றுவர்த்தனதில் உள்ள எவ்வெவ் மூலகத்துடன் பின்வரும் மூலகங்கள் மூலை விட்டத் தொடர்புள்ளவை.
குளோறீன், மக்நீசியம், சிலிக்கன்.

(d) பின்வருபவை குளோறீனுடன் உண்டாக்கும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.

(i) அலுமீனியம்..... ......

(ii) பொசுப்பரசு .. ...

**39.** பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக:

| ஆவர்த்தன அட்டவணையில் உள்ள கூட்டம் | I | | II | | III | IV | |
|---|---|---|---|---|---|---|---|
| இருமூலகங்களின் பெயர்கள் (மூன்றும் கூட்டத்தில் (1) | (1) | (2) | (1) | (2) | (1) | (1) | (2) |
| 1. இலத்திர நிலையமைப்பு | | | | | | | |
| 2. மூலகத்தின் குளோரைட்டின் மூலக்கூற்று சூத்திரம் | | | | | | | |
| 3. குளோரைட்டில் நீரின் தாக்கம்(வேண்டிய இடத்தில் சமன்பாட்டுடன்) | | | | | | | |
| 4. மூலகத்தில் நைத்திரிக் அமிலத்தின் தாக்கம் (ஒவ்வொன்றிற்கும் ஒரு தாக்கத்தை நிபந்தனையுடன் தருக) | | | | | | | |
| 5 மூலகத்தை எவ்வாறு பெறலாம். (உ-ம்: ஒட்சைட் 150°ச இல் காபனால் தாழ்த்தல். | | | | | | | |



**40.** கீழ்வரும் அட்டவணையில், ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்த Li தொடங்கி F வரையுள்ள மூலகங்களையோ அல்லது Na தொடங்கி Cl வரையுள்ள மூலகங்களையே தெரிவு செய்து அவற்றின் இலத்திரன், நிலையமைப்பு, வெப்ப உறுதிப்பாடு, நீருடன் தாக்கம் ஆகியவற்றைத் தந்து நிரப்புக.

| | I | II | III | IV | V | VI | VII |
|---|---|---|---|---|---|---|---|
| தெரிவு செய்யப்பட்ட மூலகம் | | | | | | | |
| (a) ஒவ்வொன்றிலும், குளோறைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம் | | | | | | | |
| (b) குளோரைட்டின் இலத்திரநிலையமைப்பு (வெளியிலுள்ள இலத்திரன்கள் மட்டும் வேண்டும்) | | | | | | | |
| (c) குளோரைட்டின், வெப்ப உறுதிப்பாடு. (உ-ம்: வெப்பப்படுத்தும்போது பிரிகை அடைவதின் சுலபத்தைக் குறிப்பிடுக. | | | | | | | |
| (d) நீருடன் தாக்கங்கள் ஏதாவது இருப்பின், (ஒவ்வொன்றிலும் நீருடன்) | | | | | | | |

**41.** ஆவர்த்தன அட்டவணையில் 2வது கூட்டத்திலுள்ள (காரமண் உலோகங்கள்) மூலகங்கள் அவற்றின் எழுத்துக்கள் வரிசையிற் தரப்பட்டிருக்சின்றன. பேரியம், பெரிலியம், கல்சியம், மக்னீசியம், றேடியம், துரோந்தியம். இவற்றை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(a) அணுவெண் ஏறு வரிசையில் எழுதுக.

(b) இவற்றுள் பெரிலியத்தை தவிர இரு மூலகங்களின் இலத்திரன் நிலையமைப்பை $1S^2$ $2S^2$ வடிவில் தருக.

(c) வரைபடத்தில் அவற்றின் தொடர் அயனாக்க சத்தி எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை வரைக.

(d) (a) காரமண் உலோகங்களின் சேர்வைகளில் பிணைப்புக்களின் வகையை தருக?

(b) இச் சேர்வைகளில் நீர் கூறிய பிணைப்பு வகை இருக்கின்றன என்பதை எவ்வாறு பரிசோதனை மூலம் காட்டுவீர். நீர் பெறும் விளைவைப் பற்றி சுருக்கமாக கூறுக.

(e) காரமண் உலோகங்களின் சல்பேற்றுக்களின் கரைதிறன் அணுவெண் கூடுவதுடன் எவ்வாறு மாற்றமடையும்.

(f) காரமண் உலோகங்கள் வெவ்வேறு ஐதரேற்றுக்களை உண்டாக்க வல்லன.

(i) $CaCl_2 \cdot 2H_2O$ (ii) $CaCl_2 \cdot 6H_2O$.

$SrCl_2 \cdot xH_2O$ என்ற நீரேற்லப்பட்ட $Sr\ Cl_2$ இன் மாதிரியொன்று உமக்குத் தரப்பட்டு x இன் பெறுமதியை கணிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இதை எவ்வாறு செய்வீர் என்பதை சுருக்கமாக குறிப்பிடுக.

**42.** பின்வரும் மூலகங்களின் முக்கியமான வலுவளவுகள் யாவை என நீர் கருதுகிறீர்

(a) குளோறீன் (b) ஈயம் (c) சல்பர் (d) இரும்பு

தரப்பட்ட வலுவளவுகளை, மூலகம் உண்டாக்கும் சேர்வையின் இலத்திர நிலையமைப்புக்களில் அம்மூலகம் எவ்வாறு காட்டுகிறது. நீர் தெரிவு செய்த வலுவளவுகள், மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் இருக்கும் இடத்துடன் ஒப்புள்ளதாக இருக்கின்றதா.

**43.** பின்வரும் அவதானங்களை விளக்கி ஆராய்க

(a) மெதேனின் கொதிநிலைத்தானம் ($SiH_4$) ஒரு சிலேனின் கொதிநிலைத் தானத்திலும் பார்க்கக் குறிப்பிடக் கூடிய அளவு குறைவானது, ஆனால் அமோனியா, நீர் ஆகியவற்றின் கொதிநிலைத்தானம், பொசுப்பின், ஐதரசன் சல்பைட்டு ஆகியனவற்றிலும் பார்க்கக் கூடியது.



(b) ஐதரசன் குளோரைட்டு, ஐதரசன் புரோமைட்டு, ஐதரசன் அயோடைட்டு ஆகியனவற்றின் 1 மூ. நீர்க் கரைசலின் pH முறையே 0·09, 0·06, 0·02 ஆகும். ஆனால் ஐதரசன் புளோரைட்டின் 1 மூ, நீர்க் கரைசலின் pH 1·7

(c) மின்வலுச் சேர்வைகள் சாதாரணமாக நீரில் நன்றாகக் கரையக் கூடியவை ஆனால், சேதனக் கரைப்பான்களிற் கரைய மாட்டாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலதேர்வு வினாக்கள்

# அலகு 1

1. அணுக்களில் இலத்திரன்கள் இருக்கின்றன என்பதற்கு ஆதாரமான பரிசோதனை.
   (a) கதோட்டுக் கதிர்ப் பரிசோதனை
   (b) கால்வாய்க் கதிர்ப் பரிசோதனை
   (c) முகிலறைப் பரிசோதனை
   (d) முலிக்கனின் எண்ணெய்த் துளிப் பரிசோதனை
   (e) ஸ்பின்திறஸ் கோப் எண்ணல் பரிசோதனை.

2. அணுக்களில் நேரேற்றம் உள்ள சிறிய கரு உள்ளது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஏனெனில்
   (a) α துணிக்கைகள் மெல்லிய உலோகங்களினூடாக செலுத்தப்பட்டபோது சில துணிக்கைகள் அதிக கோணத்தால் விலகு இருத்தலால்
   (b) உலோகங்கள் பொதுவாக நல்ல மின் கடத்தி என்பதினுல்
   (c) மின் பகுத்தலின்போது உலோகங்களும் ஐதரசனும் கதோட்டில் துன் இறக்கம் அடைவதினுல்
   (d) உலோகஙகள் நேரேற்றம் அடைதலினுல்
   (e) திணிவு நிறமாலையில் நேரேற்றம் உள்ள அயன்கள் உண்டாவதினுல்

3. குளோரீன் அணுநிறை 35·5 அதன் அணு எண் 17 ம் ஆகும். எது இயற்கையில் காணப்படும் குளோரின் அமைப்பை திறமாக காட்டக்கூடியது.

| புரோத்தன் | இலத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|
| 18 | 17 | 19 |
| 18 | 17 அல்லது 10 | 17 |
| 17 | 18 அல்லது 20 | 19 |
| 19 | 17 | 19 |
| 17 | 18 | 17 |

4. பின்வருவனவற்றுள் எதற்கு குளோரைட்டு Cl அயனிலும் வேறுபாடான இலத்திரன் எண்ணிக்கையுண்டு.
   (a) Ar (b) $S_2^-$ (c) $K^+$ (d) $Ca^{2+}$ (e) $Na^+$

5. புளோரைட்டு அயனின் இலெத்திர நிலையமைப்பு உடையது
   (a) லித்தியம் அயன் (b) குளோறைட்டு அயன்
   (c) புரோமைட்டு அயன் (d) நியோன் அணு
   (e) ஒட்சிசன் அணு.

5. உதாரண ஈயமொன்றின் திணிவு நிறமாலை, திணிவு எண் 205, 206, 207, 208 க்குரிய கூம்புகளைக் காட்டியது எனின் எத்தரவு சரியானது
   (a) ஈய அணுக்கள் எல்லாவற்றிலும் ஒரே எண்ணிக்கை உள்ள நியூத்திரன் இல்லை.
   (b) ஈய அணுக்கள் எல்லாவற்றிலும் ஒரே எண்ணிக்கை உள்ள புரோத்தன்கள் இல்லை
   (c) இவ்வுதாரண ஈயம் கதிர்த்தொழிற்பாடு உடையது
   (d) இவ்வுதாரண ஈயம் தூய்மை அற்றது
   (e) ஈய அணுக்கள் ஈற்றேட்டில் நான்கு இலத்திரன்கள் உள்ளன

7. கார உலோக அணுக்களில் ஈற்றேட்டில் உள்ள எலத்திரன் பின்வருவனவற்றுள் எதில் இலேசாக இணைக்கப்பட்டிருக்கிறது.
   (a) லித்தியம்
   (b) அணு எண் 19 உள்ள மூலகம்
   (c) கூட்டத்தில் தாக்கத்திறன் மிகவும் குறைந்த மூலகம்
   (d) கூட்டத்தில் இலத்திரனை வன்மையாக ஏற்கும் மூலகம்
   (e) கூட்டத்தில் மிகவன்மையான தாழ்த்தும் கறலி.

8. பின்வரும் சக்திப் படிகள் பற்றிய கூற்றுக்களில் எது தவறுனது
   (a) ஒரு அணுவிலுள்ள இலத்திரன்கள் சத்திப் படிகளில் மட்டும் இருக்கின்றன
   (b) சத்தி கூடிய படிகளுக்கு ஓர் இலத்திரன் அசைந்து செல்லுதலை அயனுக்கல் என்று அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) அணுக்களிலும் மூலக்கூறுகளிலும் உள்ள இலத்திரன்கள் சத்திப் படிகளில் உள்ளன.

(d) இணைப்பில் ஈடுபடாத அணுவொன்று கதிர்வீசலை உறிஞ்சும் போது ஒரு இலத்திரன் உயர்ந்த சத்திப் படிக்குச் செல்லும்.

(e) ஒரு குறிப்பிட்ட சத்திப் படியில் இருக்கக்கூடிய இலத்திரன்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**9.** அணு எண் 29 உள்ள M என்ற மூலகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானதல்ல.

(a) M இன் இரு வலுவளவுள்ள அயனின் அமைப்பு ஒரு அரு வாயு அமைப்பாகும்

(b) M நீர் ஏற்றப்பட்ட இரு வலுவளவுள்ள அயனை உண்டாக்கும்

(c) M ஒரு சிக்கலயனின் பகுதியாக இருக்கக்கூடியது

(d)✓ M நீருடன் தாக்கமுறும் இயல்பு நிலைக்குறைவானது

(e) M இன் ஒட்சைட்டை நைத்திரனுடன் சூடாக்கி தாழ்த்தலாம்.

**10.** அணு எண் 19, 35, 55 ஆகவுடைய மூலகங்களைப் பற்றிய கூற்றுக்களில் சரியானவை எவை?

(a) மூன்றும் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தன

(b) மூன்றும் பங்கீட்டுப்பிணைப்பில் ஈடுபடமாட்டாதன

(c) மூன்றும் ஒரே வலுவளவுகளைக் காட்டக் கூடியன

(d)✓ மூன்றும் இலகுவில் மின்வலு பிணைப்புக்களில் ஈடுபடக் கூடியன.

**11.** பின்வரும் கூட்டங்களில் எது சம இலத்திரன் அமைப் அமைப்புள்ளது

(a) $Li^+$, $Na^+$, $K^+$ $Rb^+$, $Cs^+$

(b) $Mn^{2+}$, $Fe^{2+}$, $CO^{2+}$, $Ni^{2+}$, $Cu^{2+}$

(c) $Cl^-$, $ClO^-$, $ClO_2^-$, $ClO_3^-$, $ClO_4^-$

(d)✓ $O^{2-}$, $F^-$, Ne, $Na^+$, $Mg^{2+}$

(e) $I^-$, I, $I^+$ $I^{2+}$, $I^{3+}$.



**12.** பின்வருவனவற்றுள் எந்த (இனத்திற்கு) மூலிகம் ஆரை மிகவும் கூடியதாகவிருக்கும்.

(a)✓ $O^{2-}$ (b) $F^-$ (c) Ne (d) $Na^+$ (e) $Mg^{2+}$

**13.** புளோரைட்டு அயன், சோடியம் அயன், நியோன் அணு ஆகியவற்றின் ஆரை கூடும் தொடரை பின்வருவனவற்றுள் எது காட்டுகின்றது

(a) Ne $<$ $F^-$ $<$ $Na^+$

(b) $F^-$ $<$ Ne $<$ $Na^+$

(c)✓ $Na^+$ $<$ Ne $<$ $F^-$

(d) $F^-$ $>$ $N^+a$ $>$ Ne

(e) Ne $>$ $N^+a$ $>$ $F^-$

**14.** பின்வரும் சோடி அணு எண்களுள் எவை $X^{2-}$ என்ற அயனை உண்டாக்கும். அலோகத்தையும் $M^{2+}$ என்ற கூயனை உண்டாக்கும் உலோகத்தையும் கொண்டவை

(a) 3, 9 (b) 4, 10 (c) 20, 26 (d)✓ 8, 12 (e) 12, 24

**15.** 25°ச இலும் ஒரு வளிமண்டல அமுக்கத்திலும் பின்வருவனவற்றுஅ எந்த மூலகக் கிரும் அணுக் கனவளவு கூடியதாக இருக்கும்

(a) இரும்பு (b) கல்சியம் (c) பொற்றுகியம்
(d)✓ ருபீடியம் (e) புறோமீன்.

கேள்வி 17—19 வரையும் வேண்டிய அணு எண்களை தரப்பட்ட அட்டவணையில் இருந்து தெரிக.

| மூலகத்தின் அணு எண் | இலத்திரன் நிலையமைப்பு | மூலகத்தின் அணு எண் | இலத்திரன் நிலை அமைப்பு |
|---|---|---|---|
| 6 | 2, 4 | 10 | 2·8 |
| 7 | 2, 5 | 11 | 2·81 |
| 8 | 2, 6 | 12 | 2,8,2 |
| 9 | 2, 7 | 13 | 2,8,3 |

**17.** அணு எண் 16 உள்ள மூலகத்துடன் ஒரே கூட்டத்தில் உள்ள மூலகம்

(a) 6 (b)✓ 8 (c) 10 (d) 12 (e) 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18.** –3 ஏற்றம் அடையும்போது ஒரு விழுமிய வாயு (Noble Gas) இன் அமைப்பை பெறும் அணுக்களை உடைய மூலகம்

(a) 7 (b) 8 (c) 9 (d) 12 (e) 13

**19.** எந்த மூலகம் அணு எண் 17 உள்ள மூலகத்தின் இரு அணுக்களுடன் இணைந்து மிக நிலையான அயன்சேர்வையை உண்டாக்கும்.

(a) 6 (b) 9 (c) 10 (d) 12 (e) 13

கேள்விகள் 20 தொடங்கி 26 வரையுள்ளவை A, B, C, D, E எனக் கீழ் குறிப்பிடப்பட்ட தலையங்கங்களை அடிப்படையாகக் கொண்டவை ஒவ்வொரு கேள்விக்கும் உரிய தலையங்கங்களை உகந்த எழுத்துக்களை தெரிவு செய்வதன் மூலம், தெரிவு செய்க

(a) காரலோகம் (b) காரமண் லோகம்

(c) தாண்டல் மூலகம் (d) அலசன்

(e) சடத்துவ வாயுக்கள்

**20.** ஒரு அறைவெப்பநிலையில் 0·9 கி./க சமீ. அடர்த்தியுள்ள திண்மம்.

**21.** வலுவளவு ஓட்டில் 8 இலத்திரன்கள் உள்ள மூலகம்.

**22.** சிக்கல் அயன்களை சுலபமாக உண்டாக்கக்கூடிய மூலகம்

**23.** மின்னேர்த் தன்மை கூடிய மூலகம்.

**24.** நீருடன் தாக்கமுற்று ஓட்சிசனை வெளியேற்றும் மூலகம்.

**25.** 2, 8, 11, 2 என்ற இலத்திரன் நிலையமைப்புள்ள மூலகம்.

**26.** அறை வெப்பநிலையில் வாயு நிலையிலுள்ள ஐதரைட்டையுடைய மூலகம்.

**27.** மூலகம் X ன் அணு எண் 27ம் அணுநிறை 29ம் ஆகும்.

(a) X ன் ஒரு அணுவில் 32 புரோத்திரன்கள் உண்டு

(b) X ன் இலத்திரன் நிலையமைப்பு 2, 8, 15, 2 ஆகும்



(c) X ஒரு உலோகம்

(d) X ஒரு நிலையான ஐதரைட்டை உண்டாக்கும்

(e) X ஒரு தாண்டல் மூலகம் ஆகும்.

**28.** அணுநிறை 209 21ம் அணு எண் 82ம் உள்ள மூலகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது உண்மையானதல்ல?

(a) R ன் எல்லா அணுக்களிலும் 82 புரோத்திரன்கள் உண்டு

(b) R ன் எல்லா அணுக்களிலும் 125 நியூத்திரன்கள் உண்டு

(c) ஒவ்வொரு R அணுவிலும் 82 ஒழுக்குகளிலுள்ள இலத்திரன்கள் உண்டு

(d) R ன் அணு நிறை ஒன்றிலும் கூடிய சமதானிகளின் நிறையின் சராசரி நிறையாகும்

(e) R ன் ஒன்றிலும் கூடிய வகையான அணுக்கள் உண்டு.

**29.** பளிங்குகளில் X கதிர் தொழில் நுட்ப விலகல் முறை பின்வருவனவற்றில் எது பற்றிய விபரங்களை கொடுக்கும்.

(a) ஒரு அணுவில் உள்ள இலத்திரன்களின் அமைப்பு

(b) ஒரு மூலக்கூற்றில் உள்ள இலத்திரன்களின் அமைப்பு

(c) ஒரு மூலக்கூற்றில் உள்ள இலத்திரன்களின் செறிவு

(d) பிணைப்பு கோணம்

(e) அணுக்களின் கட்டமைப்பு.

**30.** (1) உலர் HCl (2) பென்சீன் (3) நீர் (4) 0·1 மூலர் நீர் $NaHSO_4$ (5) திரவ $NH_3$ ஆகிய சேர்வைகளுள்

(1) எச்சேர்வை மிகவும் அதிக பங்கீட்டு வலுவியல்பைக் கொண்டது

(2) எச்சேர்வை மிகவும் அமிலத்தன்மையுள்ளது

(3) எது மிகவும் அதிக முனைவுக் கரைப்பான் ஆகும்.

**31.** (1) $BF_3$ (2) $AlCl_3$ (3) LiF (4) $RaBr_2$ (5) CsI

(a) எச்சேர்வை மிகவும் ஆவிப்பறப் புள்ளது

(b) எச்சேர்வை மிகவும் குறைந்த அளவுநீரிற் கரையக்கூடியது

(c) எச்சேர்வை மிக எளிதில் இணைந்த சேர்வைகளை எளிதாக தோற்றுவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. புரோத்தனின் திணிவானது ஏறத்தாழ

(a) $10^{-22}$கி (b) $10^{-25}$ (c) $10^{-13}$ கி

(d) $10^{-8}$ கி (e) $10^{-24}$ கி ஆகும்.

33. அமோனியா மூலக் கூறுனது.

(a) தளவடிவானது (b) T வடிவானது (c) நேரானது

(d) கூம்பமானது (e) மேல்கூறிய ஒரு உருவமும் கொண்டதல்ல

34. வெள்ளியின் இலத்திரன் நிலையமைப்பு பின்வரும் எந்த வகையானது

(a) $S^2\ p^6\ S^1$ (b) $d^9\ S^2$ (c) $d^{10}\ S^1$

(d) $d^{10}\ p^1$ (e) $S^2\ p^1$

35. ஈய அயடைட்டு மஞ்சள் நிறமானதாக இருப்பதற்கு பின்வருவனவற்றுள் எது சரியான காரணமாகும்.

(a) அயடீன் நிறமானது

(b) ஈயம் மாறக்கூடிய வலுவளவுகளைக் காட்டக்கூடியது

(c) ஈயம் என்பது ஒரு தாண்டல் உலோகம்

(d) அயடீன் மாறக் கூடிய வலுவளவுகளைக் காட்டக்கூடியது.

(e) மேற்கூறிய ஒன்றுமல்ல.

36. பொசுப்பரசு அமிலத்தின் கட்டமைப்பினை மிகத்திறமாக விவரிப்பது பின்வருவனவற்றுள் எதுவாகும்.






37. சமவுருவில்லாத சோடியைக் குறிப்பிடுக.

(a) MgO உம் CaO உம் (b) $MgF_2$ உம் $Na_2O$ உம்

(c) KCl உம் NaCl உம் (d) $K_2SO_4$ உம் $KHSO_4$ உம்

(e) $Na_2S_2O_7$ உம் $Ca_2P_2O_7$ உம்.

38. HF, HCl, HBr, HI ஆகிய மூலக்கூற்றுத் தொடரில் மூலக்கூறுகளின் பருமன்

(a) திட்டமாக அதிகரிக்கிறது (b) திட்டமாகக் குறைகிறது

(c) மாறிலியாக இருக்கிறது

(d) HBr இல் அதிக உயர்வை எய்துகிறது

(e) மேற்கூறிய எதுவுமல்ல.

39. ஆவர்த்தன அட்டவணையில் மூலகம் பிரான்சியம் சீசியத்தின் கீழும் மூலகம் அஸ்டனடன் அயடீனின் கீழும் அமைந்திருக்கின்றன. பிரான்சியம் அஸ்டடைட்டானது

(a) ஒரு பங்கீட்டுவலுச் சேர்வை (b) நீரில் கரையக் கூடியது

(c) நீரில் கரையமாட்டாது (d) நீரினல் பிரிக்கப்படுகிறது

(e) மேற்கூறிய எதுவுமல்ல.

40. Li, Be, B, C, N, O, F, Ne ஆகிய மூலகங்களுள் பின்வரும் உறவுகளுள் எது சரியானது.

(a) Be த்தினது B னினதைவிட குறைவாகும்

(b) O னினது N னினதை விட உயர்வாகும்

(c) B னினது Be னினதைவிடக் குறைவாகும்

(d) O னினது C னினதை விடக் குறைவாகும்

(e) B னினது C னினதை விட உயர்வாகும்

41. அமோனியம் குளோறைட்டினது நீர்க்கரைசல் உலோக நாகத்தோடு தாக்கம் அடைந்து தரக்கூடியது.

(a) ஐதரசனும் குளோறீனும் (b) ஐதரசன் மாத்திரம்

(c) அமோனியா மாத்திரம் (d) ஐதரசனும் அமோனியாவும்

(e) மேற்கூறிய எதுவுமல்ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42.** கதிர்த் தொழிற்பாடுடைய காபன் $^{14}_{6}C$ ($\beta^-$) பிரிகையடையும்போது β துணிக்கையை வெளிவிட்டது எனின் இப்பிரிகையின் மறுவிளை பொருள்

(a) $^{10}_{4}Be$ (b) $^{10}_{5}B$ (c) $^{14}_{5}B$ (d) $^{14}_{7}N$ (e) $^{15}_{7}N$

**43.** $^{23}_{11}Na$ அணு நியூத்திரனினால் மோதியடிக்கும்போது செயற்கைக் கதிர்த் தொழிற்பாடுடைய சமதானி ஒன்று உண்டாகியது. இச்சமதானி β துணிக்கையை வெளியேற்றும்போது மீந்திருப்பது,

a) $^{20}_{10}Ne$ b) $^{24}_{10}Ne$ c) $^{24}_{11}Na$ d) $^{24}_{12}Mg$ e) $^{27}_{14}Si$

**44.** $^{238}U$ இயற்கையாகக் காணப்படும் ஒரு சமதானி ஒரு α துணிக்கையை வெளியேற்றும்போது உண்டாகும் விளை பொருள்

a) $^{234}_{90}Th$ b) $^{234}_{92}U$ c) $^{238}_{92}U$ d) $^{238}_{93}Np$ e) $^{242}_{94}Pu$

**45.** $^{12}_{6}C$ கரு $^{2}_{1}D$ டியூறியம் கருவினால் மோதியடிக்கப்பட்டபோது நியூத்திரன் வெளியேற்றப்பட்டதுடன் வேறு துணிக்கையும் அணுக்களும் உண்டாக்கப்பட்டன எனின் அத்துணிக்கை பின் வருவனவற்றின் சம தானிகளில் ஏதுவாக இருக்கலாம்

(a) காபன் (b) நைதரசன் (c) போரேன்

(d) ஒட்சிசன் e) டியூற்றீறியம்

**46.** சிறிய அளவு இரேடியம் தடித்த சுவருள்ள கண்ணாடி குழாயினுள் இட்டபின்பு அக்குழாய் வெற்றிடமாக்கப்பட்டது. பின்வரும் கதிர் தொழிற்பாட்டு தொடர் நடைபெற்றது என தெரிந்தது

இரேடியம் (e) —— α (பிரிந்தழிகை) / 3·64 நாட்கள் ——→ ரேடோன் —— α (பிரிந்தழிகை) / 54·5 செக்கன்கள் ——

பொ. லோனியம் —— பின் பிரிந்தழிகை பொருட்கள் ——→

எனின் பின்வரும் கூற்றுக்கள் எதைத்தவிர்ந்த மற்றவை பெறப்படும்



(a) குளாயின் உள் சுவரில் கதிர்தொழிற்பாடுடைய மூடி உண்டாகும்

(b) குளாயினுள் கீலியம் படிப்படியாக சேரும்

(c) குளாயினுள் ரேடோன் படிப்படியாக சேரும்

(d) குளாயினுள் வெப்பம் உண்டாகும்

(e) வெளிவிடப்படும் α துணிக்கைகள் குழாய்க்கு வெளியில் காணப்படா.

**47.** தற்கால ஆவர்த்தன அட்டவணையில் மூலகங்கள் என்ன அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

(a) அணு நிறை கூட்டும் ஒழுங்கில்

(b) எட்டாகவுள்ள கூட்டங்களாக எடுத்து

(c) அணு கருவில் உள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை கூடும் வரிசையில்

(d) இரசாயன இயல்புகளில் அமைப்பு கூட்டங்களாக

(e) அணுக்கருவில் உள்ள நியூத்திரன்களது எண்ணிக்கை கூடுகின்றது.

**48.** ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலகங்களின் ஒழுங்கு அணுவில் எவ்வியல்புடன் தொடராக ஒழுங்காக உள்ளது.

(a) அணு எண் (b) அணுத்திணிவு (c) அணு ஆரை

(d) அணு நிறை (e) அணுக்கனவளவு

**49.** பின்வருவனவற்றுள் எச்சோடி அணு எண்கள் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்திலுள்ள மூலகங்களைக் குறிப்பவை

(a) 5, 14 (b) 12, 24 (c) 26, 36

(d) 31, 49 (e) 46, 70

**50.** ஆவர்த்தன அட்டவணையில் முக்கிய கூட்டம் கீழ்நோக்கும் போது

(a) அணு ஆரை குறையும்

(b) நேரயன் உண்டாக்கும் இயல்பு குறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) முதல் அயனுக்கற் சக்தி குறையும்

(d) மின்னெதிர்த்தன்மை கூடும்

(e) ஒரே மாதிரிச் சூத்திரமுள்ள ஒட்சைட்டுக்களின் கார இயல்பு குறையும்.

**51.** அறை வெப்பநிலையில் குறைந்தது ஒரு வாயு, ஒரு திரவம், ஒரு திண்மம் உள்ள கூட்டம் ஆவர்த்தன அட்டவணையிலுள்ளது. அது

(a) I (b) III (c) V (d) VII (e) O

**52.** ஒரு மூலகம் M. $M^{2+}$ என்ற அயனை உண்டாக்கியது. அணு M க்கும் அயன் $M^{2+}$ க்கும் ஒரே அளவில் இருப்பது

(a) கன அளவு (b) இரசாயன குணதிசயங்கள்

(c) நிறம் (d) இலத்திரன் நாட்டம்

(e) கரு ஏற்றம்

**53.** ஒரு மூலகத்தின் சமதானிகள் எனப்படுவது

(a) ஒரே எண்ணிக்கையுள்ள புரோத்திரன்களும் வித்தியாசமான எண்ணிக்கை உள்ள நியூத்திரன்களும் இருப்பவை

(b) ஒரே எண்ணிக்கையுள்ள நியூத்திரன்களும் வித்தியாசமான எண்ணிக்கையுள்ள புரோத்திரன்களும் இருப்பவை

(c) ஒரே எண்ணிக்கையுள்ள புரோத்திரன்களும் நியூத்திரன்களும் இருப்பதுடன் வித்தியாசமான சமமான இலத்திரோனிக்கமைப்புள்ளவை

(d) ஒரே எண்ணிக்கையுள்ள புரோத்திரன்களும், நியூத்திரன்களும் இருப்பதுடன் வித்தியாசமான திணிவெண் உள்ளவை

(e) ஒரே திணிவெண்ணும் வித்தியாசமான எண்ணிக்கையுள்ள புரோத்திரன்களும் நியூத்திரன்களும் உள்ளவை.

**54.** பின்வருவனவற்றுள் எம்முறை சமதானிகளை பகுப்பதற்கு உபயோகப்படுவதில்லை.

(a) திணிவு நிறமாலை முறை (b) வாயு (ஊடு) பரவல் முறை

(c) வடிகட்டல் (d) மின்பகுத்தல் (e) நீர்ப்பிரிகை



**55.** நியோனின் அணுவின் அணு நிறை 20·2 அணுவெண் 10 ஆகும். இதில் 2 சமதானிகள் முறையே திணிவெண்கள் 20, 22ம் உள்ளவை எனின் 10 நியூத்திரனில் உள்ள கருவுடைய நியோனின் வீதம்

(a) 10 (b) 10·2 (c) 20 (d) 80 (e) 90

**56.** யூறேனியம் அழிவுத்தொடரின் ஈற்றை அடைவதற்கு முன்பாக $^{210}_{82}Pb$ இருக்கின்றது. பின்வருவனவற்றுள் எப்படிகள், தொடர்ந்து $^{206}_{82}Pb$ உண்டாகுவதற்கு முன்பாக நடைபெறுவதை விபரிக்கும்.

(a) $-\alpha$: $-\gamma$ (b) $-\beta$; $-\beta$; $-\beta$; $-\beta$

(c) $-\beta$; $-\gamma$; $-\beta$; $-\gamma$; $-\alpha$ (d) $-\alpha$; $-\alpha$

(e) $-\alpha$; $-\gamma$; $-\alpha$; $-\beta$

**57.** ஓராவது கூட்ட மூலகம் X ஒரு α துணிக்கையை வெளியேற்றியபோது மூலகம் Y உண்டாகியது. X இருக்கும் கூட்டம்

(a) O (b) II (c) III (d) V (e) VII

பின்வரும் துணிக்கைகள் கருத்தாக்கங்களில் வெளியிடப்பட்டன. அவற்றுள் எது ஒரே நிபந்தனையின் கீழ் அதிக அளவு அளவு அயனுக்கத்தை உண்டுபண்ணக கூடியது.

(a) ஒரு புரோத்தன் (b) ஒரு டியூத்திரன்

(c) ஒரு காமா கதிர் (d) ஒரு அல்பாத் துணிக்கை

(e) ஒரு பீற்றத் துணிக்கை.

**58.** தோறியம் 230ன் அரை வாழ் நாள் 24 நாட்கள் 8 கிராம் தோறியம் −230 பிரிந்தழிந்து 1 கிரும் ஆவதற்கு எடுக்கும் (காலம்) நாட்கள்

(a) 48 (b) 72 (c) 96 (d) 144 (e) 192

**59.** ஒரு குறிப்பிட்ட சமதானியின் அரை வாழ்நாளில் அரைவாசியின் பிற்பாடு மீந்திருக்கும் விகிதம்.

(a) 25 (b) 25 ற்கும் 60 க்கும் இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c)✓ 60 க்கும் 75 க்கும் இடையில் (d) 75

(e) 75 க்கும் 90 க்கும் இடையில்

60. $^{238}_{92}U$ என்ற மூலகம் ஒரு α துணிக்கையை வெளியேற்றிய போது Y என்ற மூலகம் உண்டாகியது. அது ஒரு β துணிக்கை வெளியேற்றியபோது Z என்ற மூலகம் உண்டானது. Zன் திணிவு எண்

(a) 233 (b)✓ 234 (c) 235 (d) 236 (e) 237

61. $^{226}_{88}Ra$ பிரிகையடைந்து $^{206}_{82}Pb$ உண்டாகும்போது நடைபெறும் பிரிந்தழிகையின் தொடர்

(a) மூன்று α துணிக்கை

(b) 2 α துணிக்கைகளும் 2 β துணிக்கைகளும்

(c) 4 α துணிக்கைகளும் 2 β துணிக்கைகளும்

(d)✓ 5 α துணிக்கைகளும் 4 β துணிக்கைகளும்

(e) 5 α துணிக்கைகளும் 6 β துணிக்கைகளும்.

62. இரசாயன பிணைப்பைப்பற்றிய எதைத்தவிர்ந்த ஏனைய கூற்றுக்கள் சரியானவை

(a) நேரேற்றமுள்ள இரு கருக்களால் ஒரே நேரத்தில் எலெத்திரன் கவரப்படுவதாலேயே பிணைப்புக்கள் உண்டாகின்றன.

(b) பொதுவாக மின் வலு பங்கீட்டு வலுப்பிணைப்புக்களின் வன்மை ஒரு அளவாக இருக்கும்

(c) பிணைப்புக்களின் இடையிடையே மின் வலு பங்கீட்டு வலுத் தன்மைகள் இருக்கக்கூடும்

(d)✓ உலோக பிணைப்பு அதிக அளவு திசை காட்டும் பங்கீட்டு வலுப் பிணைப்பு

(e) ஒரு பிணைப்பு கவர்ச்சி விசைக்கும் தள்ளுவிசைக்கும் இடையே இருக்கும் சம நிலையைக் காட்டும்.

63. பின்வருவனவற்றுள் எச்சேர்வைக்கு அயன் இயல்பு கூடுதலாக இருக்கும்

(a) சீசியம் அயோடைட்டு (b) சோடியம் புளோரைட்டு



(c) பொற்றுசியம் குளோரைட்டு (d)✓ சீசியம் புளோரைட்டு

(e) பொற்றுசியம் குளோரைட்டு

64. பின்வருவனவற்றுள் எச்சேர்வையில் இருக்கும் பிணைப்புக்களில் மின்வலு இயல்பு கூடுதலாகக் காணப்படும்.

(a) CsI (b) NaCl (c)✓ CsF (d) NaF (e) KCl

65. பின்வருவனவற்றுள் எதில் உள்ள பங்கீட்டுவலுப் பிணைப்புக்கள் சமமாக இலத்திரன் சோடிகளை பங்கு போடுவதிலும் அதிதளவு விலகி இருக்கும் (முனைவு கூடியது)

(a) $H_2$ (b) C (வைரம்) (c) $CH_4$ (d) $NH_3$ (e)✓ $H_2O$

66. போரேன் (e நிலையமைப்பு 2, 3) X என்ற மூலகத்துடன் மூன்று ஒற்றைப்பிணைப்புள்ள $BX_3$ என்ற சேர்வை உண்டாக்கும் எனின் அதிலிருக்கும் XBX பிணைப்புக் கோணத்தின் அளவு

(a) 90° (b) 100° (c) 109° (d) 115° (e)✓ 120°

67. ஒளியியற்றுக்கம் காட்டும சேர்வை

(a) $CH_3COC_2H_5$ (b)✓ $CH_3CHOHC_2H_5$ (c) $C_2H_5OC_7H_5$

(d) $CH_3CH_2CH_2CH_2OH$ (e) $C_3H_7CHO$.

கேள்விகள் 68—72 க்குரிய வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் தரப்பட்டுள்ள வரைபடங்களில் எனை ஒவ்வொன்றிலும் உள்ள தொடர் மாற்றத்தை விளக்குபவை.

படம் (1) பிற்சேர்க்கை

68 $H_2O$, $H_2S$, $H_2Se$, $H_2Te$ ஆகியவற்றின் கொதிநிலை 1

69. 100°ச இலும் 1 வளி அமுக்கத்திலுல் ஒரு மூலக்கூற்றின் கன அளவு HF, HCl, HBr, HI 4

70. முதல் அயன் ஆக்க சக்திகள் Mg, Ca, Sr, Ba 2

71 பொற்றுசியத்தின் முதன் நான்கு அயனுக்க சக்திகள் 5

72. Mg, Ca, Sr, Ba ஆகியவற்றின் அணு ஆரை. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**73.** பின்வருவனவற்றுள் எது சம இலத்திரனுக்குரிய துணிக்கை அல்லாதது

(a) CO (b) $O_2$ (c) $N_2$ (d) $CN^-$ (e) $NO^+$

**74.** பின்வரும் அமைப்புகளில் எது பிணைப்புக்கோணம் 109° 28' இலும் கூடியது

(a) $SCl_2$ (b) $CCl_4$ (c) $H_2Se$ (d) $PCl_3$ (e) $CO_2$

**75.** ஒரு பக்க 1·2 இரு குளோரோ எதிலீன் முனைவுள்ள ஒரு மூலக்கூறு ஆகும். அம்மூலக்கூற்றின் முனைவுத்தன்மையை கீழேயுள்ள படத்தில் இருக்கும் அம்புக்குறிகளால் எது சரிய சரியாக காட்டுகிறது.

[அம்பின் தலை இரு முனைவின் எதிர் முனைவைக் காட்டும்]




படம் (2) பிற்சேர்க்கை

(a) 1
(b) 2
(c) 3
(d) 4
(e) 5

**76.** மகனீசியம் ஒட்சைட்டின் உருகுநிலை 2640°ச. சோடியம் புளோரைட்டின் உருகு நிலை 992°ச வும் ஆகும். இவ் மாறுபாட்டிற்குரிய முக்கிய காரணம் எது என நம்பப்படுகிறது,

(a) மகனீசியம் ஒட்சைட்டிலுள்ள பிணைப்புகள் அயனித்தன்மை கூடியது

(b) சோடியம் புளோரைட்டிலுள்ள பிணைப்புக்கள் அயனித் தன்மை கூடியவை

(c) மக்னீசியம் ஒட்சைட்டின் அமைப்பு வித்தியாசமானது

(d) மக்னீசியம் ஒட்சைட்டிலுள்ள அயன்களில் ஏற்றம் சோடியம் புளோரைட்டிலுள்ள அயன்களிலுள்ள ஏற்றத்திலும் 2 மடங்கு

(e) மக்னீசியமும் ஒட்சிசனும் வன்மையான பங்கீட்டு வலுப் பிணைப்புக்களை உண்டாக்குகின்றன.



**77.** மூலகங்கள் X Z ஆகியவற்றில் முறையே 2, 6 ஆகிய வலுவளவு இலத்திரன்கள் உள்ளவையாயின் அவையிரண்டும் சேர்ந்து உண்டாக்கும் சேர்வை பின்வருவனவற்றுள் எதுவாகும்.

(a) X Z என்ற சூத்திரத்திலுள்ள மின்வலுச் சேர்வை

(b) $X_2 Z_2$ என்ற சூத்திரமுள்ள அயனிக் சேர்வை

(c) $X_3 Z$ என்ற சூத்திரமுள்ள அயனிக் சேர்வை

(d) X Z என்ற சூத்திரமுள்ள பங்கீட்டு வலுச் சேர்வை

(e) $X_3 Z$ என்ற சூத்திரமுள்ள பங்கீட்டு வலுச் சேர்வை.

**78.** X, Y என்ற இரு மூலகங்களின் அணு எண்கள் முறையே 3ம், 9ம் எனின்

(a) நிலையான சேர்வை உண்டாக்காது

(b) $X^+ Y^-$ என்ற மின்வலுச் சேர்வையை உண்டாக்கும்

(c) $Y^+ X^-$ என்ற மின்வலுச் சேர்வை உண்டாக்கும்

(d) X Y என்ற பங்கீட்டுவலுச் சேர்வையை உண்டாக்கும்

(e) $X_3 Y$ என்ற பங்கீட்டுவலுச் சேர்வையை உண்டாக்கும்.

**79.** பின்வருவனவற்றுள் எச்சோடி மூலகங்கள் X Y என்ற சூத்திரம் உள்ள சேர்வையை உண்டாக்குகிறது

(a) நாகமும் ஒட்சிசனும் (b) நிக்கலும் கந்தகமும்

(c) ஐதரசனும் பொற்ருசியமும்

(d) அலுமினியமும் நைதரசனும்

(e) மாங்கனீசும் குளோரீனும்.

**80.** இரு அணுக்களுக்கு இடையே இருக்கும் பிணைப்பு அயனிக் (மின்வலு) எனப்படும், எப்போது எனின்

(a) ஒன்று அல்லது கூடிய எண்ணிக்கையுள்ள சோடி இலெத்திரன்கள் இரு அணுக்களுக்கிடையே பங்கிடப்படும்போது

(b) அணுக்களுக்கு இடையில் உள்ள நிலை மின் கவர்ச்சி விசை அணுக்களை ஒன்றுக இணைத்து வைத்திருக்கும்போது

(c) ஒன்று அல்லது கூடிய இலெத்திரன்கள் ஒரு அணுவில் இருந்து வேறு அணுவிற்கு மாற்றப்படும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(d) அணுக்களில் உள்ள இலெத்திரன்களின் முகில் ஒன்றின்மேல் ஒன்று மேவும் போது

(e) அணுக்கள் ஒன்றாக கவர்ச்சிவிசை இல்லாமல் இணைக்கப்படும் போது.

81 A சோடியம் புளோரைட்டும் மக்னீசியம் ஒட்சைட்டும் ஒரே பளிங்கு அமைப்புள்ளவையும் ஒரே இடை அணுத்தூரம் உள்ளவையுமாகும். ஆனால் MgO NaF ஆகியவற்றின் உருகுநிலைமுறையே 2640°ச வும் 992°ச வும் ஆகும் எனில் இவ்வித்தியாசத்திற்கு உரிய முக்கிய காரணிகள்

(a) NaF, MgO இலும் பார்க்கக் குறைவான அயன் இயல்பு உள்ளது

(b) MgO ஒரு பங்கீட்டு வலுக் சேர்வை

(c) Mg உம் ஒட்சிசனும் Na இலும் $F_2$ இலும் பார்க்கத் தாக்க இயல்பு குறைவானவை

(d) Na, Mg இலும் பார்க்க மின்னேர்த்தன்மை கூடியதும் $F_2$ $O_2$ பார்க்க மின் எதிர்த்தன்மை கூடியதுமாகும்.

(e) Mgo வில் இரு ஏற்றமுள்ள அயன்களும் NaF இல் ஒரு ஏற்றமுள்ள அயன்களும் இருப்பதுமாகும்.

கேள்விகள் 81 தொடங்கி 84 வரை.

இக் கேள்விகளுக்குரிய ஐந்து பொருட்கள் A தொடங்கி E வரை எழுத்துக்கள் இடப்பட்டவையாகும். அட்டவணையில் தரப்பட்ட இயல்புகள் உள்ளவையும் ஆகும். எண்ணிக்கை இடப்பட்ட கேள்விகளுக்கு உகந்த தலையங்கத்தைத் தெரிவு செய்க. ஒவ்வொன்றும் ஒரு முறையோ அல்லது பல முறையோ உபயோகிக்கப்படலாம் உபயோகிக்கப் படாமலும் இருக்கலாம்.

(a) பொற்றாசியம் (b) காபன்

(c) திண்ம காபனாற் குளோரைட்டு (d) திண்ம ஆகன்

(e) சோடியம் புளோறைட்டு.

81. வண்டவாளின் கவர்ச்சிவிசையால் இணைக்கப்பட்டுள்ளதும் தனி அணுக்கள் உள்ளதுமான பொருள். 4



82: குறைந்த உருகுநிலையுள்ளதும் உயர் மின் கடத்துத் திறனுள்ளதுமான திண்மம். 1

83. மிகக் குறைந்த உருகுநிலையுள்ளதும், மின் கடத்திலியும் பல அணுக்கள் உள்ள மூலக் கூறுகள் உள்ளதும் சமச்சீர் உள்ளதுமான திண்மம். 3

84. திண்ம நிலையில் மின்கடத்திலியும் உருகியபின் சிறந்த மின் கடத்தியுமான திண்மம். 5

கேள்விகள் 85 தொடங்கி 88 வரையுள்ளவை 5 வகுப்பு பளிங்குருவுள்ள திண்மங்கள், A தொடங்கி E வரை பெயரிடப்பட்டுள்ளவற்றைக் கொண்டவை இவ்வகுப்புக்களுக்குரிய கேள்விகளின் எண்ணிக்கை இடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்குமுரிய எழுத்தை கேள்விக்குச் சரிவர விளக்கம் தரும் உகந்த மறுமொழியைத் தெரிவு செய்க. ஒவ்வொரு தலைபங்கமும் ஒருதரம் இருதரம் கூடியமுறை அல்லது ஒருமுறையும் உபயோகிக்கப்படாமல் இருக்கலாம்.

(a) உலோக இயல்புள்ளது (b) மின்வலுச் சேர்வை

(c) இராட்சத பங்கீட்டு வலுவமைப்பு

(d) தனி அணுக்கள் உள்ள மூலக்கூறுகள் உள்ளவை

(e) சிறிய எண்ணிக்கையுள்ள அணுக்களுள்ள மூலக்கூறுகள்.

85. மின் கடத்துத் திறன் குறைவான திண்ம மூலகம், அதன் உருகுநிலை 44°ச வும் அதன் கொதிநிலை 280°C. 5

86. ஒரு திண்மம் அது உருகித் திரவமாகி இரசாயனப் பிரிகை அடையாமல் மின்னைக் கடத்தக் கூடியது. 2

87. ஒரு தெளிவான வெளிச்சம் ஊடுருவக் கூடிய திண்மமாக அறைவெப்ப நிலையிலிருப்பது, நீரில் கரைந்து மின் கடத்தும் கரைசலை உண்டாக்குவது. 2

88. திண்மம் அதன் உருகுநிலைத் தானம் 1410°ச, அது திரவ நிலையில் மின்னைக் கடத்தாது. 3

89. இவ் வரைபடம் பற்றிய பெறுமதியுள்ள குறிப்பைத் தெரிவு செய்

படம் (3) பிற்சேர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(a) நீரின் சார் கொதிநிலை உயர்வாக இருப்பதற்குக் காரணம் ஐதரசன் பிணைப்பின் வன்மை.

(b) நீரின் சார் கொதிநிலை உயர்வாக இருப்பதற்குக் காரணம் அதன் மூலக்கூற்று உருவம்.

(c) ஐதரசன் சல்பைட்டின்குறைந்த கொதிநிலைக்குக் காரணம் அதன் மூலக்கூற்று நிறை குறைவாக இருத்தல்.

(d) $H_2S$ இல் இருந்து $H_2Te$ இற்கு உள்ள சீரான கொதிநிலை மற்றத்திற்குக் காரணம் கூடுகின்ற ஆவியாக்கல் மறை வெப்பம்.

(e) $H_2S$ இல் இருந்து $H_2Te$ இற்கு உள்ள சீரான கொதிநிலை மாற்றம் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்திலுள்ள மூலக்கூறுகளின் ஐதரைட்டுகளுக்கு அசாதாரணமானது.

**90.** பின்வருவனவற்றுள் எது நான்கு அணுக்களுள்ள மூலக்கூறுகளை ஆவிநிலையில் உண்டாக்கும்.

(a) ஆகன் (b) குளோரோபாம் (முக்குளோரோ மெதேன்)

(c) ஐதரசன் சல்பைட்டு (d) பொசுப்பரசு (e) ஓசோன்

**91.** பின்வருவனவற்றுள் எதற்கு நீள் அமைப்புள்ள மூலக்கூறுகள் உண்டு.

(a) புரொப்பேன் (b) அசிறைலீன்

(c) குளோறின் ஓர் ஒட்சைட்டு (d) ஓசோன்

(e) கந்தக ஈர் ஒட்சைட்டு

**92.** பின்வருவனவற்றுள் எச்சேர்வை பூச்சிய முனைவாகு தன்மையுள்ளது.

(a) $HCl$ (b) $H_2O$ (c) $Na_3$ (d) $CH_2Cl_2$ (e) $CO_2$

**93.** பின்வருவனவற்றுள் எச்சூத்திரமுள்ள சேர்வை அதிலுள்ள எல்லா அணுக்களும் அருவாயுக்களின் (Noble gases) அமைப்பை உடையவையாக இருக்கிறது.

(a) $FeCl_3$ (b) $PCl_5$ (c) $BF_3$ (d) $NO_2$ (e) $F_2$



**94.** பின்வருவனவற்றுள் எம் மூலக்கூறு தனி எண்ணிக்கையுள்ள இலத்திரன்கள் உடையது,

(a) $CO$ (b) $PCl_5$ (c) $BF_3$ (d) $NO$ (e) $F_2$

**95.** அதி உயர் வெப்பநிலையுள்ள சேர்வையாக இருக்கக்கூடிய சேர்வையைத் தெரிவு செய்க.

(a) $CH_3CH_2\ CH_2OH$ (b) $CH_3CH_2OCH_3$

(c) $CH_3CH_2CHO$ (d) $CH_3CH_2\ COCH_3$

(e) $CH_3CH_2SH$.

**96.** பாகு நிலை கூடியதாக இருக்கக் கூடிய சேர்வையைத் தெரிவு செய்க.

(a) $CH_3CH_2O\ CH_2CH_2OH$ (b) $CH_2OH\ CH_2OH$

(c) $CH_2OH\ CHOH\ CH_2OH$ (d) $CH_3CH_2CH_2CH_2OH$

(e)  OH

**97.** ஒரு இரசாயன சேர்வைக்கு பரிவு அல்லது ஓரிடப்படுத்தப்படாத இலத்திரன் கொள்கை எப்போது உபயோகிக்கப்படும் எனின் அது

(a) எழுதப்பட்ட ஒரு அமைப்பு மற்றைய அமைப்புக்களை விட குறைந்த சக்திப்படி உள்ளதாக இருக்கும்போது

(b) பல அமைப்புக்கள் எழுத முடியுமானாலும் அச்சேர்வைக்கு உரிய அமைப்பு எந்த ஒரு அமைப்புடனும் சரியாக ஒற்றுமையாக இருக்காதபோது

(c) இருக்கக்கூடிய பல அமைப்புக்கள் ஒன்றுடன் ஒன்று மின் அசைவு அலைந்து கொண்டிருக்கும்போது

(d) சம பகுதிய அமைப்புக்களிற்கு இடையேயுள்ள சமநிலையில் இருக்கும்போது

(e) சேர்வை பல சம பகுதிய அமைப்புக்கள் உடையதாக உள்ளபோது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**98.** காரீயத்தில் (கிறனபற்றில்) காபனின் இணைதல் எண் மூன்று. இதன் பொருள்

(a) காபன் அணு 3. (ஈதல்) பங்கீட்டுவது வலுப்பிணைப்புக் களை உண்டாக்கும்

(b) ஒவ்வொரு காபன் அணிவின் பல் அணுக்களில் எண்ணிக்கை

(c) காபனில் ஒட்சியேற்ற நிலை 3

(d) ஒவ்வொரு காபன் அணுவிலும் மூன்று வெளியோட்டு இலத்திரன்கள் உள.

கேள்வி 99—105 வரை சுலபமாக்கப்பட்டு (தாண்டல் மூலகங்களை தவிர்த்து) கீழே தரப்பட்டுள்ள ஆவர்த்தன அட்டவணையுடன் தொடர்பு உடையவை.

கூட்டம்

| ஆவர்த்தனம் | i | ii | iii | iv | v | vi | vii | o |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |
| 2 | a | | | | | l | o | |
| 3 | b | f | g | i | k | m | p | r |
| 4 | c | | h | | | n | q | s |
| 5 | d | | | | | | | t |
| 6 | e | | | j | | | | u |

**99.** அதிகம் கூடிய அடர்த்தியுள்ள மூலகம்

(a) a (b) c (c) h (d) j (e) u

**100.** மின் நேர்த்தன்மை கூடிய மூலகம்

(a) a (b) e (c) h (d) i (e) o

**101.** வன்மையான அமில ஒட்சைட்டை உண்டாக்கும் மூன்றுவது ஆவர்த்தன மூலகம்

(a) g (b) i (c) k (d) m (e) p

**102.** எந்த மூலகத்தின் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று பிணைப்பை உண்டாக்கும் தன்மை குறைவானது

(a) c (b) h (c) n (d) q (e) s



**103.** எச்சோடி மூலகங்கள் அயன் தன்மை கூடிய சேர்வையை உண்டாக்கும்

(a) e+p (b) a+q (c) b+m (d) f+m (e) b+q

**104.** எந்த மூலகம் கொதிநிலைத்தானம் உயர்ந்தது

(a) l (b) n (c) p (d) r (e) u

**105.** பௌதீக இரசாயன இயல்புகளில் ஒப்பு கூடிய மூலகங்கள் எவையாக இருக்கலாம்

(a) a & b (b) a & f (c) d & c (d) i & j (e) a & p

**106.** M என்ற மூலகத்தின் இரண்டாம் அயனுக்கச் சக்தியைப் பின்வருவனவற்றுள் எவ்வசனம் சரியாகக் குறிப்பிடுகின்றது

(a) ஒரு மூல் M அணுக்களிலிருந்து 2 மூல் இலத்திரன்களை விலக்குவதற்கு வேண்டிய சக்தி

(b) ஒரு மூல் $M^{+}$ அயன்களிலிருந்து 1 மூல் இலத்திரன்களை விலக்குவதற்கு வேண்டிய சக்தி

(c) ஒரு மூல் $M^{2+}$ அயன்களிலிருந்து 1 மூல் இலத்திரன்களை விலக்குவதற்கு வேண்டிய சக்தி

(d) ஒரு மூல் $M^{+}$ அயன்களுக்கு 1 மூல் இலத்திரன்களைச் சேர்க்கும்போது உபயோகிக்கப்படும் சக்தி

(e) ஒரு மூல $M^{2+}$ அயன்களுக்கு 1 மூல் இலத்திரன்களைச் சேர்க்கும்போது உபயோகிக்கப்படும் சக்தி.

**107.** பின்வருவனவற்றுள் எக்குணுதிசயம் அணு எண்ணுடன் ஆவர்த்தனத் தொடரில் மாறுபடாது

(a) முதல் அயனுக்கற் சக்தி (b) அணுக்கனவளவு

(c) அணு வெப்பம் (d) ஆவியாக்கல் மறைவெப்பம்

(e) ஆகக்கூடிய ஒட்சியேற்ற எண்.

**108.** பின்வருவனவற்றுள் எதற்கு மிகவும் கூடிய அயனுக்கச் சக்திப் பெறுமானம் உண்டு.

(a) கந்தகம் (b) மக்னீசியம் (c) ஆகன்

(d) சோடியம் (e) அயோடீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**109.** ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக முதல் அயனுக்கற் சத்தி கூடுவதற்குக் காரணம்

(a) கூட்டப்படும் போது ஒவ்வொரு இலத்திரன்களும் கூடிய சத்திப்படிகளில் இருத்தல்

(b) வலுவளவு ஓடுகள் நிரப்பப்பட்டபோது நிலையானவையாக இருத்தல்

(c) ஆவர்த்தனத்தில் அணு ஆரை கூடுதல்

(d) சேகரிக்கப்படும் ஒவ்வொரு இலத்திரன்களும் இருக்கும் இலத்திரன்களினுல் எதிர்க்கப்படல்

(e)✓ ஆவர்த்தனத்தில் கருஏற்றம் கூடிக் கொண்டு போதல்.

**110.** பின்வருவனவற்றுள் எக்கூட்டத்திலுள்ள மூலகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நடு நிலையான ஒரு அணுவிற்கு ஒரு இலத்திரனைச் சேர்க்கும்போது அதிக அளவு சக்தி வெளிவிடப்படும்

(a) I A (b) II A (c) III A (d) IV B (e)✓ VI B

**111.** ஒரு மூலகத்தின், முதல், இரண்டாம், மூன்றும், நான்காம் இலோ அயனுக்கச் சக்திகள் முறையே 215, 420, 3560, 5030 கலறி கி. அணு$^{-1}$ ஆயின் அம் மூலகம் பின்வருவனவற்றுள் எக் கூட்டத்தைச் சேர்ந்தது

(a) I A (b)✓ II A (c) III A (d) IV B (e) VI B

**112.** ஒரு மூலக்கூறு முனைவுள்ளதாக இருக்கும் எப்போது எனின்

(a) அதில் இருக்கும் அணுக்களின் எண்ணிக்கை ஒற்றை எண்களாகும்போது

(b)✓ அதில் இருக்கும் அணுக்களுக்கிடையில் எலத்திரன் கவரும் தன்மை வித்தியாசம் இருக்கும்போது

(c) அயன்கள் உள்ளதாக இருக்கும்போது

(d) மின் மண்டலத்தில் வைக்கப்படும்போது விரும்பிய திசையை பெறும்போது

(e) அவற்றுக்கிடையில் ஒரு மின்மண்டலம் இருக்கும்போது



**113.** மகனீசியம் அலுமினியத்திலும் மின்னேர்த்தன்மை கூடிய உலோகமாக இருந்தும், அலுமினியம் வன்மையான காரக்கரைசல்களில் இருந்து மகனீசியத்திலும் சுலபமாக $H_2$ வை விலக்கும், ஏனெனில்,

(a) மகனீசியத்தின் ஐதரசன் மேலழுத்தம் மிகவும் அதிகம்

(b) $Mg^{2+}$ அயன்களின் நேரேற்றச் சக்தி $Al^{3+}$ அயன்களின் நேரேற்றச் சக்தியிலும் குறைவு

(c) Al தனக்கு தான் ஊக்கியாக இருத்தல்

(d)✓ அலுமினியத்தின் ஒட்சைட்டும் ஐதரொட்சைட்டும் வன்காரங்களில் கரையக் கூடியவை மகனீசியத்தின் ஒட்சைட்டும் ஐதரொட்சைட்டும் கரையமாட்டா

(e) மகனீசியம் ஐதரொட்சைட்டு அலுமினியம் ஐதரொட்சைட்டிலும் பார்க்க நீரில் கூடுதலாக கரையும்.

**114.** கீழ் தரப்பட்ட தரவுகள் A, B, C, D என்னும் உலோக மூலகங்களின் தன்மையைத் தொடர்பு படுத்துகின்றன

$A^{2+}$ (நீர்) + B (திண்) ⟶ A (திண்) + $B^{2+}$ (நீர்)

A (திண்) + $C^{2+}$ (நீர்) ⟶ $A^{2+}$ (நீர்) + C (திண்)

B (திண்) + $D^{2+}$ (நீர்) ⟶ (தாக்கமில்லை)

பின்வருவனவற்றுள் எது இவ்வயன்களின் இலத்திரன் ஏற்கும் தன்மையை இறங்கு வரிசைப்படி தருகிறது?

(a)✓ $C^{2+}$, $A^{2+}$, $B^{2+}$, $D^{2+}$ (b) $A^{2+}$, $B^{2+}$, $D^{2+}$, $C^{2+}$

(c) $D^{2+}$, $B^{2+}$, $A^{2+}$, $C^{2+}$ (d) $D^{2+}$, $C^{2+}$, $A^{2-}$, $B^{2+}$

(e) $B^{2+}$, $C^{2+}$, $A^{2+}$, $D^{2+}$.

**115.** ஒரு அணுவின் விட்டம்

(a) $10^{-4}$ சமீ (b) $10^{-6}$ சமீ (c)✓ $10^{-8}$ சமீ

(d) $10^{-10}$ சமீ (e) $10^{-13}$ சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**116.** அணுவின் திணிவில் அதிமுக்கிய பங்கெடுப்பது பின்வரும் துணிக்கைகளில் எது

(a) இலத்திரன் (b)✓ புரோத்திரன் (c) நியூத்திறேனு
(d) மீசோன் (e) போசித்தன்

**117.** ஒரு மூலகத்தின் வெளியோட்டின் இலத்திரநிலையமைபபு $S^2 p^3$ எனின் மூலகத்தின் வலுவளவு

(a) 2 மட்டும் (b) 3 மட்டும் (c) 2 அல்லது 3
(d)✓ 3 அல்லது 5 (e) 5 மட்டும்.

**118.** அல்பா துணிக்கை

(a) ஈலியம் அணு (b) ஈலியத்தின் கரு (c) ஐதரசன் அணு
(d)✓ ஐநரசன் கரு (e) இலத்திரன்.

**119.** மூலகமொன்றின் அயனுக்கற்சத்திப் பெறுமானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலத்திரன் | 1ஆம் | 2ஆம் | 3ஆம் | 4ஆம் | 5ஆம் | 6ஆம் | 7ஆம் |
|---|---|---|---|---|---|---|---|
| அயனுக். சத்திev | 5·98 | 18·82 | 28·44 | 119·96 | 153·77 | 190·42 | 249·92 |

இம் மூலகத்தின் அணு எண் பெரும்பாலும்

(a) 24 (b)✓ 13 (c) 32 (d) 21 (e) 12.

**120.** $^{1}_{0}n + ^{235}_{92}U \longrightarrow ^{137}_{56}Ba + Z$

Z ஆனது உறுதியற்ற நிலையில் α துணிக்கையை இழந்தது. Y என்னும் மூலகமாக மாறுமாயின் அதனை மேல்வருவனவற்றுள் எதனால் குறிக்கலாம்?

(a) $^{137}_{56}Y$ (b) $^{4}_{2}Y$ (c) $^{99}_{36}Y$ (d) $^{1}_{0}Y$ (e)✓ $^{95}_{34}Y$

**121.**

| | | | | |
|---|---|---|---|---|
| $A^+$ | 2 | 8 | 1 | |
| $B^{3+}$ | 2 | 8 | 8 | 1 |
| C | 2 | 8 | 8 | |
| $D^{3+}$ | 2 | 8 | 13 | |
| E | 2 | 8 | 3 | 2 |
| F | 2 | 8 | 8 | |



மேற்கூறப்பட்ட அட்டவணையில் ஒத்த இயல்புடைய மூலகத் தொகுதி பின்வருவனவற்றுள் எதுவாகும்?

(a)✓ B உம் E உம்; A யும் F உம் (b) A யும் C உம்; D உம் F உம்
(c) C உம் E உம்; B உம் F உம் (d) D உம் F உம்; A உம் B உம்
(e) E உம் F உம்; A உம் D உம்.

**122.** ஒரு நிலையான மின்வலுப்பிணைப்புச்சேர்வையை உண்டாக்க ஒவ்வாத இயல்பு

(a) கற்றயன் பெரிதாயிருத்தல் (b) அனயன் சிறிதாயிருத்தல்
(c) கற்றயனின்மூலகத்தின் அயனுக்கச்சத்தி குறைவாகவிருத்தல்
(d)✓ கற்றயனின் மூலகத்தின் அயனுக்கச்சத்தி பெரிதாயிருத்தல்
(e) அனயனின் மூலகத்தின் மின்னெதிர்த் தன்மை பெரிதாயிருத்தல்.

**123.** $PCl_5$ என்னும் சேர்வையில் பொசுபரசு அணு $\left[^{31}_{15}P\right]$ வின் ஈற்றொழுக்கின் இலத்திரநிலையமைப்பை பின்வருவனவற்றுள் எது மிகத் திருத்தமாகக் காட்டுகிறது?

**124.** மூலகம் M, $M^{++}$ என்ற அயனை உண்டாக்குகிறது.

பின்வருவனவற்றுள் M க்கும் $M^{++}$க்கும் சமனுய் இருக்கக்கூடியவை

(a) கனவளவு (b) இலத்திரன் நாட்டம்
(c)✓ கருவேற்றம் (d) திணிவு

**125.** 109° 28′ இலும் கூடிய பிணைப்புக் கோணத்தை உடைய சேர்வை எது?

(a) $SO_2$ (b) $CH_4$ (c) $H_2O$ (d) $NCl_3$ (e)✓ $HgCl_2$

**126.** A, B, C, D, E ஆகியன ஆவர்த்தன அட்டவணையிலுள்ள ஒரே ஆவர்த்தனத்தில் அடுததுவரும் 5 மூலகங்களாகும். A, C ஆகிய மூலகங்கள் முறையே $A_2O_3$ என்னும் சூத்திரங்களையுடைய ஒட்சைட்டுகளை உண்டாக்குகின்றன. C ஆனது ஐதரசனுடன் $CH_3$ என்னும் சேர்வையைத் தருகின்றது. E யின் மிக உறுதியான அயன்

(a)✓ $E^-$ (b) $E^+$ (c) $E^{--}$ (d) $E^{++}$ (e) $E^{3+}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 2

# ஒட்சியேற்றம் தாழ்த்தல்

1. பின்வரும் மூலகங்களுக்கு, காட்டப்பட்டபடி அட்டவணையைப் பூர்த்திசெய்யும்போது, மூலகங்கள் உண்டாக்கும், உயர் ஒட்சைட்டின் சூத்திரத்தை தந்து, அவற்றின் ஒட்சியேற்ற நிலை (அல்லது வலுவளவு)யைக் குறிப்பிட்டு, ஒட்சைட்டுக்கள், அமில, ஈரியல்புளவை அல்லது காரமானவை என வகுக்குக. Al, Ar, Cl, Mg, P, Si, Na, S.

2. ''நீர் சேர் சோடியம் குளோறைட்டின் மின்பகுத்தலில், ஒட்சியேற்றம், தாழ்த்தல், அயன் சமநிலையை விலக்கல் போன்றவை நிகழ்கின்றன'' என்ற கூற்றை கவனமாக விளக்குக.

வேறுபட்ட நிபந்தனைகளின் கீழ் இம்முறை எவ்வாறு

(a) சோடியம் ஐதரொட்சைட்டு

(b) சோடியம் ஐப்போ குளோரைட்டு

(c) சோடியம் குளோறேற்று ஆகியவற்றைப் பகும்படியாக தயாரிப்பதற்கு, மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது என குறிப்பிடுக.

3. ''ஒட்சியேற்றல் தாழ்த்தல் தாக்கங்களின் அடிப்படை இலெத்திறன் மாற்றம்'' என்பதைப் பற்றி என்ன விளங்குகிறீர்; பின்வரும் தாக்கு பொருட்களுடன் தொடர்பு செய்து அக்கூற்றுக்களை விளக்குக.

(a) ஐதரசன் (b) ஐதரசன் பேரொட்சைட்டு

(c) கந்தக ஈரொட்சைட்டு (d) அமிலம் சேர் $NaNO_3$

ஒவ்வொன்றின் நடைபெறும் வெவ்வேறு வகையான தாக்கங்களை விளக்குவதற்கு, ஒவ்வொன்றிலும் இரு தாக்கங்களைத் தருக.

# ஒட்சியேற்றம் தாழ்த்தல் (கட்டுமூலங்கள்)

1. பின்வருவனவற்றில் எதில் நைதரசன் அதி உயர் ஒட்சியேற்ற எண்ணை காட்டுகிறது

7. ஒரேமாதிரியான இரும்பு ஆணிகள் படத்தில் காட்டியதுபோல் இணைக்கப்பட்டிருக்கின்றன. எந்த முகவையில் துருப்பிடித்தல் வேகம் கூடியதாக இருக்கும்.

படம்! 5

கேள்விகள் 8—9 க்கும் தாண்டல் மூலகங்களுக்கு உரியன அல்லாத குணுதிசயங்களை தெரிவு செய்க.

8. (a) இடைவெளிக்குரிய சேர்வைகள்
(b) பராகாந்த தன்மை உள்ள அயன்கள்
(c) ஊக்கியாக தொழிற்படும் தன்மை
(d) மாறு வெப்பநிலை
(e) தகுங்கும் தன்மையும் நீட்டல் தன்மையும்

9. (a) பல்வேறு வலுவளவுகளை அடைதல்
(b) நிரம்பாத ஒழுக்குகள்
(c) சிறந்த மின் கடத்திகள்
(d) நிறமுள்ள சேர்வைகள்
(e) ஒரேமாதிரியான அணு நிறமாலை

கேள்விகள் 10 தொடங்கி 15 வரை இக் கேள்விகளுக்கு உரிய உலோகங்களைப் பின்வரும் அட்டவணையில் இருந்து செய்க.

(a) Mn (b) Fe (c) Ni (d) Cu (e) Zn

10. எது சூத்திரம் $X_2O_7$ உள்ள ஒட்சைட்டை உண்டாக்கும்?



11. எது நீரேற்றப்பட்ட நிறமற்ற அயன்களை உண்டாக்கும்?

12. எது மென்சிகப்பு நிறமான நீரேற்றப்பட்ட அயன்களை உண்டாக்கும்?

13. மாசரீனின் (செயற்கை வெண்ணெய்) தயாரித்தலில் எது ஊக்கியாக உபயோகிக்கப்படுவது.

14. எது வெண்ணிறமான சல்பைட்டை உண்டாக்கும்.

15. எவ்வுலோகத்திற்கு ஆகக் கூடியளவு ஒட்சியேற்ற நிலையுண்டு.

16. இரசம் (ii) குளோரைட்டுக் கரைசலினுள் அதிக அளவு பொற்றுசியம் அயோடைட்டுக் கரைசலைச் சேர்க்கும்போது உண்டாகும் இறுதி விளைபொருளைக் குறிப்பிடும் சூத்திரம்
(a) $HgI$ (b) $HgI_2$ (c) $KHgI_2$ (d) $K_2HgI_3$
(e) $K_2HgI_4$

17. பின்வருவனவற்றுள் எவ்வுப்புடன் குரோமேற்றுக்கள் சமபகுதியாகும்.
(a) சல்பேற்றுக்கள் (b) காபனேற்றுக்கள்
(c) இருகுரோமேற்றுக்கள் (d) பேர்மாங்கனேற்றுக்கள்
(e) குளோரேற்றுக்கள்.

18. குரோமியம் காட்டும் முக்கியமான ஒட்சியேற்ற நிலைகள்
(a) +1, +2; +3 (b) +2; +4; +6 (c) +2, +3 +6
(d) +1; +3; +6 (e) +2; +3; +7.

19. பின்வருவனவற்றுள் எம்மூலகம் துருப்பிடியா உருக்கில் கூடியளவு விகிதாசாரத்தில் காணப்படுகின்றது.
(a) கல்சியம் (b) காபன் (c) குரோமியம்
(d) செம்பு (e) சிலிக்கன்.

20. பாதுகாக்கப்படாட இரும்பு துருப்பிடித்தல் சாதாரணமாக அலுமினியத்திலும் கூடியதாகக் காணப்படுகின்றது ஏனெனில்,
(a) இரும் மின்னேர்த் தன்மை கூடியது என்பதால்
(b) அலுமினியம் ஒட்சிசன் நாட்டம் குறைவானது என்பதால்
(c) அலுமினியம் ஈரியல்பு உடையது என்பதால்
(d) இரும்பு மூன்று வெவ்வேறு விதமான ஒட்சைட்டுக்களை உண்டாக்கும் என்பதால்
(e) நீரேற்றப்பட்ட இரும்பு ஒட்சைட்டுப்படை மறுதுருவங்கள் உள்ளது என்பதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 தொடங்கி 23 வரை

$$[Cu(H_2O)_4]^{2+} + 4NH_3 \leftrightharpoons [Cu(NH_3)_4]^{2+} + 4H_2O$$

மேலே காட்டப்பட்டுள்ள சமநிலை செம்பு (ii) சல்பேற்றுக் கரைசலினுள் அமோனியாவின் நீர்க்கரைசலைச் சேர்க்கும்போது உண்டாகியது (நீர், அமின்சிக்கல் சேர்வைகளுக்கிடையில்.)

21. குறிப்பிடத்தக்களவு நீரினால் ஐதாக்கல், ஆரம்ப நிலைநிறத்தைக் கொண்டு வராமல், கடும் நீலநிறம் நிலையாக இருந்தது எனின் பின்வருவனவற்றுள் எப்பெறுதி இச் சமநிலைக்குரிய சமநிலை மாறியாகும்.

(a) $10^{-7}$ (b $10^{-1}$ (c) 1 (d) 10 (e) $10^7$

22. இவ்விரு சிக்கல் சேர்வைகளிலும் செம்பு அணுவுடன் (அணுஎண் 29) இணைந்த மொத்த இலத்திரன்களின் எண்ணிக்கை சமனாயின் அது பின்வருவனவற்றுள் எது.

(a) 27 (b) 29 (c) 33 (d) 35 (e) 37

23. பின்வரும் பொதுத்தாக்கவகையில் இத்தாக்கம் எதைச் சேர்ந்தது

(a) கூட்டல்தாக்கம் (b) மாறுவிகிதா சாரமாக்கல்
(c) தாழ்த்து ஒட்சியேற்றல் (d) பிரதியீடு செய்தல்
(e) சமபகுதியமாக்கல்

## கட்டுரைவினாக்கள்

1. இரும்பிலிருந்து தொடங்கி எவ்வாறு பின்வருந் தூய மாதிரிச் சேர்வைகளைப் பெறலாம்.

(அ) நீரற்ற பெரிக்குக் குளோரைட்டு
(ஆ) நீரற்ற பெரசுக் குளோரைட்டு
(இ) பெரிக்குச் சல்பைட்டு
(ஈ) பெரசமோனியஞ் சல்பேற்று அறுவைதரேற்று.

பொற்றாசியம் பெரோசயனைட்டின் முக்கிய இயல்புகள் யாவை?

2. இரும்பைத் தொடங்கு பொருளாக உபயோகித்து, எவ்வாறு (அ) நீரற்ற பெரிக்குக் குளோரைட்டு (ஆ) பெரசமோனியஞ் சல்பேற்றுப்பளிங்கு என்பவற்றைத் தயாரிக்கலாம்? புறக்காட்



டியை உபயோகித்து, பொற்றாசியமிருகுரோமேற்று பெரசமோனியஞ் சல்பேற்று நியமிப்பில் சம்பந்தப்பட்ட இரசாயனத் தாக்கங்களை விளக்குக.

3. இயற்கையாகக் காணப்படும் இரும்புச் சேர்வைகளில் இரண்டினது பெயரையும் அவற்றின் சூத்திரத்தையுந் தருக.

ஓர் இரும்புத் துண்டைப் பின்வருவனவற்றுள் அமிழ்த்திய போது ஏற்படும் மாற்றங்களை விளக்குக

(அ) வன்மையான நைத்திரிக் கமிலம்
(ஆ) ஒரு செப்புச் சல்பேற்றுக் கரைசல்
(இ) ஐதரக் குளோரிக்கமிலங்கொண்ட ஒரு வன்மையான பெரிக்குக் குளோரைட்டுக் கரைசல்.

ஆய்வுகூடத்திற் பெரசுச் சல்பேற்றின் உபயோகத்தைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்க.

4. மேல்வருவனவற்றின் காரணங்களை விளக்குக.

(அ) இரும்பு ஒரு தாண்டல் மூலகமெனப்படும்
(ஆ) சிங்கின் பூச்சினால் இரும்பை அரிப்பிலிருந்து பாதுகாக்கலாம்
(இ) இரும்பைச் செறிந்த நைத்திரிக்கமிலத்துடன் தொழிற்படவிட்டால் தாக்கமடையாது.

மேல்வருவனவற்றுடன் பெரிக்குப் படிகாரக் கரைசலைத் தொழிற்படவிட்டால் என்ன நேரிடுமென்பதை விபரிக்க.

(அ) அமோனியங் கந்தகச் சயனேற்று
(ஆ) ஐதரசன் சல்பைட்டு
(இ) பொற்றாசியம் பெரோசயனைட்டு

5. உலோக இரும்பிலிருந்து பெரசுச் சல்பேற்றுத் தயாரித்தலை விவரிக்க. எவ்வாறு பெரசுச் சல்பேற்று நீர்க்கரைசல் பின்வருவனவற்றுடன் தாக்கமுறும்.

(அ) நைத்திரிக்கமிலம் (ஆ) நைத்திரிக் கொட்சைட்டு
(இ) பொற்றாசியங் காபனேற்று

6. (அ) குரோமியம் காட்டும் தலைமை வலுவளவுகளைத் தருக. ஒவ்வொரு தலைமை வலுவளவுகளையும் விளக்க இக்கேள்வியின் பகுதி (ஆ) விலும் (இ) இலும் குறிப்பிடப்பட்ட சேர்வைகளைத் தவிர்த்து ஏனைய இரு சேர்வைகளையும் அவற்றின் சூத்திரங்களையும் குறிப்பிடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) களவளவறி பகுப்பில் குரேரமேற்றுக்களின் அல்லது இரு குரோமேற்றுக்களின் உபயோகத்தை மூன்று எடுத்துக்காட் காட்டுகளுடன் விளக்குக.

(இ) பொற்றுசியமிருகுரேமேற்றை நீரற்ற குரோமிய முக்கு ளோரைட்டாக மாற்றுவதற்குத் தேவையான சமன்பாடு களைக் குறிக்க.

7. மேல்வரும் நீரற்ற குளோரைட்டுகளை முறையே அவற்றின் உலோ கத்திலிருந்து எவ்வாறு ஆக்குவீர் என்பதை நிபந்தனைகள் கூறிச் சமன்பாடுகளாற் காட்டுக.

(அ) செம்பு $(I)$ குளோரைட்டு

(ஆ) வெள்ளீயம் $(II)$ குளோரைட்டு

(இ) இரும்பு $(III)$ குளோரைட்டு

இக்குளோரைட்டுகளின் எவ்வியல்பைக்கொண்டு அவற்றின் பங்கீட்டுவலுத் தன்மையைக் காட்டுவீர்?

இக்குளோரைட்டுகளிலிருந்து அதே உலோகத்தினது இன் னொரு குளோரைட்டையும் ஆக்குவதற்கு ஒவ்வொரு சந் சந்தர்ப்பத்திலும் ஒரு முறையை விபரிக்க.

8, (a) $B$ ஒரு நீலநிறக் கரைசல், அமோனியம் ஐதரொட்சைட்டுச் சேர்க்கப்படும்போது மென்நீலநிறமான வீழ்படிவு தோன் றியது. அவ்வீழ்படிவு அதிக அளவு அமோனியாவிற் கரைந்து கடும்நீல நிறமான கரைசலைக் கொடுத்தது.

$B$ பொற்றுசியம் அயோடைட்டுடனும் அல்லது பேரியம் குளோரைட்டுடனும் வீழ்படிவைக் கொடுத்தது. இவ்விரு வீழ்படிவுகளும் ஐதான ஐதரோக் குளோரிக் கமிலத்திற் கரையாமல் இருந்தன.

(b) $C$ஐ மாங்கனீசு இரு ஒட்சைட்டுசெறி. சல்பூரிக் அமிலத் துடன் வன்மையாகச் சூடாக்கப் படும்போது எரிக்கும் (மணம்) தன்மையுள்ள வாயுவை கொடுத்தது. அவ்வாயு பாசிச்சாயத்தாளை வெளிறச்செய்தது. நீர்சேர் ஸ்தனசுக் குளோரைட்டை $C$யின் நீர் கரைசலினுள் சேர்க்கும்போது $C$ ஒரு வெண்ணிறமான வீழ்படிவைக் கொடுத்தது. அவ் வீழ்படிவு நேரம் செல்லச் செல்ல நரைநிறமாக மாறியது.

9. நாகத்தை நாக சல்பைட்டில் இருந்து பரும்படியாகத் தயாரிக்கும் இரு முறைகளை தருக. ஒவ்வொரு முறையிலும் உள்ள அடிப்



படைத் தத்துவங்களை ஆராய்க. நாகம் (a) $HNO_3$ (b) $NaOH$ ஆகியவற்றுடன் எவ்வெவ் நிபந்தனையின் கீழ் எவ்வெவ்வாறு தாக் கமுறும் என்பதைக் கூறுக. இரும்பைப் பாதுகாப்பதற்காக கல் வனைசுப் படுத்துதல் வெள்ளீயம் பூசுவதிலும் பார்க்க எம்முறை யிற் சிறந்தது எனக் கூறி காரணங்களையும் கூறுக.

10. $CuO$, அமோனியக் கரைசல், ஐதான $H_2SO_4$ ஆகியவற்றைத் தவிர்ந்த இரசாயனப் பொருட்கள் ஏதும் தரப்படவில்லை. ஆனல் சாதாரண கரைப்பானும், காட்டிகளும் தரப்பட்டுள்ளன. இவற் றைக்கொண்டு எவ்வாறு ஐந்து வெவ்வேறு விதமான படிகார உப்புக்களைப் பெறலாம் என்பதைச் சமன்பாடுகள் தந்து குறிப் பிடுக.

11. (அ) மின்பகு கரைசல்களில் ஏற்றத் துணிக்கைகள் இருக்கின் றன என்பதற்கான உமது சான்றைச் சுருக்கமாகக் கூறுக.

(ஆ) செப்பு மின்வாய்களைப் பயன்படுத்தி, செப்புச் சல்பேற்றுக் கரைசலுக்கூடாக 0·1 அம்பியர் மின்ஞேட்டம் 10 மணித் தியாலங்களுக்குச் செலுத்தப்பட்டது. செம்பின் மின்னிர சாயனச் சமவலு 1·18576 கி./அம்பியர் - மணி எனக் கொண்டு. படிவடைந்த செம்பின் நிறையைக் கணிக்க. செப்பு முலாமிடலில், சிக்கல் செப்பு உப்புக்கள் ஏன் பயன் படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக.

(இ) ஒரு கிராமயன் $[Cu(CN)_4]^{3-}$ ஐ உண்டாக்குவதில், 1 கிரா மயன் $Cu^{2+}$க்கு, 5 கிராமயன் $CN^-$ஐத் தேவைப்படுகிற தெனக் காட்டுக.

குப்பிரசயனின் செறிவை $10^{-13}$ மூல/லீற்றர் ஆக்குவதற்கு 1000 மி. லீ. 0·02 $MCuSO_4$ கரைசலுக்குச் சேர்க்கப்பட வேண்டிய $CN^-$ அயன்களின் நிறையைக் கணிக்க.

[$Cu(CN)_4{}^{3-}$ அயனின் உறுதியின்மை மாறிலி $5 \times 10^{-28}$; $C = 12$; $N = 14$].

12, குரோமியம், செம்பு, இரும்பு, மாங்கனிசு என்பவற்றிற்கு பின் வருவனவற்றிற்கு அட்டவணை தயாரிக்க.

(1) ஆவர்த்தன அட்டவணையில் உள்ள கூட்டம்

(2) இலத்திரநிலையமைப்பு ($1S^2$ $2S^2$... என்ற வடிவில்

(3) பொதுவலுவளவு (வலுவளவுகள்) பெயர். தரப்பட்ட சேர் வையின் சூத்திரம், அதன் நிறம் உ-ம். ($CuSO_4$ குப்பிறிக் சல்பேற்று நீரேற்றப்பட்டது நீல நிறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) மூலகம் அல்லது அதன் சேர்வை ஊக்கியாக உபயோகிக்கப்படும் தாக்கம், தாக்குபொருள், விளைபொருள் ஆகியன வற்றின் சமன்பாட்டுடன்.

13. ஊது உலையில் இரும்பைத் தயாரிக்கும்போது உபயோகிக்கப்படும் (நடைபெறும்) இரசாயன அடிப்படைத் தத்துவங்களையும், பின்பு இரும்பை உருக்காக மாற்றும்போது நடைபெறும் தாக்கங்களையும் குறிப்பிடுக.

உருக்கினால் ஆக்கப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பதற்கு நாக மூலம் பூசப்படுகின்றது. இவ்வாறு நாகமூலாம் பூசித் துருப்பிடித்தல் தடைசெய்யப்படும்போது உபயோகிக்கப்படும் அடிப்படைத் தத்துவங்கள் யாவை?

## அலகு: 9

# பலவினப் பயிற்சி 9 A

1. (a) ''அணு எண்'' என்பதனால் யாது விளங்குகிறீர்? இரசாயன மூலகங்களைப் பாகுபடுத்துவதற்குரிய ''அணு நிறையிலும்'' பார்க்க ''அணு எண்'' கூடிய உபயோகமுள்ளதெனக் கருதப் படுவதற்கான காரணத்தை விளக்குக. மேல்வரும் தரவைக் கொண்டு எவற்றை உய்த்தறிவீர்?

| மூலகம் | ஐதரசன் | ஆகன் | பொற்றுசியம் |
|---|---|---|---|
| அணுஎண் | 1 | 18 | 19 |
| அணுநிறை | 1·008 | 39·94 | 39·10 |

b பின்வருந் தொடங்கு பொருள்களை உபயோகித்து ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு கைத்தொழிலாக்க முறையைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்க:-

(அ) சோடியங்குளோரைட்டும், அமோனியாவும், காபனீரொட்சைட்டும்;

(ஆ) கல்சிய மைதரொட்சைட்டும், குளோரீனும்;

(இ) சோடியமயடேற்றும், சோடிய மிருசல்பைற்றும்.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு முறைகளிலும் பெற்ற விளைவின் மிக முக்கியமான உபயோகங்களைக் காட்டுக.

2. மூன்றும் ஆவர்த்தனத்தில் உள்ள ஐதரைட்டுக்கள் கீழே தரப் பட்டுள்ளன.

$NaH$, $MgH_2$, $(AlH_3)_x$, $SiH_4$, $PH_3$, $H_2S$, $HCl$. இவற்றின்

(i) கார இயல்புகளின் ஒழுங்குவரிசை ஏறுவரிசைப்படியும்,

(ii) அமில இயல்பின் ஒழுங்குவரிசை ஏறுவரிசைப்படியும்,

(iii) தாழ்த்தும் இயல்பின் ஒழுங்குவரிசை ஏறுவரிசைப்படியும் தருக.

ஒவ்வொன்றிற்கும் உமது காரணத்தை அணு அமைப்பின் அடிப்படையில் தருக.

3. பின்வருவனவற்றைப் பற்றிக் குறிப்புக் கூறுக.

சோடிச் சேர்வைகளுக்கு இடையே இருக்கும்.

(a) ஒற்றுமைகள்

(b) வேற்றுமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) கல்சியம் காபனேற்று, சோடியம் நைத்திறேற்று

(ii) காபனிரு ஒட்சைட்டு, நைத்திரசு ஒட்சைட்டு

(iii) நீரேற்றப்பட்ட செம்பு (ii) சல்பேற்று, நீரேற்றப்பட்ட நிக்கல் (ii) சல்பேற்று

4. சொல்லப்பட்ட சேர்வைகளுடன் தொடங்கி; பின்வரும் பொருட்களை ஆக்குவதற்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு முறை தருக.

(i) $KBrO_3$; $K_2CO_3$ உடனும் $KBr$ உடனும் தொடங்கி; மின் பகுப்பைப் பயன்படுத்தாமல்

(ii) $N_2$; நைதரசனைக் கொண்டுள்ள சேர்வையாக $HNO_3$ஐ மட்டும் கொண்டு தொடங்கி.

5. (a) (i) இசுத்தானசு அயன்களை, இசுத்தானிக் அயன்களாக அமில ஊடகத்தில் இருகுரோமேற்று அயன்களால் ஒட்சியேற்றுவதற்குரிய அயன் சமன்பாட்டை எழுதுக.

(ii) பொசு அயன்கள் உளபோது இசுதானசு அயன்களின ளவை கனவளவறிப் பகுப்புமூலம் துணிவதற்கான ஒரு முறையைக் கூறுக.

(iii) 10 கிராம் பொற்றுசிய மிருகுரோமேற்றை குரோமிய முக்குளோரைட்டாகத் தாழ்த்துவதற்குத் தேவையான இசுத்தானசுக் குளோரைட்டின் நிறையைக் கணிக்க.

(b) (அ) தூய சல்பூரிக்கமிலம் (நீரில்லாத) மாதிரிப்பொருளாக தரப்பட்டுள்ளது. ஒரு மூலக் கூறு சல்பூரிக் கமிலத்தில் (i) இரண்டு ஐதரொட்சில் கூட்டங்கள் (ii) இரண்டு மாற்றீடு செய்யத்தக்க ஐதரசன் அணுக்கள் இருப்ப தென்பதை எவ்வாறு காட்டுவீர்?

(ஆ) பின்வரும் மாற்றங்களை எவ்வாறு விளைவிக்கலாமெனப் பிரதான நிபந்தனைகளுடன் குறிப்பிடுக.

(i) $Ca_3(PO_4)_2 \rightarrow H_3PO_4$ (ii) $CaNCN \rightarrow KNO_2$

6. மின்பகுப்புக்குரிய கலத்துடன் (அ) மென்றகடுபாவித்து (ஆ) மென்றகடு பாவியாமல், சோடியங்குளோரைட்டிலிருந்து சோடியமைதரொட்சைட்டு தொழிற்துறையிற் செய்தலின் தத்துவங்கள் யாவை?

போட்சைட்டைத் தூய்தாக்கலில் எவ்வாறு சோடியமைதரொட்சைட்டு பாவிக்கப்படுகின்ற தென்பதையும் தூயபோட்சைட்டிலிருந்து அலுமினியம் எவ்வாறு தொழிற்துறையில் செய்யப்படுகின்ற தென்பதையும் விளக்குக.



7. பின்வருவனவற்றின் தொழில்முறைத் தயாரிப்புக்களைத் தருக.

(a) ஆக்கவாயு

(b) நீரவாயு

இவற்றின் தயாரிப்பின்போது அடிப்படையாக அமையும் பௌதிக-இரசாயனத் தத்துவங்களைக் குறிப்பிடுக. தொழில்முறை நுட்பங்கள் வேண்டியதில்லை. நீர்வாயுவின் சராசரி அமைப்புப் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஐதரசன் கனவளவின்படி | 50% |
| காபனோர் ஒட்சைட்டு கனவளவின்படி | 45% |
| தகனமாகமாட்டா வாயுக்கள் கனவளவின்படி | 5% |

ஐதரசன், காபனோர் ஒட்சைட்டு ஆகியனவற்றின் தகன வெப்பம் முறையே 68·3 கிகலரி மூல்$^{-1}$ (285 கி. யூல் மூல்$^{-1}$) உம் 67·7 கிகலரி மூல்$^{-1}$ (283 கியூல் மூல்$^{-1}$) உம் ஆகும். எனின் நீர் வாயுவின் கலறிப் பெறுதியை கிகலரியில் 100 லீற்றர் (நி. வெ. அ.) நிர்வாயுவிற்குக் கணிக்குக.

(கிறும் மூலக் கூற்றுக்கனவளவு நி. வெ. அ. = 22·4 லீற்றர்)

8. மேல் வருவனவற்றின் ஒவ்வொன்றினதிற்கும் இயற்கையாக (காணப்படும்) திகழும் இரு வடிவங்களின் சூத்திரங்களையும், பெயர்களையும் தருக.

(அ) கல்சியம் (ஆ) அலுமினியம் (இ) இரும்பு.

ஊது உலையைப் பாவித்து இரும்பைப் பிரித்தெடுப்பதில் உள்ளடக்கிய இரசாயனத் தாக்கங்களை ஆராய்க. அலுமினியத்தைப் பிரித்தெடுப்பதற்கு இம்மாதிரியான முறையை ஏன் கையாள முடியாதென விளக்குக.

9. (i) பின் வருவன ஒவ்வொன்றினையும் ஆக்குவதற்கு ஒரு முறையைக் குறிக்க.

(அ) நைற்றரிலுள்ள (Nitr) அயோடேற்றிலிருந்து தூய அயோடின்

(ஆ) மேக்கூரியிலிருந்து மேக்கூரசுக் குளோரைட்டு (மேக்கூரிக் குளோரைட்டு அற்ற)

(ii) குளோரீனிலிருந்து வெளிற்றுந் தூளைப் பெறுவதற்கு, ஒரு முறையைக் குறிப்பிடுக. (படங்கள் தேவையில்லை) வெளிற்றுந்தூள் மாதிரியொன்றில் கிடைக்கக் கூடிய குளோரீனைத் துணிவதற்கு ஒரு முறையைத் தருக. (பரிசோதனை முறை விபரங்களும், கணக்கிடுதலும் தேவையில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10\. (அ) மங்கனீசு காட்டும் இரு தலைமை வலுவளவுகளைத்தருக. ஒவ்வொரு தலைமை வலுவளவையும் விளக்க இரு சேர்வைகளையும் அவற்றின் சூத்திரங்களையும் குறிப்பிடுக.

(ஆ) கனவளவறிபகுப்பில், பொற்றாசியம் பேர்மங்கனேற்று உபயோகிக்கப்படும் மூன்று சந்தர்ப்பங்கள் பற்றி குறிப்புகள் எழுதுக.

(இ) பண்பறிபகுப்பில், மங்கனீசை உறுதிப்பாடு செய்வதற்கு நீர் உபயோகிக்கும் இரண்டு சோதனைகளின் இரசாயனத்தை ஆராய்க.

11\. மேல்வருவனவற்றை பெறுவதற்கு ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு முறையைப் பற்றி சுருக்கமாக விபரிக்க,

(அ) ஈயத்திலிருந்து வெள்ளீயம்,

(ஆ) உறைகளிக்கல்லிலிருந்து (சிச்சம்) பரிசுச் சாந்து.

(இ) கறியுப்பிலிருந்து தூய சோடியங்குளோரைட்டு,

(ஈ) சோடியத்திலிருந்து சோடியம் பேரொட்சைட்டு,

மேற்கூறப்பட்ட விளைவுகளில் எவையேனும் இரண்டின் கைத்தொழில் முக்கியத்துவத்தைக் காட்டுக.

12\. டியூரு அலுமின் ஒருகலப்பு உலோகம் அதில் முக்கியமாகக் காணப்படும் மூலகங்கள் அலுமினியமும் மக்னீசியமும் ஆகும் ஆனால் சிறிதளவு செம்பு. இரும்பு, நாகம் ஆகியனவும் உள்ளன.

(a) உமது அசேதன இரசாயனத்தின் அறிவைக்கொண்டு பின்வருவனவற்றிற்கு டியூரு அலுமினிலுள்ள அலுமினியத்தை தவிர்ந்த ஏனைய மூலகங்களை கண்டுபிடிப்பதற்கு ஒரு முறையையும்.

b) ஒரு மாதிரியில் இருக்கும் இரும்பு அல்லது செம்பின் அளவை (கனமாண) கணிப்பதற்கு ஒரு முறையையும் (திட்டமிடுக) கூறுக.

13\. பின்வருவன வற்றிற்கு விளக்கம் கூறுக.

(a) நீர்கொதிநிலை $100°$ ச ஆனால் $H_2S$ இன் கொதிநிலை $-63°$ச.

(b) தூயநீரை ஐதரேக் குளோரிக் அமிலக் கரைசலின் பகுதி வடிகட்டலின் மூலம் பெறமுடியாது.

(c) செம்பு (i) குளோரைட்டு நீரிலும் ஐதான ஐதரேக் குளோறிக் அமிலத்தில் கரையும்.



(d) மேர்க்கூரி (ii) சல்பைட்டு செறிந்த ஐதரேக் குளோறிக் அமிலத்திற் கரையாதது. ஆனால் செறிவான நைத்திறிக் அமிலத்தில் ஓரளவுக்குக் கரையக் கூடியதும், செறிவான நைத்திரிக் அமிலம், ஐதரேக் குளோறிக் அமிலம் கலந்த கலவையில் நன்றாகக கரையக் கூடியதும் ஆகும்.

14\. பின்வரும் தொடரில் உள்ளனவற்றை அவற்றின் இரசாயன, அல்லது பௌதிக குணதிசயங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக ஒளுங்கு படுத்துக. (திணிவையும் இரசாயனஅமைப்பையும் தவிர்ந்த ஏனைய குணதிசயங்கள்) ஒவ்வொரு தொடரிற்கும் தெரிவுசெய்த குணதிசயத்தை கூறி, தொடரில் அவற்றின் மாற்றத்தையும் ஆராய்க.

(a) $CH_3CO_2H.$ $HCl,$ $C_6H_5OH$

(b) $O_2,$ $SO_2:$ $He$ (c) $SiCl_4;$ $NaCl:$ $AlCl_3$

(d) $Na_2O;$ $ZnO;$ $MgO.$

15\. A கூட்டத்தில் இருக்கும் பொருட்களைத் தொடங்கு பொருளாக கொண்டு, B கூட்டத்தில் இருக்கும் சேர்வைகளை பெறுவதற்கு ஒருமுறையைக் குறிப்பிடுக.

| | A | B |
|---|---|---|
| (a) | $H_2,$ $N_2,$ $O_2$ | $NH_4NO_3$ |
| (b) | $H_2S,$ $O_2$ | கந்தகம் (S) |
| (c) | $CaCO_3,$ $C,$ $H_2O$ (நீர்) | அசற்றலீன் |
| (d) | $BaO,$ காற்று, $H_2SO_4$ | $H_2O_2$ |

அத்தியாவசியமான தாக்க நிபந்தனைகளைமட்டும் குறிப்பிடுக? உபயோகிக்கப்படும் தாக்கிகள் ஏதாவது இருப்பின் அவற்றையும் வெவ்வேறு படிமுறைகளில் உகந்தசமன்பாடுகளையும் தருக.

16 அலோகங்களுக்கும் நீருக்கும் அல்லது உலோகங்களுக்கும் நீருக்கும் இடையே நடைபெறும் தாக்கங்களால் உண்டாகும் சேர்வைகள் முறையே ஐதரசன் சேர்வையாகவோ, அல்லது ஐதரொட்சிச் சேர்வையாகவோ இருக்கும் எனவே இத்தாக்கங்கள் ''நீர்ப்பகுப்புக்கள்'' எனப்படும்.

(a) இக்கூற்றை நீருடன் அல்லது உகந்தது எனின், எரிசோடாவுடன் (i) குளோறீன் (ii) அயோடீன் (iii) பொசுப்பரசு (iv) சல்பர், இம்மூலகங்கள் ஈடுபடும் தாக்கத்துடனும் தொடர்புசெய்து ஆராய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(b) சில உலோகங்கள் நீருடன் அல்லது எரிசோடாவுடன் தாக்க முறக் கூடியவை. உ-ம். சோடியம் அலுமினியம், இத்தாக்கத்தை சுருக்கமாக விளக்குக. (தாக்கம் இருப்பின்) மேற்படி கூற்று மேற்படி தாக்கத்திற்கு எவ்வளவு தூரம் உபயோகிக்படலாம்.

17. பின்வரும் இருசேர்வைகள் உள்ள கலவையில் இருந்து முதலிற் குறிப்பிடப்பட்டுள்ளதை எவ்வாறு பிரித்து எடுப்பீர்.

(a) ஈயம், செம்பு

(b) அலுமினியம் ஐதரொட்சைட்டு + நாக ஐதரொட்சைட்டு

18. பின்வருவனவற்றில் இருந்து, இருவாயுக்கள் இணைந்து சேர்வைகளை உண்டாக்கும்போது ஒவ்வொன்றிலும் நடக்கும் நான்கு தாக்கங்களைத் தருக. குளோறீன், ஐதரசன், நைதரசன், ஒட்சிசன். தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொன்றிலும் என்ன நிபந்தனைகள் அனுகூலமாக இருக்கும் எனக் கூறுக.

(a) தாக்கத்தின் மிகக்கூடிய வேகத்தை

(b) இணைதலினால் உண்டாகும் மிகக்கூடியளவு விளைவை ஒவ்வொன்றிலும், உமது காரணங்களை வெளியிடுக.

[(N. B) = தொழில்முறைத் தயாரிப்புகள் வேண்டியதில்லை]

19. பின்வரும் மூலகங்களை அவற்றின் மின் இரசாயனத் தொடரில் ஒழுங்கு படுத்துக. அலுமீனியம், இரும்பு. மக்நீசியம், நாகம் இந் நான்கு மூலகங்களும் பின்வருவனவற்றுடன் நிகழ்த்தும் தாக்கங்களை, நிபந்தனைகளுடன் அட்டவணைகளுடன் அட்டவணை செய்க.

(a) ஒட்சிசன்

(b) குளோறீன்

(c) நீர்

(d) நைத்திரிக் அமிலம்

(e) ஐதான சல்பூரிக் அமிலம்

வேறுபாடுகள் இருந்தால் அவற்றைப் பற்றிக் குறிப்புக் கூறுக.

20. பின்வரும் சேர்வைகளைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்தபோது பின்வரும் தரவுகள் பெறப்பட்டன, அவற்றைக்கொண்டு, தாக்கத் தொடர்களை விபரிப்பதுடன், உகந்த இடங்களிற் சமன்பாடுகளையும் தருக.

(a) $A$ ஒரு வெண்ணிறமான திண்மம், நீரிற் கரையாதது. ஆனால் செறிந்த ஐதரோக்குளோறிக் அமிலத்திற் கரைந்து நிறமற்ற கரைசலைக் கொடுக்கும் அதை வளியில்வைத்தபோது பச்சை



நிறமாக மாறியது. ஈற்றில் மஞ்சள் நிறமாக மாறியது. $A$ யை நீர்சேர் அமோனியாவுடன் கரைத்தபோது நிறமற்ற கரைசல் உண்டாகியது. அக்கரைசலை வளியில் இட்டபோது வெகுவிரைவாக கடும்நீல நிறமாக மாறியது. அசிற்றலீன் வாயுவை அமோனியக் கரைசலினுள் செலுத்தியபோது சிகப்பு நிறமான வீழ்படிவு பெறப்பட்டது.

21. ஐதான ஐதரோக்குளோரிக்கமிலத்திற் கரையா மாநிற $X$ எனப்படும் சேர்வையொன்று சூடான செறி ஐதரோச்குளோறிக்கமிலத்தில் வெறுப்பான மணத்தையுடைய வாயுவைத்தந்து இலேசாகக் கரைந்தது, இவ்வாயு ஐதான அயடீன் கரைசலை நிறமற்றதாக்கி ஒரு மெல்லிய வெள்ளை வீழ்படிவைத் தந்தது, சூடான செறி ஐதரோக்குளோரிக்கமிலத்திற் கரைவுற்ற $X$ இன் கரைசலினுள்ள கற்றயன் யாதெனக் காண பரிசோதனை செய்யப்பட்டது. அதன் பெறுபேறுகள் பின்வருமாறு:

| பரிசோதனை | நோக்கம் |
|---|---|
| (i) கரைசல் குளிராக்கப்பட்டு, ஐதாக்கப்பட்டு, $H_2S$ செலுத்தப்பட்டது. | (i) வீழ்படிவு |
| (ii) கரைசலுக்கு $NaOH$ கூட்டப்பட்டது. | (ii) அதிக $NaOH$ இல் கரையும் வெள்ளை வீழ்படிவு |
| (iii) $KCNS$ ஐயும் $FeCl_3$ ஐயும் கூட்டும் பொழுது உண்டாகும் சிவப்புக்கரைசலுக்கு சிறிதளவு $X$ இன் கரைசலிடப்பட்டது. | (iii) சிவப்புநிறம் மறைந்தது. |

காரணங்காட்டி $X$ இன் அடையாளத்தை உய்த்தறிக. இக் கேள்வியிற் சம்பந்தப்பட்ட தாக்கங்கள் யாவையும் விளக்குக.

22. (a) ஐதரோக் குளோறிக்கு அமிலத்தில் செம்மஞ்சள் நிறமான கலவையினுள் $H_2S$ வாயுவைச் செலுத்தும்போது பச்சை நிறமாக மாறிப் பின்பு மென்மஞ்சள் நிறமான வீழ்படிவைக் கொடுத்தது.

(b) $Al^{3+}$ அயனும், $Mg^{2+}$ அயனும் தரப்பட்டுள்ளன எனின் ஒரு சோதனையுடன் வேறுபடுத்துக.

(c) பண்பறிபகுப்பில் இரண்டாம் கூட்டத்தில் $H_2S$ ஆல் வீழ்படிவாக்கும்போது $HCl$ இன் உபயோகம் யாது.

(d) பண்பறிபகுப்பில் கார உபலோகங்களுக்கு சுவாலைப் பரிசோதனை செய்யும்போது படிப்படியாகச் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. C ஒரு மென் பச்சை நிறமான பளிங்குருவான திண்மம், அதைச் சூடாக்கியபோது முதலில் நீராவியையும் பின்பு சில வாயுவை. யும் கொடுத்ததுடன். கபிலநிறமான மீதியும் இருந்தது. உண்டாகிய வாயு, அமிலம் சேர் பொற்ருசியம் இரு குரூமேற்றினூடாகச் செலுத்தப் பட்டபோது பச்சைநிறம் உண்டாக்கியது அவ்வாயுவை ஐதரோக் குளோறிக் அமிலத்தினுல் அமிலமாக்கப் பட்ட போரியம் குளோரைறட்டுக் கரைசலினூடாகச் செலுத்திய போது வெண்ணிறமான வீழ்படிவு தோன்றியது.

24. (i) மேல்வருபவையை வெப்பப்படுத்தும்போது நிகழ்வதை சமன்பாடுகளுடன் நிபந்தனைகள் கூறி விளக்குக.

(அ) சோடியமிருசல்பேற்று நீர்க்கரைசல்

(ஆ) மகனீசியமமோனியம் பொசுபேற்று

(இ) சோடியமபோமேற்று.

(ii ஒரு ஐதரசன் பரவொட்சைட்டுக் கரைசலின் நேர்த்திறன் 4·4 ஆயின் இதன் கனவளவுத்திறனைக் கணிக்கவும்.

25. B ஒரு நிறமற்ற நீர்க்கரைசல் அதனுள் அமிலம் சேர்பொற்ருசியம் பேர்மாங்கனேற்றுச் சேர்க்கப்பட்டபோது நிறநீக்கம் செய்யப்பட்டது அது மெதுவாக அமிலம் சேர் பொற்ருசியம் அயோடைட்டை கபில நிறமாக்கியது. ஆனல் B யை சிறிது நேரம் கொதிக்கச் செய்து குளிரவைத்த பிற்பாடு இத்தாக்கங்கள் ஒன்றிலும் ஈடுபடவில்லை.

26. X எனப்படுஞ் சேர்வை சிறிது எரிப்புள்ளதும், நிறமற்றதும், பளிங்குருவம் முள்ளதுமானவொரு பதார்த்தமாகும். X இனது ஒரு நீர்க் கரைசலை ஐதான ஐதரக்குளோரிக்கமிலத்துடன் தொழிற்பட விட்டபோது Y எனப்படும் ஒரு வெண்ணிற வீழ்படிவு கிடைத்தது. Y ஆனது அமோனியாக் கரைசலிற் கரைந்து Z எனப்படும் ஒரு கரைசலைக் கொடுத்தது. நைத்திரிக்கமிலத்தை Z உடன் சேர்த்தபோது திரும்பவும் Y எனப்படும் வீழ்படிவு கிடைத்தது. X ஐ வெப்பமாக்கியபோது ஒரு கபில நிறமான வாயு வெளியிடப்பட்டது. X இனது நீர்க் கரைசலுடன் ஒரு பொற்ருசியங் குரோமேற்றுக் கரைசலைச் சேர்த்தபோது A எனப்படும் ஒரு சிவந்த கபில நிறமான வீழ்படிவு கிடைத்தது. X இனது நீர்க் கரைசலுடன் சோடியங் கந்தகச் சல்பேற்றுக் கரைசலைச் சேர்த்தபோது மிகையான சோடியங் கந்தகச் சல்பேற்றுக் கரைசலிற் கரைகின்ற B எனப்படும் ஒரு வெண்ணிற வீழ்படிவு கிடைத்தது.

மேலுள்ள சம்பந்தப்பட்ட தாக்கங்களை விளக்கி A, B, X, Y, Z ஆகியவற்றை இன்னதெனக் காண்க.



27. ஆய்சாலையில் எவ்வாறு உலோகமொன்றின் பளிங்குருவான சேர்வையை பின்வரும் ஒட்சியேற்ற நிலைகளிற் தயாரிப்பீர், (a) மூன்று (b) ஆறு (c) ஏழு ஒவ்வொரு தயாரிப்புக்களையும், உலோகத்தில் இருந்தோ அல்லது சாதாரணமாகக் காணப்படும், மேலே குறிப்பிடப்பட்ட ஒட்சியேற்ற நிலைகளில் இல்லாத சேர்வைகளில் இருந்தோ தொடங்கவேண்டும். ஒவ்வொரு ஒட்சியேற்ற நிலைக்கும் வெவ்வேறு உலோகங்கள் உபயோகிக்கப்படவேண்டும்.

நீர் தயாரித்த சேர்வைகள் ஒவ்வொன்றின் அமிலக்கரைசலினுள்ளும் ஐதரசன் சல்பைட்டைச் செலுத்தும்போது என்ன நிகழும்.

28. பின்வரும் சோடிப் பதங்களை வித்தியாசப் படுத்தி அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(a) பிறதிருப்பங்கள், சமதானிகள்

(b) ஓர் உருச் சேர்வைகள் சமபகுதியச் சேர்வைகள்

(c) நுகைத்தலும் மின்யைனமும்

(d) தாண்டல் வெப்பநிலை நல்லுருகல் நிலை.

29. பின்வரும் நியமிப்புக்களில் பின்வரும் காட்டிகளை உபயோகிப்பதற்கான காரணங்களை விளக்குக.

(a) நீர்சேர் சோடியம் குளோரைட்டும் நீர்சேர் வெள்ளி நைத்திறேற்றும் (காட்டி—நீர்சேர் பொற்ருசியம் குரூமேற்று)

(b) நீர்சேர் பொறக்ஸ்சும் ஐதரோக்குளோரிக் அமிலமும் (காட்டி—மெதைல் செம்மஞ்சள், அல்லது திரையிடப்பட்ட மெதைல் செம்மஞ்சள்)

(c) நீர்சேர் பொற்ருசியம் புரோமைட்டும் நீர்சேர் வெள்ளிநைத்திறேற்றும் (காட்டி—இயோசின், அல்லது புளோறசீன்)

30. நீரிற் கரையக்கூடிய பளிங்குருவான உப்பு ஒன்றில் பின்வரும் உலோக அயன்களில் ஒன்று அல்லது அதற்கு கூடியவையே உள்ளன. $Cu^{++}$; $Fe^{++}$; $Cr^{+++}$; $Zn^{++}$ ஆய்சாலைக்குரிய பொதுவான தாக்கு பொருட்களும் கிடைக்கின்றன. ஆனல் சல்பைட்டுக்களை வீழ்படிவு செய்வதற்கு வழியில்லை. உப்பிலுள்ள உலோக அயன்களைக் கண்டுபிடிப்பதற்கு உரிய பிரித்தறிகை முறையொன்றை அமைக்குக.

31. மக்னீசியம் சல்பேற்றுக் கரைசலினுள் அமோனியம் குளோரைட்டுக் கரைசலைச் சேர்த்தபின்பு அமோனியம் ஐதரொட்சைட்டுக் கரைசலைச் சேர்த்தால் வீழ்படிவு தோன்ருது. ஆனல் அமோனியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதரொட்சைட்டுக் கரைசலைத் தனியாகச் சேர்த்தால் வீழ்படிவு தோன்றும். ஏன் என விளக்குக.

32. பின்வரும் சோடிச் சேர்வைகளின் கலவையும் அதிகஅளவு சாதாரண ஆய்சாலைத் தாக்கு பொருட்களும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதலிற் பெயரிடப்பட்டிருக்கும் சேர்வையை பிரித்தெடுப்பதற்கு ஒருபரிசோதனை முறையைத் தருக.

(a) வெள்ளி அயோடைட்டும், வெள்ளி பொசுபேற்றும்

(b) அலுமினியம் ஒட்சைட்டும் குரோமியம் ·iii) ஒட்சைட்டும்

(c) கல்சியம் காபனேற்றும், ஈய காபனேற்றும்

(d) மேர்க்கூரி ii) ஒட்சைட்டும் வெள்ளீயம் (ii) ஒட்சைட்டும்
உகந்த இடங்களில் சமன்பாடுகளையும் தருக.

33. பின்வரும் ஒவ்வொரு கூட்டத்திலும் இரசாயன அடிப்படையில் பொருந்தா அங்கத்தவராக ஒன்று இருக்கிறது. அதைக் காரணங் காட்டி தவிர்க்குக.

(a) $SiCl_4$, $PCl_5$; $CCl_4$; $BCl_3$

(b) $Mg^{++}$, $Cd^{++}$; $Al^{3+}$; $Cu^{2+}$; $Sb^{2+}$

(c) $H_2SO_4$; $H_3PO_4$; $HClO_4$; $H_2CO_3$; $HNO_3$

(d) $HCl$; $HIZ$ $HNO_3$; $H_2SO_4$; $H_2CO_3$; $CH_3COOH$

(e) $HBr$; $HCl$; $CH_3CO_2H$; $H_2CO_3$; $HNO_3$

(f) $C_2H_5NH_2$; $C_2H_5OH$: $CH_3OCH_3$ $CCl_4$: $CH_3NH_2$ $CH_3I$

(g) $Mg$; $Zn$; $Ca$; $Al$; $Pb$

(h) $Cu(NO_3)_2$; $Pb NO_3)_2$; $Ee(NO_3)_2$; $AgNO_3$
நீர் விரும்பினுல் ஒன்றுக்கு மேற்பட்ட விடையையும் ஒரு கூட்டத்திற்குத் தரலாம்.

34. $HNO_3$ தான் உபயோகிக்கப்படும் நிபந்தனைக்குத் தகுந்தபடி தாக்கங்களில் ஈடுபடும் என்பதை உதாரணத்துடன் கூறி, தாக்கங்களையும் தந்து, இரசாயனத்தின் எல்லாக் கிளைகளில் இருந்தும் உதாரணங்கள் எடுத்து வகைப்படுத்துக. நைத்திரிக்கு அமிலத்தின் இலத்திரன் கட்டமைப்பைத் தந்து குறிப்புக் கூறுக.

35. ஆய்வுசாலையில் பின்வரும் மாற்றங்களைச் செய்வதற்கான சுருக்கமான முறையை (சமன்பாடுடன்) தருக.

(a) கந்தகம் → சோடியம் கந்தக சல்பேற்று (வேறு கந்தகச் சேர்வைகளோ, கந்தகமோ உபயோகிக்கப்படாது)



(b) மாங்கனீசு இரு ஒட்சைட்டு → பொற்றாசியம் பேர்மாங்கனேற்று.

(c) இரும்பு → நீரற்ற பெரிக்குக் குளோரைட்டு

(d செம்பு (ii) சல்பேற்று → செம்பு (ii) ஒட்சைட்டு.

36. பின்வரும் உதாரணங்களில் சரியான விடையை சுற்றி வட்டம் வரைக.

உருகுநிலை அல்ல கொதிநிலை (எது எனக் கூறுக).

| | சென்ரிகிரேட்பாகை |
|---|---|
| கந்தகம் (Rhombic) | 0, 25, 50, 100, 200, 300 |
| புரோமீன் | 0, 25, 50, 100, 200. 300 |
| ஈயம் | 0, 25, 50, 100, 200, 300 |
| அசற்றல்டிசைட்டு | 0, 25, 50; 100, 200, 300 |
| நைத்திரோ பென்சீன் | 0, 25, 50, 100, 200, 300 |
| பீனோல் | 0, 25, 50, 100, 200, 300 |

உருகுநிலை அல்லது கொதிநிலை எனக் குறிப்பிடுக.

37. மேல்வருவனவற்றின் ஒவ்வொன்றினதிற்கும் இயற்கையாக நிகழும் இரு வடிவங்களின் சூத்திரங்களையும் பெயர்களையும் தருக.

(அ) கல்சியம் (ஆ) அலுமினியம் (இ) இரும்பு

ஊதுலையைப்பாவித்து இரும்பைப்பிரித்தெடுப்பில் உள்ளடக்கிய இரசாயனத்தாக்கங்களை ஆராய்க. அலுமினியத்தைப் பிரித்தெடுப்பதற்கு இம்மாதிரியான முறையை ஏன் கையாள முடியாதென விளக்குக.

38. ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்த மூலகங்களின் ஒட்சைட்டுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| $Na_2O$ | $P_2O_5$ |
| $MgO$ | $SO_3$ |
| $Al_2O_3$ | $Cl_2O_7$ |
| $SiO_2$ | |

இவ்வொட்சைட்டுகளுள் நீருடன் தாக்கமடையக் கூடியவை தாக்கமடைந்து உண்டாக்கும் விளைவுகள் யாவை என்பதைச் சமன்பாடு தந்து குறிப்பிடுக.

(அ) மேற்படி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் அமிலமாகவோ அல்லது காரமாகவோ தொழிற்படக்கூடியவை என்பதை அவற்றின் இலத்திரன் நிலையமைப்பையும், மின் எதிரியல்பையும் அடிப்படையாக வைத்து விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அமிலமாகத் தொழிற்படக்கூடியவையின் கட்டமைப்புச் சூத்திரங்களைத் தருக.

39. (அ) பின்வருவனவற்றை விளக்குக,

தாண்டலற்ற மூலகங்களின் ஆவர்த்தனத்தில் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் நோக்கிச் செல்லும்பொழுது,

(i) அணு ஆரை குறைகின்றது

(ii) மின்னெதிரியல்பு கூடுகின்றது.

(ஆ) பின்வருவனவற்றின் இலத்திரன் கட்டமைப்பையும், கேத்திர கணித வடிவத்தையும் தருக.

(i) $AlCl_3$ (ii $SiF_4$

40. பின்வரும் சேர்வைகளை அவற்றின் இரசாயன அல்லது பௌதிக இயல்புகளையும், மாற்றங்களையும் பிரதிபலிக்கக்கூடியதாக நிரைப்படுத்துக. (நிறையையும், பௌதிக நிலையையும் தவிர்ந்த) நீர் தேர்ந்தெடுத்த குணதிசயத்தைக் குறிப்பிட்டு அக்குணதிசயத்தின் மாற்றம் அத்தொடரில் எவ்வாறு இருக்கிறது எனச் சுருக்கமாகக் கூறுக.

(a) $CH_3CO_2H$, $HCl$, $C_6H_5OH$

(b) $O_2$, $CO_2$, $He$

(c) $SiCl_4$, $NaCl$, $AlCl_3$

(d) $Na_2O$, $ZnO$, $MgO$.

## அலகு: 9 A

## பல்தேர்வு வினாக்கள்

1. மஞ்சள்நிறக் கரைசலுக்குள் ஐதான $H_2SO_4$ அமிலம் சேர்க்கப்பட்டபோது அது செம்மஞ்சள் நிறமாக மாறியது. இதற்குள் $H_2S$ வாயு செலுத்தப்பட்டபோது கரைசல் பச்சைநிறமாக மாறியதுடன் வெளிறிய மஞ்சள்நிற வீழ்படிவு பெறப்பட்டது. ஆரம்பக்கரைசலாக இருக்கக்கூடியது.

1. $FeCl_3$  2. $K_2Cr_2O_7$  3. $Cr_2(SO_4)_3$
4. $K_2CrO_4$  5. பெரிக்அமோனியஞ்சல்பேற்

2. $KClO_3$ க்கும் செறிந்த $HCl$க்குமுள்ள தாக்கத்தை எச்சமன்பாடு சரியாகக் குறிக்கின்றது.



1. $KClO_3 + HCl \rightarrow KCl + Cl_2 + H_2O$
2. $KClO_3 + HCl \rightarrow KCl + ClO_2 + Cl_2 + O_2$
3. $KClO_3 + HCl \rightarrow KCl + ClO_2 + Cl_2 + H_2O$
4. $KClO_3 + HCl \rightarrow KCl + HOCl + Cl_2 + H_2O$
5. $KClO_3 + HCl \rightarrow KCl + H_2O$

3. அமோனியா சோடா முறையில் $NaHCO_3$ மற்றைய விளைவு பொருட்களில் இருந்து இலகுவாக வேறுக்கப்படுவதற்குரிய காரணம்?

1. வெப்பம் $NaHCO_3$ஐ இலகுவாக $Na_2CO_3$ ஆக மாற்றுவதால்
2. மற்றை விளைவு பொருட்கள் நீரிலே கரையாததால்
3. இதுமட்டுமே அமிலவுப்பாகத் தோன்றுவதனால்
4. விளைபொருட்களில் இதுவே சிறிதளவில் கரைவதால்
5. தாக்கத்தின்போது வெப்பம் வெளிவிடப்படுவதால்

4. $K_2CO_3$ஐ பெருமளவு ஆக்குவதற்குத் தேவையான ஆரம்பப் பொருட்கள்,

1. $KCl_3MgCO_3\ 3H_2O, CO$  2. $KCl, NH_3, CO_2$
3. $KCl, CO_2, H_2O$  4. $KCl, CoCO_3, CO_2$
5. $KCl, MgSO_4 \cdot 7H_2O, CO_2$

5. செம்பிலிருந்து பெறக்கூடிய சிக்கலயன்களில் பிழையாக எழுதப்பட்டுள்ளது யாது?

1. $[Cu(H_2O)_n(NH_3)_{6-n}]^{2+}$  2. $[Cu(NH_3)_2]^+$
3. $CuCl_4^{2-}$  4. $CuCl_4^{3-}$  5. $CuCi_2^{2-}$

6. செறிந்த $HCl$ அமிலத்தில் குப்பிறிக் குளோரைட்டின் கரைசல் மஞ்சள் நிறமாகும் இக்கரைசல் நீரால் ஐதாக்கையில் நீலநிறமாகின்றது இந்நிறமாற்றத்துக்குக் காரணம்,

1. $(CuCl_4)^{2-}$, $(Cu \cdot 4H_2O)^{2+}$ ஆக மாறுவது
2. $CuCl_2$, $(Cu \cdot 4H_2O)^{2+}$ ஆக மாறுவது
3. $(CuCl_6)^{4-}$ $(Cu \cdot 4H_2O)^{2+}$ ஆக மாறுவது
4. $CuCl_2\ 2H_2O$ $(Cu \cdot 4H_2O, Cl_2$ ஆக மாறியது
5. $CuCl_2$, $(Cu \cdot 2H_2O)^{2+}$ ஆக மாறுவது

7. பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று யாது?

$H_3PO_4$ ஒரு மும்மூல அமிலமாகும் எனவே.

1. அது மூன்று வகையான உப்புக்களை தருவிக்கமுடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அதன் நீர்க்கரைசலில் $H_3O^+$ அயன்கள் காணப்படும்
3✓ அது ஒரு வன்மையான அமிலம்
4. 1 கிராம் மூல்அமிலம் 3 கிராம் மூல் NaOH உம் தாக்கம்புரியும்
5. கரைசலில் $H_2PO_4^-$ அயன்களைத் தரமுடியும்.

8. பின்வருவனவற்றில் எதில் மூன்றுபதார்த்தங்களும் ஒட்சியேற்றும் கருவிகளாகும்.

1. $KMnO_4$, $K_2Cr_2O_7$, $H_2S$ 2. $Br_2$, $I^-$. Con$H_2SO_4$
3. $HNO_3$, $Cl_2$, $H_2SO_3$ 4✓ $HNO_3$, $K_2Cr_2O_7$, $Br_2$
5. $FeSO_4$, $KMnO_4$, $SO_2$

9. ஓர் ஒட்சைட்டு ஐதான HCl இல் கரைந்து கரு நிறமுள்ள கரைசலைக் கொடுத்தது. இக்கரைசலில் ஓர்பகுதிக்கு $H_2S$ வாயு செலுத்தப்பட்டபோது வீழ்படிவு உண்டாகவில்லை வேறோர்பகுதிக்கு அமோனியக் கரைசலைச் சேர்த்தபோது வீழ்படிவு உண்டாகி அது மேலதிகமான அமோனியாவில் கரைந்தது. அவ்வொட்சைட்டு,

1. ZnO 2. CuO 3. MgO 4✓ $N_2O$ 5. FeO

10. ஒரு திண்மப்பொருள் தனித்து சூடாக்கியபோது ஒருதிண்மமிகுதியைக் கொடுத்தது. செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் சூடாக்கியபோது செங்கபில வாயுவைக் கொடுத்தது. அப்பொருளின் கரைசல் பொற்றுசியம் குரோமேற்றுக் கரைசலுடன் மஞ்சள்நிற வீழ்படிவைக் கொடுத்தது. இவ்வீழ்படிவு சோடியம் ஐதரொட்சைட்டில் கரைந்தது எனவே திண்மப்பொருள்

1. $ZnCO_3$ 2. $Ba(NO_3)_2$ 3. $MgBr_2$
4. $NH_4NO_3$ 5✓ Pb $NO_3)_2$

11. $I_2$, KI கரைசலில் கரைக்கப்படும்போது கருங்கபில நிறம் பெறப்படுகின்றது. இந்த நிறத்துக்குக் காரணமானது

1. $I_2$ 3. $I^-$ 3. $I_2^-$ 4. $I_4^{2-}$ 5✓ $I_3$

12. செறிந்த அசேதன உறுப்பு அமிலத்துக்குள் நீர்சேர்க்கப்படும் பொழுது

1✓ அமிலம் மென்மையாகின்றது
2. அமில மூலக்கூறுகள் கூட்டற்சேருகின்றன
3. மின்கடத்தும் தன்மை குறைகின்றது
4. சுயாதீனபுரோத்தன்கள் பெறப்படுகின்றன.
5. கடத்தும் தன்மை அதிகரிக்கின்றது.



13. ஒரு நிலையான மின்வலுப்பிணைப்பு சேர்வையை உண்டாக்க ஒவ்வாத இயல்பு

1. கற்றயன் பெரிதாயிருத்தல்
2. அனயன் சிறிதாயிருத்தல்
3. கற்றயனின் மூலகத்தின் அயனாக்கசக்தி குறைவாயிருத்தல்
4. அனயனின் மூலகத்தின் மின்னெதிர்த்தன்மை பெரிதாயிருத்தல்
5✓ கற்றயனின் மூலகத்தின் அயனாக்கசக்தி கூடியதாக இருத்தல்

14. பின்வருவனவற்றில் ஒன்று மற்றைய நான்கிலிருந்தும் வடிவத்தில் வித்தியாசமானது அச்சேர்வை.

1. $XeF_4$ 2. $N(CO)_4$ 3. $BF_4$
4. $PH_4^+$ 5✓ $BF_3$

15. தாண்டல் மூலகங்கள் அவற்றின் சேர்வைகளில் பரகாந்த இயல்பைக் கொண்டுள்ளன. பின்வருவனவற்றில் எச்சோடி சமவளவு பரகாந்தவியல்புள்ளது.

1. $Co^{3+}$, $Co^{2+}$ 2. $Co^{3+}$, $N_1^{2+}$ 3. $Fe^{3+}$, $Co^{3+}$
4✓ $Co^{2+}$, $N_1^{2+}$ 5. $Fe^{3+}$, $Co^{2+}$

16. $Mn_2(CO)_{10}$ என்ற சேர்வைக்குப் பொருத்தமற்ற கூற்று

1✓ மின்னைக் கடத்துகின்றது
2. வன்மையாகச் சூடாக்கும்போது CO ஐ வெளியேற்றி Mnஐ மிகுதியாகத் தருகிறது
3. ஐதான $HNO_3$ இல் தாக்கமுற்று வெளிறிய இளம் சிவப்பு நிறத்தைத் தருகிறது
4. ஒவ்வொரு Mn அணுவும் வேறு 6 அணுக்களுக்கு இணைக்கப்பட்டது
5. Mn அணுவின் ஒட்சியேற்ற எண் பூச்சியம் ஆகும்.

17. 20 கனஅளவு ஐதரசன் பரஒட்சைட் கரைசலின் செறிவு அண்ணளவாக.

1. 3% 2✓ 6% 3 10% 4. 20% 5. 30%

18. பொசுபரசு, இரும்பு ஆகியவற்றின் பிரித்தெடுத்தலைப்பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றது யாது?

1. CO தோன்றுகிறது
2. இரண்டிலும் கல்சியம் சிலிக்கேற்று கழிவுப் பொருளாகப் பெறப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கந்தகரி ஆரம்ப பொருள்களில் ஒன்றாகும்

4✓ மணல் ஆரம்ப பொருள்களில் ஒன்றாகும்

5. மிக உயர்ந்த வெப்பநிலை தேவைப்படும்.

19. சேலேனியமும் ஒட்சிசனும் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்தில் காணப்படுகின்றன நீர் அறைவெப்பநிலையில் ஒரு திரவம் ஆனால் சேலேனியம் ஐதரைட்டு ஒருவாயு

பின்வருவனவற்றுள் மேலே தரப்பட்ட தோற்றப்பாட்டை நன்கு விளக்குவது எது.

1✓ நீர்மூலக் கூறுகள் செலனியமைதரொட்சைட்டு மூலக்கூறுகளிலும் கூடிய முனைவுத் தன்மையானவை

2. இருமூலக் கூறுகளும் ஒத்த இலத்திரனியமைப்புடையவை.

3. ஒட்சிசன் செலனியத்திலும் கூடிய மின்னெதிர்த் தன்மையுடையது.

4. செலனியம் ஒட்சிசனிலும் கூடிய மின்னெதிர்த்தன்மையுடையது

5. செலனியம் ஐதரைட்டு மூலக்கூறுகள் கூடியமுனைவுத் தன்மையுடையவை.

20. பின்வரும் சோடிகளில் முறையே அதிக உறுதி கூடியதும், அதிக உறுதி குறைந்ததுமான சோடிகள்

1. $CCl_4$உம் $CI_4$ம்    2. $NaI$உம் $CaF_2$உம்

3✓ $CsF$உம் $NCl_3$உம்    4. $HI$உம் $NH_3$உம்

5. $KCl$உம் $LiI$உம்.

21. A, B என்ற இருமூலகங்களினின் அணுவெண்கள் முறையே 18, 35 ஆகும். இவ்விரு மூலகங்கள் உண்டாக்கும் சேர்வையின் சூத்திரம்

1. $A_2B$    2✓ $AB_2$    3. $A_2B_2$    4. $AB$    5. $A_2B_3$

22. வெப்பத்தின் தாக்கத்தினால் மூலஉப்பைக் கொடுப்பது.

1. $Na_2CO_3 \cdot 10H_2O$    2. $CuSO_4 \cdot 5H_2O$

3✓ $MgCl_2 \cdot 6H_2O$    5. $H_3BO_3$    5. $Pb(NO_3)_2$

23. பின்வரும் வாயுக்களின் கலவைகளில் எக்கலவையாக ஆக்கிவாயு உள்ளது.

1. $N_2$, $H_2$    2. $CO_2$, $H_2$    3. $CO_2$, $N_2$

4✓ $CO$, $H_2$    5. $CO_2$, $N_2$

24. பின்வரும் செயல்முறைகளில் எது ஒரு கரைசலின் நிரம்பியதா அல்லது நிரம்பாததா என அறிய உதவும்

1. கரைசலை வடித்தல்    2. கரைசலை ஆவியாக்கல்



3. கரைசலை ஆறுதலாக குளிரவிடுதல்

4. கரைசலை ஆறுதலாக சூடாக்குதல்

5✓ கரையத்தில் ஒரு பளிங்கினை இடுதல்.

25. கார உலோக அணுக்களில் அதிவெளியே உள்ள இலத்திரன் மிக்க குறைந்த திடமானதாக வைத்திருக்கப்படுவது.

1. இலிதியத்தில்    2. அணுஎண் 19 ஆக உள்ள மூலகத்தில்

3. கூட்டத்தில் மிகக்குறைந்த தாக்கத்தை உடைய மூலகத்தில்

4. கூட்டத்தில் மிக வலிமையாக இலத்திரனை ஏற்றுக்கொள்ளும் மூலகத்தில்

5✓ கூட்டத்தில் மிக வலிமையான தாழ்த்தும் கருவியில்

26. A என்னும் மூலகம் கீழ்வரும் இயல்புகளை உடையது.

(அ) அதுமினுமினுப்பானது, மின்னோட்டத்தைக் கடத்துவது

(ஆ) அது ஓர் அமிலவொட்சைட்டை உருவாக்குவது

A ஆக இருக்கக்கூடியது.

1✓ C    2. Si    3. P    4. Mg    5. V

27. இரண்டு மூலகங்கள் கீழ்வரும் ஒத்த இயல்புகளை உடையன.

(அ) அவற்றின் குளோரைட் நீர்மயமாகும் தன்மையன.

(ஆ) அவை இலகுவில் பிரிகையடையும் காபனேற்றுக்களை உண்டாக்குபவை

(இ) அவை நைத்திரைட்டுக்களை ஆக்குவன.

அம்மூலகங்கள்

1. Na Mg    2. B, Si    3. Na,Ca    4. LiMg

5 Be, B

28. கந்தகம் $SF_6$ என்ற சேர்வையைத் தரும்போது அருட்டப்பட்ட நிலையில் கந்தகத்தின் இலத்திரன் நிலையமைப்பு எதுவாகும்.

| | 3S | 3P | | | 3d | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1✓ | √ | √ | √ | √ | √ | √ | | | |
| 2. | ⇅ | ⇅ | √ | √ | | | | | |
| 3. | ⇅ | ⇅ | √ | √ | √ | √ | | | |
| 4. | √ | √ | √ | √ | √ | | | | |
| 5. | √ | √ | √ | √ | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பின்வருவனவற்றில் நீர்க்கரைசலில் எது சிறந்த தாழ்த்தும்கருவி

1. $Li$ 2. Na 3. Be 4. Mg 5. K

30. பின்வருவனவற்றுள் எச்சோடி ஓரேதிணிவைக் கொண்டுள்ளது.

1. $H_2O, D_2O$ 2. $H_2O$, HO$T$ 3. $D_2O$, HO$T$

4. DO$T$, HOD 5. $H_2O$, HOD

31. ஒருநீர்க்கரைசல் $X$க்குள் KCN$S$ கரைசலைச் சேர்க்கும்போது சிவப்புநிறம் தோன்றவில்லை ஆனால் சிறிதளவு நைத்திரிக்கமிலத்தைச் சேர்ந்தபின்பு KCN$S$ சேர்க்கப்பட்டபோது கடும்சிவப்பு நிறம் தோன்றியது. கரைசல் $X$ இல் உள்ள உலோக அயன்,

1. $Co^{2+}$ 2. $Fe^{3+}$ 3. $Ni^{2+}$ 4 $Fe^{2+}$ 5. $Mn^{2+}$

32. பன்றி இரும்பில் காணப்படும் பிரதான மாசுப்பொருள்,

1. $Si$ 2. P 3. C 4. $S$ 5. $M_4$

33. சேர்வை $X$, NaOH உடன் வெள்ளை வீழ்படிவைக் கொடுத்தது செறிந்த HC$l$ ஊடகத்தில் $H_2S$ உடன் மஞ்சள்நிற வீழ்படிவைக் கொடுத்தது $X$ ஆக இருக்கக்கூடியது.

1. தாளிக்குசேர்வை 2 கட்மியம்சேர்வை 3. பெரிக்குசேர்வை

4. ஆசனிக்குசேர்வை 5. அந்திமணிசேர்வை

34. மேலதிக அமோனிய கரைசலுடன் சிக்கலயனைக் கொடுக்காத உலோக அயன்,

1. $Ni^{2+}$ 2. $Cd^{2+}$ 3. $Ag^+$ 4. $Pb^{2+}$ 5. $Zn^{2+}$

35. ஒரு மூலகத்தின் வெளிஓட்டில் உள்ள இலத்திரனமைப்பு $S^2P_3$ அம்மூலகத்தின் வலுவளவு ஆக இருக்கக்கூடியது.

1. 2 மாத்திரம் 2. 3 மாத்திரம் 3. 5 மாத்திரம்

4. 2 அல்லது 3 5. 3 அல்லது 5

36. பின்வருவனவற்றுள் மென்மையான அமிலம் எது,

1. $HClO_4$ 2. $HClO_3$ 3. $HClO_2$ 4. HOC$l$ 5. HC$l$

37. பின்வருவனவற்றுள் எது கூடுதலான அமிலத்தன்மையுள்ள ஒட்சைட்டைத் தரும்.

1. Be 2. $Al$ 3. B 4. Ga 5. In

## அலகு 9 B

# பலவினப்பயிற்சி

1. வெண்காரத்தை வெப்பப்படுத்திப் பெற்ற மணியில் உள்ள சேர்வைகள்

(i) $Na_2B_4O_7 \cdot 10H_2O$ (ii) $B_2O_3$, $NaBO_3 \cdot 4H_2O$

(iii) $Na_2B_4O_7$ (iv) $NaBO_2$, $B_2O_3$

(v) $NaBO_2$

2. $A$, $B$, $C$, $D$, $E$ என எழுத்திடப்பட்டுத் தரப்பட்டுள்ள அமைப்புக்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்கள் ஆறுக்கும் விடையளிக்குக.

(a) ஒரு தளச் சதுரம் (b) ஒரு தள முக்கோணம்

(c) முக்கோண இருபிரமிட்டு (d) நான் முகி

(e) எண்பக்க அமைப்பு (ஒக்ருகெட்றல்)

3. (1) பொசுப்பரசு ஐங்குளோரைட்டின் அமைப்பு

(2) $[Cu(NH_3)_4]^{2+}$ அயனின் அமைப்பு

(3) $[PtCl_6]^{2-}$, $[Fe(CN)_6]^{4-}$ ஆகிய அயன்களின் அமைப்பு

(4) $BCl_3$ இன் அமைப்பு

(5) $SiF_4$, $GeH_4$ ஆகியனவற்றின் அமைப்பு

(6) $SF_6$ இன் அமைப்பு.

பின்வரும் வினாக்கள் 4—7 என்பவற்றிற்கான விடைகளைக் கீழே தரப்பட்டிருக்கும் $I-V$ தலையங்களில் இருந்து தெரிவு செய்க ஒவ்வொரு வினாவுக்கும் அதி சிறந்ததைத் தெரிவுசெய்க.

(i) அலுமினியம் (ii) தாண்டல் மூலகம் (iii) அலசன்

(iv) போரன் (v) இரசம்

4. உயர்மின் கடத்துத் திறனுடைய மூலகம், உயர் இழுவை வலுவும் நிறமுள்ள இருவலுவளவு கற்றயன்களைக் கொடுக்கவல்லதுமான மூலகம்.

5. $Ca(OH)_2$ தொங்கலுடைய நீர்க் கரைசலுடன் தாக்கம் புரிந்து $H_2$ வெளியேற்றும் மூலகம்.

6. உயர் மின் கடத்துத் திறனும் பல வலுவளவும் உடையதுமான மூலகம்.

7. சேதனக் கரைப்பான்களில் கரையக் கூடியதும் அறைவெப்பநிலையில் திரவ நிலையில் இருக்கக் கூடியதுமான மூலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பின்வருவனவற்றில் எவை நீருள் உள்ள துணிக்கைகள் எல்லாவற்றையும் சரிவர காட்டுகின்றது.

(a)✓ $H_3O^+$, $OH^-$, $H_2O$
(b) $H_3O^+$, $OH^-$, $H_2O$, $D_2O$
(c)✓ $H_3O^+$, $OH^-$, $H_2O$, $D_2O$, $OD^-$
(d) $H_3O^+$, $OH^-$, $H_2O$, $D_2O$, $OD^-$ $H_2D_2O$, $HDO$
(e) $H_2O^+$, $OH^-$, $H_2O$, $D_2O$, $OD^-$, $H_2D_2O$, $HDO$, $T_2O$

9. $X$ எனும் சேர்வை செறிந்த $H_2SO_4$ உடன் வெப்பமாக்கிய போது கடும் நிறமுள்ள வாயுவைக் கொடுத்தது. இவ் வாயுவை $H_2S$ கரைசலினுள் செலுத்தியபோது அதன் நிறம் நீங்கியது. மிகையான $H_2S$ ஐ வெளியேற்றியபின் $AgNO_3$ இட்டபோது ஐதான $HNO_3$ இற் கரையாத மஞ்சள் வீழ்படிவைக் கொடுத்தது. $X$ இன் கரைசல் $NaOH$ உடன் நீலநிற வீழ்படிவைக் கொடுத்தது. இவ் வீழ்படிவு $Na_2O_2$ இட்டபோது கரைந்தது. எனவே $X$

(i) $CuBr_2$ (ii) $Ni(NO_3)_2$ (iii)✓ $CrBr_3$
(iv) $CoI_2$ (v) $Cr(NO_3)_3$.

10. இரும்பு $(iii)$ ஐதரொட்சைட் பென்னின்கூழ் ஆகியவற்றின் பரம்பல் அவத்தை முறையே நேரேற்றமும். எதிரேற்றமும் உள்ளவை பின்வருவனவற்றுள் எதைத்தவிர்ந்த எல்லாம் சரியானவை.

(a) சோடியம் சல்பேற்று கரைசல் இரு சொல்களிலும் திரளை உண்டாக்கும்.
(b) மகனீசியம் குளோரைட்டு கரைசல் இரும்பு $(iii)$ ஐதரொட்சைட்டுக் சொல்லிலும் பார்க்க சுலபமாக பொன்சொல்லை திரளச்செய்யும்.
(c)✓ சொல்களைக் கலப்பதால் விளைவு ஏற்படாது.
(d) மின்னயனம் இரு சொல்களிலும் திரளலை உண்டாக்கும்.
(e) இரு சொல்களிலும் பரம்பல் ஊடகம் மின் ஏற்றம் உள்ளது.

11. $X$ எனும் நீரில்கரையாத வெண்ணிறத்தூள் சூடான ஐதான $HCl$ இல் நுரைத்தெளலுடன் $Y$ எனும் ஒரு தெளிந்த கரைசலைக் கொடுத்தது $Y$ க்குள் $H_2SO_4$ ஐச் சேர்த்தபோது ஒரு வெண்ணிற வீழ்படிவு தோன்றி அது அமிலங்களில் குறைவாகக் கரைந்தது ஆனால் சூடான அமோனியம் சல்பேற்றில் எளிதில்கரைந்தது $X$ ஆக இருக்கக்கூடியது.

(1) $PbCO_3$ (2)✓ $BaCO_3$ (3) $Ca(NO_3)_2$
(4) $Pb(NO_3)_2$ (5) $HgCO_3$



12. $PbSO_4$ இன் ஒரு தூய மாதிரியை தயாரிப்பதற்கு பின்வரும் முறைகளில் எதைக் கையாளலாம்.

(a)✓ ஐதான $H_2SO_4$, $PbCO_3$ உள்ள கரைசலுக்கு $Na_2SO_4$ கரைசல் சேர்த்தல்.
(b) வெப்பப்படுத்திய ஈயநைத்திரேற்றுக் கரைசலுக்கு $Na_2SO_4$ கரைசல் சேர்தல்,
(c) அதிகளவு ஐதான $H_2SO_4$க்கு சிறிதளவு $PbCl_2$ சேர்த்துக் குலுக்குதல்.
(d) வெப்பித்த $PbCl_2$ மீது $SO_2$ வாயு செலுத்தித் தாக்கமுற விடல்,
(e) தூளாக்கிய $BaSO_4$ $PbCl_2$ கலவையுடன் நீர்சேர்த்துக் குலுக்குதல்.

13. மூன்று கரைசல்கள் $P$, $Q$, $R$ என்பன பின்வருமாறு சேர்க்கப்பட்டபோது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

$P + Q \longrightarrow$ வெண்ணிற வீழ்படிவு
$Q + R \longrightarrow$ வெண்ணிற வீழ்படிவு
$P + R \longrightarrow$ வாயு தோன்றியது.

தரவில் இருந்து $P$, $Q$, $R$ என்பன எதுவாகும்

| | P | Q | R |
|---|---|---|---|
| (1) | $K_2SO_4$ | $BaCl_2$ | $Na_2CO_3$ |
| (2) | $KCl$ | $CaCl_2$ | $Na_2SO_3$ |
| (3) | $Na_2SO_4$ | $AgNO_2$ | $Na_2CO_3$ |
| (4)✓ | $NaHSO_4$ | $BaCl_2$ | $Na_2CO_3$ |
| (5) | $HCl$ | $Pb(NO_3)_2$ | $Na_2SO_4$ |

14. பின்வருவனவற்றுள் எதைத் தவிர்ந்த ஏனையவை எல்லாம் மின்பகுத்தல் மூலம் செம்பை சுத்திகரிப்பதற்கு உரியவை.

(a) மின்பகு பொருள் அமிலமாக்கப்பட்ட செம்பு $(ii)$ சல்பேற்று கரைசல்
(b) தூய்மை அற்ற செம்பு அனோடு ஆக இருத்தல்
(c)✓ செம்பு கதோட்டில் $H_3O^+$ அயன்கள் ஏற்றமிழத்தல்
(d) செம்பிலும் மின்நேர்த்தன்மை கூடிய உலோக மாசுக்கள் அயன்களாக கரைசலுள் செல்லுதல்
(e) $OH^-$ அயன்கள் கதோட்டில் ஏற்றம் இழவாமல் இருத்தல்.

15. ஒரு துண்டு $Zn$ உம் ஒரு துண்டு $Cu$ ம் ஐதான $H_2SO_4$ கரைசலில் 1 சமீ இடைவெளியில் வைக்கப்பட்டுள்ளன. வெளிமுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடங்கள் செம்புக் கம்பியினுல் வோற்று மாணிக்குத் தொடுக்கப் பட்டுள்ளன பின்வருவனவற்றுள் எதை அவதானிக்கலாம்.

(i)✓ $Zn$ முனையில் $H_2$ வாயு வெளியேறும்
(ii) $Cu$ முனையில் $SO_2$ வாயு வெளியேறும்
(iii) $Cu$ முனையில் $H_2$ வாயு வெளியேறும்
(iv) $Zn$ முனையில் $Cu$ படியும்
(v) ஒரு தாக்கமும் நடைபெறுது

16. ஒரு நிறமற்ற பளிங்குச் சேர்வை நீரில் கரையும் இதை வெப்பிக் கும்போது வேறு விளைவுகளுடன் $O_2$ வையும் தரும் சேர்வையின் நீர்க்கரைசல்கள் ஐதான $HCl$ உடனும் $H_2SO_4$ உடனும் வீழ் படிவைத் தருகின்றது. சேர்வை பின்வருவனவற்றுள் ஒன்ருயிருக் கலாம். அது,

(i) $AgClO_3$ (ii)✓ $Pb(NO_3)_2$ (iii) $AgNO_3$
(iv) $PbCO_3$ (v) $Ag_2SO_4$

17. $X$ எனும் சேர்வை $NaOH$ உடன் வெண்ணிற வீழ்படிவையும் செறி $HCl$ ஊடகத்தில் $H_2S$ உடன் மஞ்சள் வீழ்படிவையும் கொடுத்தது $X$ என்பது

(i) ஸ்தனிக்குச் சேர்வை (ii) கட்மியச் சேர்வை
(iii) பெரிக்குச் சேர்வை (iv)✓ ஆசனிக்குச் சேர்வை
(v) அந்திமனிச் சேர்வை

18. $Y$ என்னும் சேர்வையை செறி $H_2SO_4$ உடன் திறந்த குழா யில் வெப்பிக்கும்போது கபில நிறப்புகையைக் கொடுக்கிறது. $Y$ இன் கரைசல் அமில $KMnO_4$ வை நிறநீக்கும் எனவே

(i) $NO_3^-$ (ii)✓ $NO_2^-$ (iii) $Br^-$ (iv) $C_2O_4^{--}$ (v) $I$

19. தாக்கமுறும் இயல்பு ஒரளவுக்கு கூடிய உலோகம் $M$ $MSO_4$ : $M_2(SO_4)_3$ ஆகிய இரு $SO_4^{--}$ க்களை உண்டாக்கும், நீரற்ற குளோரைட்டு $MCl_2$ நன்ருக பொடி செய்யப்பட்ட $M$ பின்வரு வனவற்றுள் எதனுடன் தாக்கமுறும்போது பெறப்படும்

(a) குளோரீன் (b)✓ ஐதரசன குளோரைட்
(c) $HCl$ இன் அற்ககோல் கரைசல்
(d) 1:1 என்ற வீதமுள்ள செறிந்த $H_2SO_4$ உம் $HCl$ உம்
(e) உருக்கிய $Pb(II)$ குளோரைட்டு.

20. ஓர் $Fe^{2+}$, $Cu^{2+}$ அயன்களைக் கொண்ட கரைசலிலிருந்து அயன் களைப் பிரிக்க, பின்வருவனவற்றுள் எம்முறை சாத்தியமானது



(i) $H_2S$ செலுத்தல்
(ii) $KCN$ இட்டுப் பின் $H_2S$ செலுத்தல்
(iii) மிகையான $NaOH$ இடல்
(iv)✓ மிகையான $NH_4OH$ இடல்
(v) $(NH_4)_2S$ சேர்த்தல்

21. கடல் நீரின் திரம்பற்றன்மையைத் தீர்மானித்தற்கு சிறந்த முறை

(i) உருகிபார்த்தல் (ii) சவர்க்காரத்தின்மீது தாக்கம்
(iii)✓ மின் கடத்துத் திறனின் அளவு
(iv) மஞ்சளொளி உறிஞ்சும் அளவு
(v) ஒளிச்சுழற்சியின் அளவு.

22. பெருமளவில் $Al$ இன் தயாரிப்பு

(i) ஒட்சைட்டை $C$ உடன் சூடாக்கல்
(ii) ஒட்சைட்டை $Zn$ உடன் சூடாக்கல்
(iii) $AlCl_3$ யை மின்பகுத்தல்
(iv) போட்சைட்டை அதிக உயர் வெப்பநிலையில் சூடாக்கல்
(v)✓ புளோரைட்டுக் கலவையில் கரைத்த போட்சைட்டை மின் பகுத்தல்

23. பின்வரும் எச் சோடிகள் தாக்கமுறும்போது ஈதல் பிணைப்பு உண் டாகும்

(i)✓ $NH_3 + H^+$ (ii) $C_2H_4 + H_2$ (iii) $PCl_3 + Cl_2$
(iv) $CO + Cl_2$ (v) $H_3O^+ + OH^-$

24. பின்வருவனவற்றில் ஊக்கியின் பயனை ஈடுபடுத்தாது.

(1) அமோனியாவுக்கான ஏபர்முறை
(2) நிரம்பாத எண்ணெயிலிருந்து மாஜரீனை ஆக்கும்முறை
(3) சல்பூரிக்கமிலத்திற்கான தொடுகைமுறை
(4) கொதிநீராவி நத்தா ஆகியவற்றில் இருந்து ஐதரசனைப் பெறும்முறை
(5)✓ சோடியம் ஐதரொட்சைட்டிற்கான சுண்ணும்பு சோடாமுறை

25. $MgO$ இன் உருகுநிலை 2640° ச. ஆனுல் $NaF$ இன் உருகுநிலை 992° ச. இவ்வித்தியாசத்துக்குரிய பிரதான காரணம்.

(1) $MgO$ இலுள்ள பிணைப்பு கூடிய அயன்தன்மை உடையது.
(2)✓ $NaF$ இலுள்ள பிணைப்பு கூடிய அயன்தன்மை உடையது.
(3) $MgO$ வேருன அமைப்பை உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) MgO இலுள்ள அயன்கள் NaF இலுள்ள அயன்களைவிட இரண்டு மடங்கு ஏற்றங்கள் உடையன.

(5) Mg உம் O வும் வன்மையான பங்கீட்டுப் பிணைப்பையுடையன.

26. 

| | | | |
|---|---|---|---|
| மூலகம் | X | Y | Z |
| அணுஎண் | 20 | 35 | 38 |

X உம் Z உம் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவை X உம் Y உம் ஒரே ஆவர்த்தனத்தைச் சேர்ந்தவை இவற்றைப்பற்றிய கூற்றுக்களில் மிகவும் பொருத்தமானது.

(1) X ஐவிட Y மின்னெதிர் இயல்பு குறைந்தது

(3) X இன் மின்னெதிர் இயல்பு Y யினதும் Z இன்தும் இடைப்பட்டது.

(3) Y கூடிய பருமனைக் கொண்டிருக்கும்

(4) X குறைந்த பருமனைக் கொண்டிருக்கும்

(5) Z இன் மின்னெதிர் இயல்பு X இனதும் Y இனதும் மின்னெதிர் இயல்புக்கு இடைப்பட்டது.

27. 16 புரோத்தன்கள், 16 நியூத்திரன்கள். 18 இலத்திரன்கள் ஆகியவற்றை கொண்டதுணிக்கையும் 17 புரோத்தன்கள், 18 நியூத்திரன்கள் 18 இலத்திரன்கள் ஆகியவற்றைக் கொண்ட துணிக்கையும்

(1) சமதானிகள் (2) நேரயன்கள் (3) உலோகங்கள்

(4) எதிரயன்கள் (5) பிறதிருப்பங்கள்

28. 109° 28′ இலும் கூடிய பிணைப்புக்கோணத்தையுடைய சேர்வை

(1) $SO_2$ (2) $CH_4$ (3) $H_2O$ (4 $NCl_3$ (5) $HgCl_2$

29. $F^-$, $Na^+$, $Ne$ ஆகியவற்றின் ஆரைகளின் பெறுமானம்

(1) $Ne < F^- < Na^+$ (2) $F^- < Ne < Na^+$

(3) $Na^+ < F^- < Ne$ (4) $Na^+ < Ne < F^-$

(5) $Ne < Na^+ < F^-$

30. ஒன்றைத் தவிர்ந்த எல்லா மூலகங்களுடனும் ஒட்சிசன் துரிதமாகத் தாக்கமுறும் தாக்கத்துக்குட்படாத மூலகம் எது

(1) $Cl_2$ (2) Na (3) P (4) Ca (5) S

31. பின்வருவனவற்றுள் முனைவுத்தன்மையுள்ள மூலக்கூறு

(1) $BeF_2$ (2) $CH_2Cl_2$ (3) $BF_3$ (4) $O_2$ (5) $CH_4$

32. மூலகம் A யின் அணுஎண் Z ஆகும் அதன் இலத்திரனிலையமைப்பு $(n-1)d^3\ NS^2$ ஆகும் அணுஎண் $(Z-2^0)$ உடைய மூலகம்



(1) அலோகம் (2) காரஉலோகம் (3) காரமண் மூலகம்

(4) தாண்டல் மூலகம் (5) அருமண் மூலகம்

33. வைரமும், பென்சிற்கரியும்

(1) சமதானிகள் (2) சமபாரங்கள்

(3) சமவுரு இயல்புடையன (4) புறதிருப்பங்கள்

(5) மின்னை நன்ருக கடத்துபவை.

34. சில மூலகங்களிற்கு அடுத்தடுத்து அமையும் அயனாக்க அழுத்தங்கள் இலத்திரன் உவோற்றில் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் எது ஆவர்த்தன அட்டவணையின் நான்காவது கூட்டத்திற்கானது

| | 1-வது | 2-வது | 3-வது | 4-வது | 5-வது |
|---|---|---|---|---|---|
| (1) | 5·138 | 47·29 | 71·65 | 98·88 | 138·60 |
| (2) | 13·01 | 23·80 | 39·90 | 53·5 | 67·8 |
| (3) | 6·111 | 11 87 | 51·21 | 67·0 | 84·39 |
| (4) | 8·149 | 16·34 | 33·46 | 45·13 | 166·73 |
| (5) | 5·98 | 18·823 | 28·44 | 119·96 | 153·77 |

அணு எண் ஒழுங்கில் ஆவர்த்தன அட்டவணையில் அடுத்தடுத்து வரும் பத்து மூலகங்களின் அணு ஆரைகள் தரப்பட்டுள்ளன. இத் தரவைக்கொண்டு 31 தொடக்கம் 33 வரையுள்ள வினுக்களிற்கு விடைதருக.

| மூலகம் | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அணுஆரை (A°) | 0·77 | 0·75 | 0·73 | 0·72 | 1·31 | 1·54 | [illegible]·30 | 1·18 | 1·11 | 1·06 |

35. ஒரே ஆவர்த்தனத்தில் காணப்படக்கூடிய மூன்று மூலகங்கள்

(1) EFG (2) DEF (3) ABJ (4) FGH (5) I,J,A

36. ஒரே கூட்டத்தில் காணப்படக்கூடிய இரு மூலகங்கள்

(1) A, B (2) E, F (3) AJ (4 AI (5) CJ

37. ஒன்றுடனொன்று சேர்ந்து கூடிய அயன்தன்மை உடைய சேர்வை உருவாக்கும் மூலகங்கள்

(1) GD 2) FC (3) FD (4) HD (5) GC

38. பின்வருவனவற்றில் எது நீர்க்கரைசலில் கூடிய அசையும் தன்மையைக் கொண்டிருக்கும்

(1) $Li^+$ (2) $K^+$ (3) $Na^+$ (4) $Cs^+$ (5) $H^+$

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. செ. சல்பூரிக்கமிலம், ஒட்சாலிக்கு அமிலத்துடன் தாக்கும்போது பெறப்படுவது

(1) $CO$ (2) $CO_2$ (3) $CO$ வும், $O_2$ வும்
(4) $CO_2$ வும் $SO_2$ வும் (5) $CO$ வும் $CO_2$ வும்

40. அமில $KMnO_4$ கரைசல் $H_2O_2$ கரைசலுடன் சேர்க்கப்பட்ட போது

(1) $MnO_4^-$, $Mn^{2+}$ ஆக ஒட்சியேற்றப்படுகின்றது
(2) $H_2O_2$, $H_2O$ ஆக தாழ்த்தப்படுகின்றது
(3) ஒட்சியேற்றம், தாழ்த்தல் எதுவுமேரிகழவில்லை
(4) $H_2O_2$, $O_2$ ஆக ஒட்சியேற்றப்படுகின்றது
(5) $H_2O_2$, $O_2$ ஆகத் தாழ்த்தப்படுகின்றது.

41. கரைசல் உள்ள $H_2S$ அமிலமாக இயங்கும்போது தருவது.

(1) கந்தகசல்பேற்று (2) சல்பைற்று
(3) சல்பைட்டுமாத்திரம் (4) சல்பைட்டும் சல்பேற்றும்
(5) சல்பைட்டும் இருசல்பைட்டும்

42. தொங்கல் நிலையில் உள்ள $PbS$ க்கு $H_2O_2$ கரைசலைச் சேர்க்கும் போது

(1) நிறமற்ற கரைசல் தோன்றும்
(2) எதுவித மாற்றமும் இல்லை
(3) தொங்கல் கருமையாகமாறும்
(4) தொங்கல் வெள்ளையாக மாறும்
(5) கந்தகம் வீழ்படிவாகின்றது.

43. பின்வரும் எந்தப் பொருள்களின் பரும்படி தயாரிப்பில் அதில் சம்பந்தப்பட்ட மூலப்பொருட்கள் கடல் நீரிலிருந்து பெறப்படுவதில்லை.

(1) $Cl_2$ (2) $Mg$ (3) $Na_2CO_3$ (4) சாதாரணகண்ணாடி
(5) $K_2CO_3$

44. ஒரு நிறமற்ற பளிங்குத்திண்மம் $X$ நீரில்கரைகிறது வெப்பமேற்றியபோது மற்றைய விளைவுபொருட்களுடன் ஒட்சிசனைக் கொடுத்தது. $X$ இன் நீர்க்கரைசல் ஐதான $HCl$ ஐதான $H_2SO_4$ ஆகியவற்றுடன் வீழ்படிவைக் கொடுத்தது $X$ அனேகமாக

(1) $Hg(NO_3)_2$ (2) $Pb(CO_3)$ (3) $NH_4Br$
(4) $HgCl_2$ (5) $CuCl_2$



45. ஒரு நேருப்பைக் கொண்ட கரைசலினுள் $BaCl_2$ சேர்த்தபோது வெண்ணிற வீழ்படிவு பெறப்பட்டது இவ்வீழ்படிவு ஐதான $HNO_3$ இல் கரையவில்லை நேருப்பில் உள்ள எதிரயன்

(1) $PO_4^{--}$ (2) $SO_3^{--}$ (3, $CO_3^{--}$ (4) $SO_4^{--}$

46. சேர்வை $X$ உடன் செறி. $H_2SO_4$ ஐ சேர்த்து வெப்பமேற்றிய போது ஒரு கடும் நிறமுள்ள வாயு வெளிவந்தது. இவ்வாயு $H_1S$ கரைசலினூடாக செலுத்தியபோது நிறநீக்கமடைந்தது. இக்கரைசலில் உள்ள மேலதிக $H_2S$ அகற்றப்பட்டு அதற்குள் $AgNO_3$ கரைசல் சேர்க்கப்பட்டபோது ஐதான $HNO_3$ இல் கரையாத மஞ்சள்நிற விழ்படிவு பெறப்பட்டது. $X$ இனது கரைசல் $NaOH$ உடன் பசியநீல வீழ்படிவைக் கொடுத்தது. இவ் வீழ்படிவு சிறிதளவு $Na_2O_2$ இல் கரைத்தது. $X$ ஆனது

(1) $CuBr_2$ 2) $Ni(NO_3)_2$ (3) $CrBr_3$
(4) $Cr(NO_3)_2$ (5) $COI_2$

47. வெண்ணிறமான திண்மம் ஒன்று வெப்பமேற்றப்படும்போது ஒளிரும் குச்சியை மீண்டும் எரியச் செய்யும் வாயுவைக் கொடுத்தது. பெறப்பட்ட மீதி ஐதான $HCl$ லுடன் கபிலநிறமான தூமத்தைக் கொடுத்தது. அவ் வெண்ணிறத்திண்மம்

(1) $Pb(NO_3)_2$ (2) $KNO_3$ 3) $NH_4NO_3$
(4) $NaNO_2$ (5) $Mg_3N_2$

48. $CO_2$ வாயுவை தயாரிப்பதற்கு பின்வருவனவற்றுள் எத்தாக்கம் பொருத்தமற்றது.

(1 $CaCO_2 + H_2SO_4$ (2) $Na_2CO_3 + HCl$
(3) $NaHCO_3 + HCl$ (4) $CuCO_3 - HNO_3$
(5) $(NH_4)_2CO_3 + H_2SO_4$

49. பின்வருவனவற்றுள் எதனுடன் தாக்கம் புரியும்போது $H_2O_2$ ஒட்சியேற்றும் கருவியாக இயங்கவில்லை.

(1) $PbS$ (2) $H_2SO_3$ (3) அமில $KI$
(4) $Ag_2O$ (5) கார $Cr(OH)_3$

50. ஐதரசனை ஆவர்த்தன அட்டவணையில் கூட்டம் ஒன்றில் சேர்ப்பதற்கு பொருத்தமான ஆதாரங்கள்.

(1) அதன் தாழ்த்துமியல்பு
(2) மூலக்கூறு ஈரணுக்களைக் கொண்டது
(3) ஒருவலுவளவு (4) அலசன்களுடன் கூடியநாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. கனிசமான விஜோச்சலில் அலுமினியஞ் சல்பைட்டை ஆக்கச் சிறந்தமுறை

(1) அலுமினியஞ் சல்பேற்றுக் கரைசலில் $H_2S$ செலுத்துதல்
(2) சூடாக்கப்பட்ட $Al_2O_3$ மீது $H_2S$ செலுத்துதல்
(3) தூளாக்கப்பட்ட அலுமினியத்தை கந்தகத்துடன் சூடாக்கல்
(4) $AlCl_3$ கரைசலுடன் $(NH_4)_2S$ கரைசலைச் சேர்த்தல்
(5) பொற்றுசியப் படிகாரக் கரைசலுக்கு, $Na_2S$ கரைசலைச் சேர்த்தல்

52. வெளிற்றும் தூளின் சூத்திரம்

(1) $Ca(OCl)_2$ (2) $Ca(OCl)_2, Ca(ClO_3)_2 \cdot Ca(OH)_2 \cdot 2H_2O$
(3) $Ca(OCl)_2\ CaCl_2 \cdot H_2O$
(4) $Ca(OCl)_2 \cdot Ca(OH)_2 \cdot CaCl_2 \cdot H_2O$
(5) $Ca(OCl)_2 \cdot Ca(OH)_2$

53. சுண்ணாம்பின் மெற்ரு பொசுபேற்று என்னும் பெயரில் உடயோகிக்கப்படும் உரம் பின்வருவனவற்றில் எக்கலவையினால் ஆனது.

(1) $Ca_3(PO_4)_2 + CaCO_3$ (2) $Ca_3(PO_4)_2 + CaSO_4 2H_2O$
(3) $Ca(H_2PO_4)_2 + CaSO_4$ (4) $Ca(H_2PO_4)_2 + CaCO_3$
(5) $Ca_3(PO_4)_2$

54. ஐதரசன் குளோரைட்டு

(1) நீரில் கரையக்கூடிய அயன்சேர்வை
(2) குளோரினிலும் சிறிதளவு பாரம் கூடிய பங்கீட்டு வலுவளவுச் சேர்வை.
(உ) அலுமினியந் தூளுடனுஞ் சோடியமைதரொட்சைட்டுடனும் ஓர் உப்பை வெப்பமாக்கியபோது அமோனியா வாயு ஆக்கப்பட்டது.

61. $A$ எனப்பட்டது $X$ என்னும் ஒரு தாண்டலல்லாத மூலகத்தினொரு சாதாரண உப்பாகும். $A$ நீருடன் தாக்கமுறாத ஒரு வெள்ளை நிறமான திண்மம். இஃது ஐதான $HCl$ இல் சுறுசுறுப்பான நுரைத்தெழுதலுடன் கரைந்து $B$ எனப்படும் ஒரு நிறமற்ற கரைசலைக் கொடுத்தது. ஒரு செறிந்த கரைசலான $B$ யுடன் ஐதான $H_2SO_4$ சேர்த்தபோது ஒரு வெண்ணிறமான, வீழ்படிவு கிடைத்தது. இவ் வீழ்படிவு அமிலங்களில் அரிதாய் கரைந்தது. ஆனால், சூடான அமோனியஞ் சல்பேற்றில் எளிதாய்க் கரைந்தது.

$A$ ஐ இன்னதெனக் கண்டு மேற்கூறப்பட்ட தாக்கங்களை விளக்குக

0 15 கி $A$ஐ ஐதான $HCl$ இற் கரைத்து நடு நிலையாக்கி அதன்பின் இக் கரைசலுக்கு அமோனிய மொட்சலேற்றுக் கரைசல் சேர்க்கப்படடது. பெற்ற வீழ்படிவு வடித்துக்கழுவியபின் ஐதான $H_2SO_4$ இற் கரைக்கப்பட்டது இக்கரைசலை நியமிப்புச் செய்தபோது ஒவ்வோர் இலீற்றரிலும் 2·4கி $MnO_4^+$ அயன்களை கொண்ட $KmNO_4$ கரைசலில் 25·30 மி. இ. தேவைப்பட்டது. $A$ யைக் கொண்ட இம்மாதிரியில் $X$ இனது வீதத்தைக் கணக்கிடுக.

மேற்கூறப்பட்ட பரிசோதனையில் உட்பட்ட தாக்கங்களை விளக்குக.

($X$ இனது அணுநிறையை 34·5 எனக் கொள்க.)

62. ஐதான ஐதரோக்குளோரிக்கு அமிலத்திற் கரையா மாநிற $X$ எனப்படும் சேர்வையொன்று சூடான செறி ஐதரோக் குளோறிக்கமிலத்தில் வெறுப்பான மணத்தையுடைய வாயுவைத் தந்ததுடன் இலேசாகக் கரைந்தது. இவ்வாயு ஐதான அயடீன் கரைதலை நிறமற்ற தாக்கி ஒரு மெல்லிய வெள்ளை வீழ்படிவைத்தந்தது. சூடான செறி ஐதரோக் குளோறிக் கமிலத்திற் கரைவுற்ற $X$ இன் கரைசலிலுள்ள கற்றயன் யாதெனக் காணப் பரிசோதனை செய்யப்பட்டது அதன் பெறுபேறுகள் பின்வருமாறு.

| பரிசோதனை | தோக்கல் |
|---|---|
| 1. கரைசல் குளிராக்கப்பட்டு ஐதாக்கல் செய்யப்பட்டு $H_2S$ செலுத்கப்பட்டத. | வீழ்யடிவு |
| 2. கரைசலுக்கு $NaOH$ சேர்க்கப்பட்டது. | அதிக $NaOH$ இல் கரையும் வெள்ள வீழ்படிவுண்டாகியது |
| 3. $KCNS$ ஐயும் $FeCl_3$ ஐயும் சேர்க்கும்போது உண்டாகும் சிகப்புக் கரைசலுக்கு $X$ இன் கரைசல் சேர்க்கப்பட்டது. | சிகப்பு நிறம் மறைந்தது. |



காரணங்காட்ட $X$ இன் அடையாளத்தை உய்த்தறிக. இதில் சம்பந்தப்பட்ட தாக்கங்கள் யாவையும் விளக்குக.

63. சேர்வைகள் $A$, $B$, $C$ ஆகியனவற்றைக் கண்டுபிடிக்குக

(a) $A$ ஒரு வெண்ணிறமான திண்மம் சுவாலைப்பரிசோதனையில் செங்கட்டி சிகப்பு நிறத்தைத்தந்தது. $A$ யை வன்மையாக சூடாக்கியபோது ஆவியொன்று உண்டாகி ஆவிப்பறப்புள்ள ஒரு திரவமாக ஒடுங்கியது. அத்திரவம் சோடியத்துடன் (குளிர் நிலையில்) தாக்கமுறவில்லை ஆனால் $PCl_5$ உடன் தாக்கமுற்றது இருந்தும் தூமங்கள் எழலில்லை. அது $NaOH$ கரைசல், அயடீன் சேர்த்தபோது தாக்கமுற்றது. தாக்கக்கலவை குளிரச் செய்யப்பட்டபோது மென்மஞ்சள் நிறமான பளிங்குருவான வீழ்படிவைத்தந்தது.

(b) $B$ ஒரு நீறமான கரைசல் அமோனியம் ஐதரொட்சைட்டுடன் சேர்க்கப்பட்டபோது மென் நிலநிறமான வீழ்படிவைத் தந்தது. அவ்வீழ்படிவு அதிகளவு அமோனியாவில் கரைந்து கடும் நிலநிறமான கரைசலைத் தந்தது. சேர்வை $B$ பொற்றுசியம் அயோடைட்டுடனோ அல்லது பேரியம் குளோறைட்டுடனோ சேர்க்கப்பட்டபோது வீழ்படிவு உண்டானது. இவ் வீழ்படிவு $HCl$ இல் கரையா.

(c) $C$ செறிந்த $H_2SO_4$ உடனும் $MnO_2$ உடனும் சேர்த்து சூடாக்கியபோது அரிக்கும் தன்மையுள்ள ஒரு வாயு உண்டாகியது. $C$ யின் நீர்க்கரைசலினுள் இஸ்தனசுக் குளோறைட்டு நீர்க்கரைசலைச் சேர்த்தபோது வெண்ணிற வீழ்படிவு உண்டாகியது அவ்வீழ்படிவு நேரம் செல்லச்செல்ல நரைநிறமாக மாறியது.

64. பின்வரும் பொருட்களை உம்மால் இயன்றவரையிற் கண்டுபிடித்து அவை ஈடுபட்ட தாக்கங்களை விளக்குக.

(a) ஒரு வெண்ணிறமான திண்ம $A$ வன்மையாக வெப்பப்படுத்தப்பட்டபோது வெண்ணிறமான தூமத்தைக் கொடுத்ததுடன் கறுப நிறமாக மெதுவாகமாறியது. $A$ யினுள் அதிகளவுநீர்சேர் அமோனிய சேர்த்தபோது கடும் நீலநிறமான கரைசல் பெறப்பட்டது. $A$ யினுள் செறிந்த $HCl$ அமிலம் சேர்த்தபோது மஞ்சள் கலந்த பச்சை நிறமான கரைசல் பெறப்பட்டது. அக்கரைசலை நீரினுல் ஐதாக்கியபோது மென் நீலநிறமாக மாறியது. அந்நீர்க்கரைசலினுள் பொற்றுசியம் அயடைட்டு சேர்த்தபோது வெண்ணிற திண்மம் படிவானதுடன் மேலுள்ள திரவம் கபில நிறமாயது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. (a) அமோனியம் புளோரைட்டு நிலையான பளிங்குருவான திண்மம் ஆனால் பொசுப்போனியம் புளோரைட்டுப் $0°$ ச. இற்கு கீழேயே முழுமையாகப் பிரிகை அடையக்கூடியது. இம் மாற்றத்திற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

(b) பின்வரும் சேர்வைகளை அவற்றின் (காரவன்மை) மூலவன்மை ஏறுவரிசையில் இடுக. அவ்வாறு நீர் இடுவதற்கு உரிய காரணத்தையும் குறிப்பிடுக.

$NH_3$; $HN:NH_2$; $H_2NOH$; $H_2N:NO_2$

(c) ஆவர்த்தன அட்டவணையில் முதல் வரிசையில் உள்ள சில மூலகங்களின் ஐதரைட்டுக்கள் புளோரைட்டுக்கள் ஆகியனவற்றின் பிணைப்புக்கோணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஐதரைட்டில் இருந்து புளோரைட்டாக மாறும்போது பிணைப்புக்கோணம் குறைவதற்கு என்ன விளக்கம் கொடுப்பீர்.

| C | | N | | O | |
|---|---|---|---|---|---|
| $C_2H_4$ | 120 | $NH_3$ | 170° | $H_2O$ | 104·5 |
| $C_2F_4$ | 114 | $NF_3$ | 102 | $F_2O$ | 101·5 |

66. விளக்குக:

(a) புளோரீனின் ஆசாதாரண இயல்புகள்பற்றி எழுதுக அதன் அசாதாரண இயல்புகளுக்குரிய காரணங்களை எழுது.

(b) வைரம் வன்மையானதாகவும், மின்கடத்திலியாகவும் இருக்கிறது ஆனால் காரீயம் மென்மையானதாகவும், சிறந்தமின்கடத்தியாகவும் இருக்கிறது ஏன்?

(c) காபன் நாலேலைட்டு, சிலிக்கன் நாலேலைட்டைப்போல் சுலபமாக நீர்ப்பகுப்படைய மாட்டாது.

(d) $CO_2$ ஒரு வாயு ஆனால் $SiO_2$ ஒரு திண்மம்.

(e) $BH_3$ ஒரு உறுதியற்ற சேர்வை.

(f) போரனின் மூஏலைட்டுக்களின் இலத்திரன் ஏற்கும் இயல்பு அலசன் அணுக்களின் பருமன் கூடும்போது குறைகின்றது.

(g) $(CH_3)_3\ N:BH_3$ என்ற சேர்வையில் இருக்கும் இலத்திரன்களின் வெற்றிடப் பரம்பலும் பிணைப்பின் இயற்கையும்.

(h) $LiCl$ முனைவுள்ள சேதசனங்கரைப்பான்களிற் கரையும்.

(i) $NH_3$, $NF_3$, $H_2O$ ஆகியனவற்றின் பிணைப்புக் கோணங்கள் முறையே 107°, 102°, 105° ஆகும்.



(j) $LiSO_4$ படிகாரங்களை உண்டாக்காது.

(k) பெரசு உப்புக்கள் சுலபமாகப் பெரிக்கு உப்புக்களாக ஒட்சியேற்றப்படுகின்றன.

(l) ஒதோ பொசுப் போரிக்கமிலத்தின் தொடரான அயனாக்கமாறிலிகள் முறையே $10^{-2}$, $10^{-7}$, $10^{-12}$ ஆகியனவற்றின் தொடராக இருக்கின்றன

(m) ஆவர்தன அட்டவணையில் கூட்டம் 1A இல் உள்ள $Li \longrightarrow CS$ வரை உள்ள மூலகங்களின் பல் ஏலைட்டுக்களின் உறுதியான தன்மை அணுநிறை கூடுவதுடன் கூடுகின்றது.

(n) $Li_3N$ அதன் மூலகங்களில் இருந்து உண்டாகும் தாக்கம் அகவெப்பத் தாக்கம் ஆனால் $Na_3N$ உண்டாகும் தாக்கம் புறவெப்பத்தாக்கமாகும்.

(o) $NaCl$ நீரில் கரையக்கூடியது ஆனால் பென்சீனிற் கரையது.

(p) $LiI$ சேதனக் கரைப்பான்களிற் கரையக்கூடியது.

(q) $CS$, $Na$ இலும் பார்க்க மின்னேர் இயல்பு கூடியது.

(r) கார உலோகங்களின் உயர் ஒட்சைட்டுக்களின் (Super oxide) வெப்ப உறுதிப்பாடு அவற்றின் அணுஎண் கூடுவதுடன் கூடுகின்றது.

(s) $Li^+$ உம் $Mg^{2+}$ உம் அண்ணளவாக ஒரே இரசாயன இயல்பைக் காட்டக்கூடியவை.

(t) வெள்ளியின் இருவலுவளவுள்ள உப்புக்கள் $AgF_2$ உம் $AgO$ உம் ஆகும்.

(u) $CaSO_4$ நீரிற் கரையக்கூடியது $[(NH_4)_2\ SO_4]$ இருக்கும்போது $BaSO_4$ கரையமாட்டாது $Ba(OH)_2$, $Ca(OH)_2$ இலும் கரைதிறன் கூடியது

67. சிறிய கோடுகளை உபயோகித்துப் பின்வரும் சேர்வைகளின் கட்டமைப்புச் சூத்திரங்களை எழுதுக.

(1) $H_2S_2O_5$ (2) $H_2SO_4$ (3) $K_2C_2O_4$ (4) $H_5P_3O_{10}$
(5) $H_3PO_5$ (6) $H_4S_2O_6$ (7) $HPO_3$ (8) $H_3PO_3$
(9) $H_2P_2O_7$ (10) $H_3PO_4$

68. சேர்வை X நீரில் கரையாதது ஐதான $HNO_3$ இல் கரையும்போது பாசிச்சாயத்தாளுக்கு அமில இயல்புள்ள வாயுவைக்கொடுத்தது. இவ்வாயு $Ba(OH)_2$ கரைசலினுள் செலுத்தப்பட்டபோது வீழ்படிவைக் கொடுத்ததுடன் புரோமீன் நீரையும் நிறநீக்கம் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதான $HNO_3$ இல் பெறப்பட்ட X இன் சலரசல்களை மூன்று பரிசோதனைகளுக்கு உள்ளாகியபோது பெறப்பட்ட அவதானங்கள் கீழேஉள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பரிசோதனை | | அவதானம் |
|---|---|---|
| (1) $H_2S$ செலுத்தப்பட்டது | — | வீழ்படிவு உண்டானது (கந்தகம் அல்ல. |
| (2) $NaOH$ சேர்க்கப்பட்டது | — | வீழ்படிவு உண்டாகி அதிக அளவு NaOH இல் கரைந்தது. |
| (3) ஐதான $H_2SO_4$ சேர்க்கப் பட்டது | — | வீழ்படிவு. |

எல்லாத் தாக்கங்களுக்கும் விளக்கம்தந்து X ஐக் கண்டுபிடிக்குக.

69. பின்வரும் சேர்வைகளில் உள்ள மூலகங்களின் ஒட்சியேற்ற எண்களைக் குறிப்பிடுக.

Mn இனது (1) $KMnO_4$, $K_2MnO_4$, $MnO_2$, $MnSO_4$

Cr இனது (2) $K_2Cr_2O_7$, $K_2CrO_4$, $Cr_2(SO_4)_3$, $CrCl_3$

S இனது (3) $Na_2S_2O_3$, $Na_2S_4O_6$, $H_2SO_4$, $H_2SO_3$, $H_2S$,

(4) (a) $K_2PtCl_6$ (b) $NaIO_3$ (c) $CuFeS_2$
(d) $HClO_3$ (e) $ICl_4$ (f) $KI_3$
(g) $KO_2$ (h) $Q_2F_2$ (i) $NaN_3$
(j) $NaNO_3$ (k) $I_2O_5$ (l) $SOCl_2$

70. விளக்குக.

(a) N, As, Bi ஆகியவை ஆவர்த்தன அட்டவணையில் V-ம் கூட்டத்தைச் சேர்ந்தவை ஆனால் $N_2$ மிகவும் மின் எதிரியல்பு கூடியதும் வாயு நிலையில் உள்ளதும், As ஒரு திண்மமும் உலோகப்போலியும், Bi ஒரு திண்மமும் உலோகமும் ஆகும்.

(b) $NH_3$, $PH_3$, $AsH_3$ ஆகியவற்றின் அமைப்பு, இலத்திரன் நிலையமைப்பு நீர்ப்பகுப்புக்கு உறுதியானதன்மை.

(c) $MnO_2$, HF உடன் உறும் தாக்கத்தை உபயோகித்துப் புளோரீனைத் தயாரிக்க முடியாது.

(d) புளோரீன் மின் எதிர் இயல்புகூடிய மூலகமாக இருந்தும் HCl நீர்க்கரைசல் HF நீர்க்கரைசலிலும் வன்மையான அமிலமாக இருக்கின்றது.

(e) $CrF_4$ உம் $SF_6$ உம் தயாரிக்கப்படலாம் ஆனால் $CrCl_4$ உம் $SCl_6$ உம் தயாரிக்கமுடியாது.

(f) குளோரோ அசற்றிக்கமிலம் அசற்றிக்கமிலத்திலும் வன்மை அமிலம்.



71. விளக்குக:

(a) பண்பறி கூட்டம் II இல் $(NH_4)_2S$ இன் உபயோகம்.

(b) ஒரு உப்பின் வீழ்படிவு வடிதாளின் ஊடுசென்றால் எவ்வாறு செல்லாதவாறு தடுக்கலாம்

(c) Pb சிலவேளைகளில் IIம் கூட்டத்தில் செந்நிறமான வீழ்படிவைக் கொடுக்கும்.

(d) ஐ HCl கரைசலில் செம்மஞ்சள் நிறமாகவுள்ள ஒரு கலவை, அக்கரைசலினுள் $H_2S$ செலுத்தும்போது பச்சைநிறமாக மாறிப்பின்பு, மென்மஞ்சள் நிறமான வீழ்படிவை உண்டாக்கியது.

(e) $Cu^{++}$—$Cd^{++}$ ஆகிய அயன்களின் பிரித்தெடுப்பில் KCN இன் உபயோகம்.

(f) $Al^{3+}$ ஐயும் $Mg^{2+}$ ஐயும் வேறுபடுத்துவதற்கு கரைசலில் ஒரு பரிசோதனை.

(g) பண்பறிபகுப்பில் சுவாலைப் பரிசோதனை செய்யப்படும்போது ஏன் படிப்படியாகச் செய்யப்படுகின்றது.

72. பின்வரும் அவதானங்களில் இருந்து V தொடங்கி Z வரையுள்ள சேர்வைகள் பற்றி என்ன முடிவுக்கு வருவீர் அப்பொருட்களை முழுமையாகக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய ஒரு பரிசோதனையையும் தருக.

(a) V என்ற மூலகம் சோடியத்துடன் அணுவிகிதம் 1 : 1 உள்ள சோடியம் உப்பை உண்டாக்கும் இவ்வுப்பின் நீர்க்கரைசல் வெள்ளிநைத்திரேற்றுக் கரைசலுடன் ஐதான நைத்திறிக்கமிலத்திற் கரையாத வீழ்படிவைக் கொடுக்கும்.

(b) W ஒரு மஞ்சள் நிறமான திண்மம் அது உருகி கறுப்பு (கடும்) நிறமான திரவத்தைக் கொடுக்கும், உருகும் வெப்பநிலை நீரின் கொதி நிலையிலும் அதி உயர்ந்தது அல்ல.

(c) X ஒரு கடும் சிகப்பு நிறமான திரவம் அதன் கொதிநிலை 60°ச.

(d) Y ஒரு மினுமினுப்புந் தன்மையுள்ள உலோக இயல்புள்ள திண்மம். அது குளோறீனுடன் $YCl_4$ என்ற ஆவிப் பறப்புள்ள குளோரைட்டைக் கொடுத்தது.

(e) Z ஒரு செம்மஞ்சள் நிறமான கரைசல் அதனுள் கந்தக ஈரொட்சைட்டைச் செலுத்தும்போது பச்சைநிறமாக மாறியது.

73. ஆவர்தன அட்டவணையில் IV B கூட்டத்தில் உள்ள மூலகங்கள் (C, Si, Ge, Sn, Pb) ஆகியன பற்றிப் பொதுவான கட்டுரை வரைக. கட்டுரையில் அவற்றின் ஒட்சைட்டுக்கள் ஐதரொட்சைட்டுகள், குளோறைட்டுக்கள் ஆகியவற்றை உதாரணமாக எடுக்குக. அவற்றின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அணு எண் மாறுவதுடன் எவ்வாறு மாறுகின்றன எனக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. பங்கீட்டுவலுச் சேர்வைகள் அவிப்பறப்புள்ளவை உருகுநிலை குறைவானவை, நீரல்லாத கரைப்பான்களிற் கரைபவை ஆனால் நீரில் கரையாதவை, மின்பகு இயல்பு இல்லாதவை ஆகும். மின்வலுச் சேர்வைகள் இதற்கு எதிரான இயல்புகளுள்ளவை. இக்கூற்றை $S$, $O_2$, $HCl$, $NaCl$, $CHCl_3$, $NH_4Cl$ ஆகிய சேர்வைகளை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

75. அலுமினியம் அல்லது இரும்பு இவற்றில் ஒன்றிற்கு இயற்கையாகக் காணப்படும் அமைவு, அல்லது இயற்கையாகக் காணப்படும் சேர்வைகள் என்பதைப்பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

கனிப்பொருட்களில் இருந்து உலோகத்தை எவ்வாறு பெற முடியும் என்பதற்கு ஒரு முறையை விபரிக்குக.

இவ்வுலோகத்தின் +3 ஒட்சியேற்ற எண்ணுள்ள குளோரைட்டை உலோகத்திலிருந்து பெறுவதற்குரிய முறையை முக்கியமான பரிசோதனை விபரங்களுடன் விபரிக்குக.

உலோக குளோரைட்டுக்களின் பௌதிக இயல்புகள்பற்றிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அத்தரவுகளில் இருந்து நீர் தெரிவுசெய்த குளோரைட்டுப்பற்றி என்ன முடிவுக்கு வருவீர்.

$Al = 27;\ Fe = 5?;\ Cl = 35{\cdot}5$

| | அலுமினியம் குளோரைட்டு | இரும்பு (iii) குளோரைட்டு |
|---|---|---|
| உருகுநிலை | 180° ச. | 29° ச. |
| கொதிநிலை | 190° ச. | தரப்படவில்லை |
| | பென்சினிற் கரையக் கூடியது | பென்சினிற் கரையக் கூடியது |
| மூலக்கூற்றுநிறை | 267 பென்சீனிலும்ஆவி நிலையிலும் சிறிது கூடியது | 324 பென்சினில் 167 எதனோலில் |
| நீர்க்கரைசலின் pH | 7 இலும் குறைவு | 7 இலும் குறைவு |

அலுமினியம், இரும்புடன் செறி $HNO_3$ எவ்வாறு தாக்கமுறும் என்பதை ஒப்புமை செய்து எழுதுக.

# அலகு 9 D

## அறிவுறுத்தலின் சுருக்கம்

| கூற்று | காரணம |
|---|---|
| (i) உண்மை | உண்மை, காரணம் சரியான விளக்கம் |
| (ii) உண்மை | உண்மை, காரணம் சரியான விளக்கமல்ல |
| (iii) உண்மை | பொய் |
| (iv) பொய் | உண்மை |
| (v) பொய் | பொய். |

| கூற்று | காரணம் |
|---|---|
| 1. $Na^+$, $Ne$, $F^-$ ஆகிய மூன்றிலும் ஒரேயளவு எண்ணிக்கையான இலத்திரன்கள் காணப்பட்ட போதிலும் அம் மூன்றினதும் ஆரைகள் சமமாகக்காணப்படுவதில்லை. | ஏனெனில்,, அம் மூன்றினதும் கருவிலுள்ள ஏற்றம்வித்தியாசமாகக் காணப்படுகின்றது. |
| 2. போரிக்கமிலத்தை காரங்களுடன் சாதாரண காட்டிகளை உபயோகித்து நியமிக்கமுடியாது ஆனால் கிளிசரோல் சேர்த்தால் நியமித்தல் செய்யப்படலாம். | ஏனெனில் போரிக்கமிலம் ஒரு மிகவும் மென்னமிலம். ஆகவே சாதாரண காட்டியில் நிறமாற்றத்தைச் சரிவர ஏற்படுத்தாது. ஆனால் கிளிசரோல் ஊக்கியாகத் தொழிற்பட்டு போரிக்கமிலத்தை ஒருமூல வமிலமாக்கிக் கூட்டப்பிரிகையைக் கூட்டுகிறது. |
| 3. பொற்றாசியம் பரமாங்கனேற்று ஒட்சாலிக்கமில வலுப்பார்த்தலில், ஐ. சல்பூரிககமிலம் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு 60° C க்கு வெப்ப மேற்றப்படுகிறது. | ஏனெனில், 60°Cயிற்றான் தாக்கம் தொடங்குும. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கூற்று | காரணம் |
|---|---|
| 4. தொகுகை முறைப்படி சல்பூரிக்கமிலத் தயாரிப்பில் வளி வழங்குதல் ஓர் இழிவாக வைத்திருத்தல் வேண்டும். | ஏனெனில், வளியிலுள்ள நைதரசன், கந்தகமூவொட்சைட்டின் பிரிகையைக் கூட்டுகிறது. |
| 5. அசற்றலீனிலுள்ள H, எதிலீனிலுள்ள H இலும் பார்க்க இலகுவாக ஒருபுரோத்தனாக வெளியேறக்கூடியது. | ஏனெனில், எதிலீனில் காபனிலுள்ள $s$ இலத்திரன்கள், $sp$ ஒழுக்குக் கலப்பில் அதிக பங்கெடுக்கின்றது. |
| 6. புளோரீன் செறிந்த நைத்திறிக்கு அமிலத்தினுல் ஒட்சியேற்றப்படலாம். | ஏனெனில், புளோரீன் ஒரு மின் எதிர் மூலகம் ஆகும். |
| 7. NaOH இன் பரும்படித் தயாரிப்பில் இரும்பு அனேட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. | ஏனெனில், இரும்பு NaOH உடன் தாக்கமடைவதில்லை. |
| 8. சோடியம் ஒரு நல்ல மின்கடத்தியாகும். | ஏனெனில் ஈற்றயல் இலத்திரனுக்கு உரிய ஓடு $S^2p^6$ வகையைச் சேர்ந்தது |
| 9. Fe, Al, Cr ஆகியவற்றினது ஐதரொட்சைட்டுகளின் வீழ்படிவு உண்டாகுவதற்கு $NH_4OH$, $NH_4Cl$ கலவை ஒன்று பண்பறிபகுப்பில் பயன்படுத்தப்படுகிறது. | ஏனெனில், $NH_4OH$ இனது கூட்டப் பிரிவு $NH_4Cl$ இனுல் குறைக்கப்படுகிறது. |
| 10. திண்ம சோடியம் குளோரைட்டு ஒரு நல்ல மின்கடத்தியாகும் | ஏனெனில், சோடியம் குளோரைட்டு ஒரு அயனுகும் பொருளாகும். |
| 11. தூய அமிலங்கள் மின்னைக் கடத்துவதில்லை. | அவற்றின் ஐதரசன் அணுவிற்கும் மற்றைய பகுதிக்கும் இடையேயுள்ள பங்கீட்டுப் பிணைப்பைத் துண்டிக்க நீர் மூலக்கூறுகள் இல்லாததால் $H_3O^+$ அயன்கள் உண்டாவதில்லை. |
| 12. $Al_2(SO_4)_3$, $ZnSO_4$ என்பவற்றைக் கொண்டுள்ள கலவையினது நீர்க் கரைசலுக்கு | $Al(OH)_3$ உடன் ஒப்பிடும் பொழுது $Zn(OH)_2$ உறுதி குறைந்தது. அதனுல் $NH_4C$ |



| கூற்று | காரணம் |
|---|---|
| $NH_4Cl$, $NH_4OH$ கரைசல்கள் இடப்படின், $Al^{3+}$ மாத்திரம் $Al(OH)_3$ ஆக வீழ்படிவாகிறது. ஆனுல் $Zn^{2+}$ வீழ்படிவாவதில்லை. | உறுதி குறைவான $Zn(OH)_2$ ஐ வேறு பதார்த்தமாக மாறறிவிடுகின்றது. |
| 13. வெள்ளி குளோரைட்டு நீரில் கரைவதிலும் பார்க்க ஐதான ஐதரோகுளோரிக் கமிலத்தில் குறைவாகக் கரையும். | $Ag^+ + Cl^- \rightleftharpoons AgCl$ (திண்) என்னும் சம நிலையில் இருக்கும் அயன்களில் ஒன்றுன $Cl^-$ ஐதான ஐதரோகுளோரிக் கமிலத்திலிருக்கிறது. |
| 14. தாங்கற்கரைசல்களுக்கு அமிலங்கள் அல்லது காரங்கள் சேர்ப்பின் pH மாறுவதில்லை. | தாங்கற் கரைசல்களுக்கு சேர்க்கப்பட்ட அமிலங்களோ, காரங்களோ அயனுக்கம் அடைவதில்லை. |
| 15. $BaO_2$ போன்று $PbO_2$ உம் ஒரு பரவொட்சைட்டு ஆகும், | எல்லா பரவொட்சைட்டுகளும் குளிர், ஐ $HCl$ உடன் $H_2O_2$ ஐக் கொடுக்கும். |
| 16. 7, 15, 33, 51, 83 என்னும் அணுவெண்களையுடைய மூலகங்களெல்லாம் எதிர்மின் தன்மை உள்ளனவாயிருக்கும். | இவை சடத்துவ வாயுவின் அமைப்பை அடையத் தேவையான மூன்று இலத்திரன்களையும் வேறு மூலகங்களிலிருந்து பெறத் தெண்டிப்பதனுல் எதிர்மின் தன்மை உள்ளனவாய் இருக்கும். |
| 17. வெள்ளி குளோரைட்டின் கரைதிறன் பெருக்கம் வெள்ளி குரூேமேற்றின் கரைதிறன் பெருக்கத்திலும் குறைந்தது | குளோரைட்டு அயனும் குரூேமேற்று அயனும் சம செறிவான கரைசலுக்கு வெள்ளி அயன் கரைசல் சேர்த்தால் வெள்ளி குளோரைட்டு முதலில் படியும். |
| 18. போமிக்கமிலம், $HgCl_2$ கரைசலைத் தாழ்த்துகிறது. | போமேற்று அயனின் ஒட்சியேற்ற எண் −2 ஆகும். |
| 19. 0·1 மூல் $Na, Cl$ ஐக் கொண்ட நீர்க்கரைசலை பன்சன் சுடரடுப்பினுல் நேரடியாகவும், துரி | $NaCl$ 100°ச. இல் அதிகமாக நீரில் கரைவதால் அதிகவளவு சக்தி வெளியேற்றி 100° ச |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கூற்று | காரணம் |
|---|---|
| தமாகவும் வெப்பப்படுத்த, கரைசல் 100° ச. விற்குக் கூடிய வெப்பநிலையில் கொதிக்கிறது. | இலும் கூடிய வெப்ப நிலையில் கொதிக்கிறது. |
| 20. ஒரு அணு ∝ துணிக்கையை வெளிவிடும்போது அதன் அணு எண் நான்கு அளவுகளால் குறைகிறது. | ஏனெனில், ∝ துணிக்கையின் திணிவு நான்கு அளவு ஆகும். |
| 21. வெள்ளிக் குளோரைட்டு நீரில் கரைவதிலும் ஐதான ஐதரோக் குளோறிக்கு அமிலத்தில் கரையும் அளவு குறைவாக இருக்கும். | ஏனெனில், ஐதரோக் குளோறிக்கமிலத்தில் $Cl^-$ (நீர்) அயன்கள் உண்டு அவ்வயன்கள் பின்வரும் சம நிலையில் இருப்பதுபோல் இருப்பதால் $Ag^+_{(நீர்)} + Cl^-_{(நீர்)} \rightleftharpoons AgCl$ (திண்மம்) |
| 22. $N_2$, $H_2$ இலிருந்து $NH_3$ தயாரிப்பில் மட்டான உயர்வெப்ப நிலை உபயோகிக்கப்படும். | ஏனெனில், தாக்கம் புறவெப்பத்தாக்கம் |
| 23. $Fe^{++}$ கரைசலை $KMnO_4$ உடன் வலுப்பார்த்தலில் காட்டி பாவிக்க வேண்டியதில்லை. | ஏனெனில், தாக்கத்தில் உண்டான $Mn^{++}$ நிறமற்றது. |
| 4. கூட்டம் III இல் கரையாத ஐதரொட்சைட்டை படிவாக்குவதற்கு முன்னர் $Fe^{++}$, $Fe^{+++}$ இற்கு ஒட்சியேற்றப்பட வேண்டும். | ஏனெனில், $Fe^{++}$, $NH_4Cl$ முன்னிலையில் $NH_3$ நீர்க் கரைசலுடன் வீழ் படிவு தராது. |
| 25. Cu, Zn தகடுகள் மின்னால் தொடுக்கப்படும்போது இலத்திரன்கள் Zn இலிருந்து பாய்கின்றன | ஏனெனில், Zn, $Zn^{2+}$ அயன்களையும் Cu, $Cu^{-2}$ வையும் இலகுவில் உருவாக்குகின்றன. |
| 26. $H_2O$ க்கு $H_2S$ இலும் உயர் கொதி நிலையுண்டு. | ஏனெனில் ஐதரசன் பிணைப்பு $H_2O$ இல் காணப்படுகிறது. |
| 27. நீரின் கடத்துத்திறன் அயன் சேர்வைகளைக் கரைக்கும்போது கூடுகிறது. | ஏனெனில். இவற்றைக் கரைக்கும்போது தொகுதியில் அயன்களின் அசைவுகள் கூடுகிறது. |



| கூற்று | காரணம் |
|---|---|
| 28. கூழ்க் கரைசல்களை நீரிற் தயாரிக்க முடியாது. | ஏனெனில், நீர் மூலக் கூறுமுனைவு அற்றது |
| 29. தொலுயீனிற் கரைக்கப்பட்ட HCl மின்கடத்திலி. | ஏனெனில், HCl தொலுயீனில் புரோத்தன்களை வெளிவிடாது. |
| 30. $SO_2$ வை $SO_3$ ஆக மாற்றும் வீதத்தை $V_2O_5$ கூட்டும். | ஏனெனில், $V_2O_5$ தாக்கத்தின் ஏவற் சத்தியைக் குறைப்பதால். |

## கேள்விகள் 1 — 10

ஒவ்வொன்றிற்கும் ஒன்று அல்லது பல வாக்கியங்கள் *a, b, c, d* சரியாக உள்ளன. எது சரியெனத் தீர்மானிக்க.

I. *a, b, d* என்பனமட்டும் சரியாகும்,

II. *a c d* என்பனமட்டும் சரியாகும்.

III. *a. d* என்பனமட்டும் சரியாகும்.

IV. *c d* என்பனமட்டும் சரியாகும்.

V. மேல் வருவனவற்றில் ஒன்று அல்லது வேறு கூட்டுவாக்கியங்கள் சரியாக இருப்பின்.

1. ஒரே மூலத்தின் அணுக்கள்.

(*a*) திணிவில் ஒரேமாதிரியானவை (*b*) ஒவ்வொரு கருவுக்கும் ஒரே எண்ணிக்கை நியூத்திரன்களைக் கொண்டவை (*c*) எல்லாவற்றிலும் ஒரேமாதிரியானவை (*d*) ஒவ்வொரு கருவுக்கும் ஒரே எண்ணிக்கையுடைய புரொத்திரன்களைக் கொண்டவை.

8. $O_2$ அணுவின் அமைப்பில் பின்வருவனவற்றில் எது சரியாகக் குறிக்கப்பட்டுள்ளது.
படம். 1

(*a*) இலத்திரன் நிலை *b*) இலத்திரன் அசைவு (*c*) அணுவிற்கு சார்பாக கருவின் அளவு. (*d*) கருவைச் சுற்றியுள்ள இலத்திரனின் எண்ணிக்கை.

3. சோடியம் காபனேற்றில் இருந்து சோடியம் ஐதரொட்சைட் பெறும் வழி.

(1) மென்மையாகச் சூடாக்கி ஒட்சைட்டைப் பெற்றுப்பின் நீரைச் சேர்த்தல்.

(2) சோடியம் காபனேற்றுக் கரைசலைக் கொதிக்கச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சோடியம் காபனேற்றுக் கரைசலை அமோனியாவினால் நிரம்பச்செய்து பின் உண்டாகும் அமோனியம் காபனேற்றை வடித்தல்.

(4) சோடியம் காபனேற்றுக் கரைசலினுள் கல்சியம் ஐதரொட்சைட்டைக் கலந்து, உண்டாகும் கல்சியம் காபனேற்றை வடித்து எடுத்தல்.

4 சோடியம் ஐதரொட்சைட்டின் மிகவும் கூடிய உபயோகம்.

(1) இரும்புத்தகடுகளை நாகமுலாமிடுமுன் துப்பரவாக்குதல்.

(2) சவர்க்காரம் தயாரிக்கும்போது கொழுப்புக்களை நீர்ப்பிரிகை செய்தல்.

(3) (மேசை) உப்பு (உணவுக்கு)த் தயாரித்தல்.

(4) நிலக்கரித் தாரில் இருந்து அமிலப் பகுதிகளை விலக்கல்.

5. சோடிய நைத்திரைற்றையும் சோடியம் நைத்திரேற்றையும், கரைசல் நிலையிலிருக்கும்போது, பிரித்தறிவதற்கு உபயோகிக்கக் கூடிய சோதனைப் பொருட்கள்.

(1) சுண்ணும்பு நீர்

(2) பொற்றாசியம் பரமாங்கனேற்றுக் கரைசல்

(3) நாகத்தூளும் சோடியமைதரொட்சைட்டுக் கரைசலும்

(4) ஐதரோக்குளோரிக்கமிலக் கரைசலினுள் உள்ள அனிலீன்

6. சோடியம் ஐதரொட்சைட்டின் நீர்க்கரைசல் தாக்கமடையக் கூடிய பொருள்.

(a) $SnO$ (b) $NO$ (c) $S$ (d) $P$

7. சல்பூரிக்கமிலத்தின் பரும்படித் தயாரிப்பில் பின்வருவனவற்றுள் எதனைத் தொடங்கு பொருளாகப் பயன்படுத்தலாம்.

(a) $Na_2SO_4$ (b) $K_2SO_4$ (c) $CaSO_4$ (d) $S$

8. கதிர்த் தொழிற்பாட்டுத் தொடரில்,

(a) இறுதிவிளை பொருள் பொதுவாக ஈயமாகும்

(b) உயர் வெப்பநிலையில் அரைச்காலங்கள் அதிகரிக்கும்

(c) உயர்வெப்பநிலையில் அரைக்காலங்கள் குறைவடையும்

(d) அரைக்காலங்கள் அமுக்கத்தைச் சாராததாகும்.

9. ஐதான $H_2SO_4$ ஐ $K_2CrO_4$ இன் நீர்க்கரைசலுடன் சேர்க்கப்பட்டபோது.

(a) மஞ்சளிலிருந்து இளஞ்சிகப்பு நிறத்திற்கு மாறும்



(b) உண்டான விளைபொருள் மாப்பொருள் அயடைட்டுத்தாளை கபிலநிறமாக மாற்றும்

(c) குரோமேற்று அயன் இருகுரோமேற்று அயனை ஒட்சியேற்றப்படும்

(d) உண்டான விளைபொருள் $Na_2O_2$ கரைசலுடன் நீல நிறத்தினைக் கொடுக்கும்.

10. பின்வரும் இயல்புகள் பங்கீட்டுச் சேர்வையின் இயல்புகளாக இருக்கலாம்.

(a) நீரிற் கரைக்கும்போது கரைப்பானின் உருகுநிலையைக் குறைக்கும்

(b) நீரிற் கரைக்கும்போது, கடத்துதிறனில் காணக்கூடிய மாற்றத்தைக் காட்டாது.

(c) கரைய விருப்புள்ள கூழ்கள் இச்சேர்வையைச் சேர்த்ததும் உப்பகற்றலுக்கு உட்படுகின்றன.

(d) ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் நீர்க் கரைசலின் ஆவிய முக்கத்தைக் குறைக்கும்.

11. ஈற்றோட்டின் சக்திப் படிகளின் இலத்திரன் நிலையமைப்பு $S^2 d^2$ எனக் கொண்டிருக்கும் மூலகத்தைப் பற்றியது எது உண்மையானது.

(a) சடத்துவாயு (b) காரமண் உலோகம்

(c) தாண்டல் மூலகம் (d) அலசன் மூலகம்:

12. பின்வரும் எம்மாற்றங்கள் ஒட்சியேற்றும் கருவியின் உபயோகத்தை நாடும்.

(a) $I_2 \longrightarrow 2I^-$ (b) $Cr_2O_7^{--} \longrightarrow 2\,CrO_4^{--}$

(c) $IO_3 \longrightarrow I^-$ (d) $Mn^{2+} \longrightarrow MnO_4^-$

13. பளிங்கு $RbCl$ (ருபீடியம் குளோரைட்) என்பது,

(a) மின் பகுபொருள்

(b) குறைந்த உருகுநிலையுள்ள மூலக்கூற்றுத் திண்மம்.

(c) மின்கடத்தும் திண்மம்

(d) இலகுவில் நீரில் கூட்டப் பிரிவுறும்பொருள்

14. அணுவில் உள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை.

(a) கருவின் புரோத்தன்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்

(b) கருவின் நியூத்திரன்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்

(c) கருவின் நேரேற்றங்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்

(d) மூலகத்தின் அணுவெண்ணுக்குச் சமனாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாறும் வலுவளவுள்ள மூலகங்கள்.

(a) Ce (b) F (c Ba (d) Fe

16. நிறமுள்ள சேர்வைகள்.

(a) $Hg_2Cl_2$ (b) $AgNO_3$ (c) $CuBr_2$ (d) $Cr_2(SO_4)_3$

17. கதோட்டுக் கதிர்களில் இயல்புகளாக இருக்கக் கூடியது.

1. கதிர்கள் பொறிமுறை இயக்கச் சக்தியைக் கொண்டுள்ளன.
2. இக்கதிர்களில் உள்ள திணிவும், ஏற்றமும் இறக்கக் குழாயி யுள்ள வாய்ப்பிலும், கதோட்டிலும் தங்கியுள்ளவை.
3. கதிர்களின் பாதையில் ஒருபொருளைவைத்தால் ஒரு தெளிவான வரையறுத்த நிழல் உண்டாகிறது.
4. மிகச்சிறிய வாயு அணுக்களாவது, மூலக்கூறுகளாவது செல்ல முடியாத மெல்லிய அலுமினியத் தகட்டினூடாகச் செல்கின்றன.

18. மூலகம் ஈற்றேடில் இலத்திரன் ஒழுக்கு

X $ns^1$

X $ns^2np^3$

மேலுள்ள தரவுகளிலிருந்து இவற்றைப்பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை.

1. X ன் குளோரைட்டின் உருகுநிலை, கொதிநிலையாகியன, y ன் குளோரைட்டினதைவிட மிகக்கூடியனவாகும்.
2. X, y ஐ விடக் கூடிய மின்னெதிர்த்தன்மை உடையது.
3. X, y ஒரே ஆவர்த்தனத்தில் காணப்படலாம்.
4. X இன் முதலயனுக்கற்சக்தி y இனதைவிட குறைவாகும்.

19. பின்வரும் கூற்றுக்களில் உண்மையானவை யாவை?

1. சோடியம் அணுவின் பருமன் சோடியம் அயனின் பருமனை விட பெரியதாகும்
2. குளோரைட்டு அயனின் பருமன் குளோரின் அணுவின் பருமனிலும் சிறியதாகும்.
3. ஓர் நடுநிலைவாயு அணு ஓர் இலத்திரனை ஏற்கும்போது வெளிவிடப்படும் சத்தி இலத்திரன் நாட்டமாகும்.
4. ஒரு மூலகத்தில் -ம் அ.ஆ.சக்தி 2-ம் அ.ஆ. சக்தியிலும் குறைவானதாகும்.

20. பின்வருவனவற்றில் ஈரியல்புள்ள ஐதரொட்சைட்டுக்கள் யாவை.

(i) $Sn(OH)_2$ (ii) $Fc(OH)_2$ (iii) $Be(OH)_2$ (iv) $Pb(OH)_2$



21. லூயின் மூலகங்களாக இருக்கச்கூடியன.

(i) $H_2O$ (ii) $BF_3$ (iii) $CaF_2$ (ivi) $NH_3$

22. $Na_2CO_3$, $CO(NO_3)_2$ ஆகியவற்றுடன் கரிக்கட்டையில் வெப்பமேற்றியபோது நீலநிறதிணிவைக் கொடுக்கக்கூடியது.

(i) $HPO_4^-$ ii) $MN^{++}$ (iii) $Zn^{++}$ (iv) $Al^{+++}$

23. பின்வருவனவற்றுள் நடுநிலை ஒட்சைட்டு.

(i) $N_2O$ ii) $CO$ (iii) $Cl_2O$ (iv) $NO$

பலதேர்வு வினுக்கள்.

1. $\underset{(\text{நீ.க.})}{H^+} + \underset{(\text{நீ.க.})}{OH^-} \longrightarrow \underset{(\text{தி})}{H_2O}$ $\triangle H = 13{\cdot}7$ கி. கலோ/மூல்

கி. கலோ. சமன்பாடு வெப்பமாற்றம், நீர்க்கரைசலில், கீழ் வரும் தாக்கங்களுள் எது மேற்குறிப்பிட்ட பெறுமானத்திற்குச் சமனுனது.

1. $2KOH + H_2SO_4 \longrightarrow K_2SO_4 + H_2O$
2. $Ba(OH)_2 + H_2SO_4 \longrightarrow BaSO_4 + H_2O$
3. $NH_3 + HCl \longrightarrow NH_4Cl$
4. $NaOH + HCl \longrightarrow NaCl + H_2O$

2. ஐதரசன் பரவொட்சைட்டு அமிலமாக்கப்பட்ட $KMnO_4$ உடன் தாக்கமடையும்போது அம்மாற்றத்தை குறிக்கும் அரைத்தாக்க சமன்பாடு.

1. $2e^- + H_2O_2 \longrightarrow 2OH^-$
2. $2H^+ + H_2O_2 \longrightarrow 2H_2O + 2e^-$
3. $H_2O_2 \longrightarrow 2H^+ + O_2 + 2e^-$
4. $2OH + H_2O + 2e \longrightarrow 2H_2O + O_2$.

3. தூயநாகத்துண்டு ஐதான சல்பூரிக்கமிலத்தில் இடப்படும்போது மெதுவான தாக்கம் நிகழும், ஆனல் ஒருதுண்டு வெள்ளியைச் சேர்க்கும்போது அது நாகத்தை தொட்டுக்கொண்டிருந்தது. கீழ் வருவனவற்றுள் எது நிகழும் என எதிர்பார்க்கலாம்.

1. நாகம் விரைவாகக் கரைந்தது
2. வெள்ளியில் இருந்து ஐதரசன் குமிழிகள் தோன்றின
3. நாகம் தாழ்த்தப்பட்டது
4. கலத்தில் நாகம் கதோட்டாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பு வினாக்கள்

## அலகு 10 D

அடைப்பிலுள்ள எண் விடை எழுதும் வரிகளைக் குறிக்கும்.

1. பின்வரும் அட்டவணை ஆவர்த்தன அட்டவணையில் கூட்டம் VII ஐச் சேர்ந்த மூலகங்கள் சிலவற்றின் அணுஎண்ணையும் அவற்றின் ஐதரைட்டின் உருகு நிலையையும் காட்டுகின்றது.

| மூலகம் | F | Cl | Br | I |
|---|---|---|---|---|
| அணுஎண் | 9 | 17 | 35 | 53 |
| ஐதரைட்டின் உருகு நிலை | $-83°$ | $-115°$ | $-88°$ | $-57°$ |

a. i. இவ்வைதரைட்டுக்களின் பொதுச்சூத்திரம் யாது? (1)

ii. தூயஐதரைட்டுக்களில் இருக்கும் இரசாயனப் பிணைபடுக்களின் வகையாது? (1)

b. மேல் தரப்பட்ட தரவுகளை உபயோகித்து பின்வருவனவற்றை விளக்குக.

i. Cl, Br, I என்ற தொடரில் ஐதரைட்டுக்களின் உருகுநிலை கூடுதல். (2)

ii. F இன் ஐதரைட்டின் உருகுநிலை ஏனையவற்றின் ஐதரைட்டுக்களுடன் தொடர்புசெய்யும்போது கூடியதாக இருத்தல். (2)

c. செறிந்த சல்பூரிக் கமிலத்துடன் பின்வருவன உறும் தாக்கத்திற்கான சமன்பாடுகள் தருக.

i. திண்ம சோடியம் குளோறைட்டு. ($NaCl$) (1)

ii. திண்ம சோடியம் அயடைட்டு ($NaI$) (1)

d. அஸ்றரீன் (குறியீடு At அணுஎண் 85) என்னும் மூலகம் அலசின் குடும்பத்தில் கடைசி அங்கத்தவர் ஆகும். உமது இரசாயன அறிவை உபயோகித்து (அலசின்களின் தொடர்பு இயல்பு பற்றியது.) பின்வருவனவற்றுக்கு விடையளிக்குக.

i. சோடியம் அஸ்றறைற்றிற்கும் ($Na^+ At^-$) புரோமீன் நீருக்கும் நீர்க்கரைசலில் நடைபெறும் தாக்கம் (சமன்பாட்டுடன்.) (1)



ii. நீரில் கரைதிறன் குறைவான அஸ்றறைற்று ஒன்றின் சூத்திரத்தைத் தருக. (1)

iii. உமக்கு திண்ம அஸ்றரீன் தரப்பட்டுள்ளது எனின் இதை எவ்வாறு ஒரு ஐதறைட்டாக மாற்றுவீர்? (2) சமன்பாடுகள் (1)

2. a. ஆவர்த்தன அட்டவணையில் முதலாம் குற்றுவர்த்தனத்தில் உள்ள மூலகங்களின் (அருவாயு நியோனுடன் முடிவடைபவை) குறியீட்டை அணுஎண் ஏறுவரிசையிற் தருக. (2)

b. மேற்றிப்பிட்ட மூலகங்களுள்

i. p தொகுதி மூலகங்கள் எவை?

ii. d தொகுதி மூலகங்கள் எவை?

c. பின்வரும் அணுஎண்களைக் கொண்ட மூலகங்களின் சூத்திரங்களை தருக.

i. அ. எண் 3 ii. அணு எண் 5

d. பின்வரும் அணு எண்களைக் கொண்ட மூலகங்களின் குளோறைட்டுக்களை எவ்வாறு தயாரிக்கலாம்?

i. அணுஎண் 3 உள்ள மூலகத்தின் குளோறைட்டு (2)

ii. அணுஎண் 5 உள்ள மூலகத்தின் குளோறைட்டு (2)

c. இயற்கையாகக் காணப்படும் ஐதரசன் இருசமதானிகளின் கலவை அவை முறையே திணிவு எண் 1 உள்ள H, திணிவு எண் 2 உள்ள D ஆகும்.

i. D யின் அமைப்பு H இனதைவிட எவ்வகையில் வேறுபாடுள்ளது. (1)

ii. 100·00 க. ச.மீ. டியூற்றறியம் நிரப்பப்பட்ட ஐதரசன் 1 வ. ம. அ. இலும் 298° K இலும் அளக்கப்பட்டது. இதன் நிறை 0·0110 கி. எனின் இதன் சமதானி அமைப்பு யாது? (1)

3. அணுக்கருவின் ஆரை பின்வரும் எந்த அளவொழுக்கில் இருக்கும்?

1. $10^{-8}$ சமீ. 2. $10^{-9}$ சமீ. 3. $10^{-13}$ சமீ.
4. $10^{-23}$ சமீ. 5/ $10^{-24}$ சமீ.

4. இவ்வினா அணு எண் 32 உள்ள மூலகத்துடன் தொடர்புள்ளது. இம்மூலகம் பற்றி வேறுதரவுகள் தரப்படவில்லை. பின்வருவனவற்றிற்கு உமது இரசாயன ஆவர்தன அறிவை உபயோகித்து விடையளிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. மூலகம் $X$ இன் இலத்திர நிலையமைப்பை உயத்தறிக. (1)

b. மூலகம் $X$ பற்றிய கீழ்வரும் விஞக்களுக்கு உகந்தது எனக்கருதும் உமது விடையைப் பின்வருவனவற்றுள் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

i. $S$ தொகுதி மூலகம்; $p$ தொகுதி மூலகம்; $d$ தொகுதி மூலகம்

ii. அதன் முக்கிய ஒட்சியேற்ற எண் $+2$, $+3$, $+4$, $+5$, $+6$.

iii. உறுதியான ஒட்சைட்டாக இருக்கக்கூடியது, $XO$, $X_2O_3$, $XO_2$, $XO_3$

iv. ஒட்சைட்டு, அமில, மூல, ஈரியல்பு உள்ளது.

v. உண்டாக்கும் எளிய ஐதரைட்டு $XH$, $XH_2$, $XH_3$, $XH_4$, $XH_5$

vi. சார் அணுநிறையாக இருக்கக்கூடியது, 50, 70, 90, 110.

c. மூலகம் $X$ இன் குளோரைட்டின் சூத்திரம் $X_mCl_n$ எனக் குறிப்பிடப்பட்டால், உமக்குக் குளோரைட்டின் மாதிரி ஒன்று தரப்பட்டு அதிலிருந்து $m$, $n$ ஆகியனவற்றின் பெறுமானங்களைத் திட்டமிடும்படி கோட்டிருப்பின்,

i. வேண்டிய உபகாரணங்கள், தாக்கு பொருட்கள் ஆகியனவற்றின் அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

5. குரோமியத்தின் இலததிரன் அமைப்பு பின்வரும் எந்தவகையைச் சேர்ந்தது?

1. $s^0\ p^6$ 2. $s^2\ p^4$ 3. $d^4\ s^2$ 4.✓ $d^5\ s^1$ 5. $d^6\ s^0$

6. a. மாங்கனீசின் இலத்திரன் நிலையமைப்பு $A$, $3d^5$, $4S^2$ எனத் தரப்பட்டுள்ளது. இதில் $A$, வாயு ஆகனின் இலத்திரனிலையமைப்பு ஆகும்.

i. மாங்கனீசின் அணுஎண் யாது? (1)

b. $Mn$ உறுதியான, அல்லது ஓரளவுக்கு உறுதியான ஒட்சைட்டுக்களை உண்டாக்குவதற்கு பின்வரும் ஒட்சியேற்ற எண் பெறுமானங்களை அடையும்.

ஒட்சியேற்ற எண் $+2$, $+3$, $+4$, $+7$.

i. மேற்படி ஒட்சியேற்ற நிலையுள்ள ஒட்சைட்டுக்களின் சூத்திரங்களைத் தருக. (2)

ii. கீழே தரப்பட்டுள்ள இடைவெளியில் ஒட்சியேற்ற எண் $+2$, $+4$, $+7$ உள்ள $Mn$ இன் இலத்திரனிலையமைபைத் தருக.



ஒட்யேற்றநிலை

| | 3d | | | | | 4S |
|---|---|---|---|---|---|---|
| $+2$ A | | | | | | |
| $+3$ A | | | | | | |
| $\times 7$ A | | | | | | |

c. பின்வரும் அட்டவணையில் சில அரைத் தாக்கங்களின் தாழ்-ஒட்சியேற்ற அழுத்தங்கள் ($E^\circ$) தரப்பட்டுள்ளன.

| அரைத்தாக்கம் | $E^\circ$ (உவோறு) |
|---|---|
| $Al^{3+} + 3e \longrightarrow A$ | $-1{\cdot}66$ |
| $I_2 + 2e^- \longrightarrow 2I$ | $+0{\cdot}54$ |
| $Fe^{3+} + e^- \longrightarrow Fe^{2+}$ | $+0{\cdot}77$ |
| $H_2O_2 + 2H^+ + 2e^- \longrightarrow 2H_2O$ | $+1{\cdot}77$ |
| $Co^{3+} + e^- \longrightarrow Co^{2+}$ | $+1{\cdot}88$ |

i. மேற்குறிப்பிடப்பட்ட தாழ்-ஒட்சியேற்ற அடிப்படையில் அரைத்தாக்க சமன்பாட்டை எழுதுக: (1)

ii. அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட பொருட்களுள்

1. வன்மையான ஒட்சியேற்றும் கருவி எது? (1)
2. வன்மையான தாழ்த்தும் கருவி எது? (1)

iii. $Fe^{2+}$ ஐ $Fe^{3+}$ ஆக ஒட்சியேற்றுவதற்கு, தாழ்-ஒட்சியேற்ற அட்டவணையிற் தரப்பட்டனவற்றுள் எது உபயோகிக்கப் படலாம். (1)

மேற்படிதாக்கத்திற்கு, சமன்படுத்தப்பட்ட சமன்பாடு (1)

d. $Ag \mid Ag^+$ (நீர்) என்ற அரைக்கலத்தின் தாழ் - ஒட்சியேற்ற அழுத்தத்தைத் திட்டமிடுவதற்கு வேண்டிய.

i. முக்கிய பொருட்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் அட்டவணை. (2J

ii. உபகரணங்களை பொருத்தும் படம். (1)

7. $H_2O$, $CO_2$ ஆகிய மூலக்கூறுகளின் உருவங்கள் முறையே, பின்வருவன்வற்றுள் எதுவாகும்?

1. நேரானதும் கோணலானதும்
2. நேரானதும் நேரானதும்
3.✓ கோணலானதும் நேரானதும்
4. கோணலானதும் கோணலானதும்
5. மேற்கூறப்பட்ட எதுவுமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பின்வரும் கேள்விகள், பின்வரும் உலோகங்களுடன் தொடர்புள்ளவை. அலுமினியம், கல்சியம், செம்பு, ஈயம், மகனீசியம். மேர்க்கூரி, வெள்ளி, சோடியம் வெள்ளீயம், நாகம்.

a. இவ்வுலோகங்களை (தாக்கவீறு கூடியவையிலிருந்து தாக்கவீறு குறைந்தவைகள்) வரிசையாக, மின்இரசாயனத் தொடரில் ஒழுங்குசெய்க. (4)

b. மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் எவ்வுலோகங்கள், ஒன்றிலும் பார்க்கக் கூடிய வலுவளவு நிலையில் சேர்வைகளை உண்டாக்கும். நீர் தெரிவுசெய்த உலோகத்தி ஒவ்வொரு ஒட்சியேற்ற நிலைக்கும் ஒவ்வொரு உதாரணந் தருக. (1)

c. மேற்படி உலோகங்களின் குளோரைட்டுக்களில் இருந்து

i. நீரிற்கரையாத மூன்று குளோரைட்டுக்களைத் தெரிவுசெய்க. ஒவ்வொன்றினதும் பெயரையும், சூத்திரத்தையும் தருக. (1)

ii. நீர்ப்பகுபடையக் கூடிய மூன்று குளோரைட்டுக்கள் (சமன்பாடுகளுடன் தருக.) (1)

iii. மூலகங்களைத் தயாரிப்பதற்காக சாதாரணமாக உபயோகிக்கப்படும் மூன்று குளோரைட்டுகளின் பெயர்கள் (எப்படி என்பதைச் சுருக்கமாகக் கூறுக.) (1)

d. மின் இரசாயனத்தொடரில் அலுமினியத்தின் இடத்தை அதன் தாக்க இயல்புடன் தொடர்பு செய்து குறிப்புக் கூறுக. (2)

9. சிலிக்கன் வழமையில் தாயாரிக்கப்படுவது

1. $SnCl_2$, $SiCl_4$ ஆகியவற்றிற்கிடையேயுள்ள தாக்கத்தினல்
2. $SiCl_4$ இன் மின்பகுப்பால்
3. $SiO_2$ ஐ $C$ ஆல் மின்வெப்பரீதியில் தாழ்த்தி
4. $SiO_2$ ஐ தோன்றுநிலை $H$ ஆல் தாழ்த்தி
5. $SiF_4$ ஐ பிரிகையடையச் செய்து.

10. A, B ஆகிய இரு மூலகங்களின் அணு எண்கள் முறையே 16, 20 ஆகும்.

அ. A, B ஆகியவற்றின் இலத்திரன் உருவ அமைப்புக்களை வளக்கமான $1S^2$, $2S^2$ என்ற வடிவத்தில் எழுதுக. (1)

ஆ. A, B ஆகியவை ஆவர்த்தன அட்டவணையில் எத்தொகுதியில் இருக்குமென நீர் எதிர்பார்க்கிறீர்? (1)



இ. A உம் B உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சாத்தியமான சூத்திரத்தை எழுதுக? (1)

ஈ. இச்சேர்வை அயன் சேர்வையாகவா அல்லது ஈதல்வலுச் சேர்வையாகவா இருக்கும், உமது விடைக்கான காரணங்களைத் தருக. (1)

உ. B இன் தொடர் அயனுக்கச் சக்தி ($y$) அச்சு அகற்றப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கையோடு ($x$) அச்சு எவ்வாறு மாற்றமடையும் என்பதை வரைபடமூலம் வரைந்து காட்டுக.

ஊ. A உம் B உம் இருக்கும் அதே ஆவர்த்தனங்களில் இருக்கும் அலசின்களின் பெயர்களை எழுதுக. (1)

எ. (ஊ) விலுள்ள நிறைகுறைந்த அலசினுக்கும் சூடான செறிந்த $KOH$ கரைசலுக்கும் உள்ள தாக்கத்திற்கான சமன்பாட்டைத் தருக. (1)

11. கல்சியஞ் சயனமைட்டி ($CaNCN$) லிருந்து அமோனியாவை உற்பத்திசெய்வதில், உற்பத்தி இறுதியில் பெறப்படும் கல்சியம் சேர்வை பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1. $Ca(OH)_2$ 2. $CaO$ 3 $Ca(NO_3)_2$
4. $CaC_2$ 5. $CaCO_3$.

12. (அ) தாண்டலில்லாத மூலகம் X ஆனது வலுவளவு இரண்டினைக் காட்டுகின்றது. வழமையான முறையில் (அதாவது $S^m, p^n$ என்ற $m$, $n$ ஆகியன இலத்திரன் எண்கள்) X இனது வலுவளவு ஓட்டின் இலத்திரன் அமைப்பொழுங்குகளின் நிகழக்கூடிய வகைகளை எழுதுக. (1)

(ஆ) ஒவ்வொரு இலத்திரன் அமைப்புக்கும் உகந்ததாக X இனல் உருவாகக்கூடிய ஐதரைட்டினது சூத்திரத்தினை எழுதுக. (2)

(இ) X இனது ஒட்சைட்டுக்கள் நீரில் இலகுவாகக் கரைந்து அமிலக்கரைசல்களைக் கொடுத்தால் X இனது வலுவளவு ஓட்டின் மிகவும் சாதகமாக இருக்கக்கூடிய இலத்திரன் அமைப்பொழுங்குவகை எதுவாக விருக்கும்? (2)

(ஈ) ஆகனுடன் (அணு எண் = 18) முடிவடையும் மூலகங்களின் ஆவர்த்தனத்தில் X இருக்குமேயானல் X இனது முழு இலத்திர நிலையமைப்பினையும் எழுதுக. (2)

(உ) X இனல் உருவான இரண்டு ஒட்சைட்டுக்களின் மூலக்கூற்றுச் சூத்திரங்கள் எவை? (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) இரண்டு ஒட்சைட்டுக்களினதும் நீர்க்கரைசல்கள் தனித்தனியாக உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன இவ்விரு கரைசல்களையும் வேறு பிரித்துக் காண்பதற்கு நீங்கள் செய்யும் இரண்டு இரசாயனச் சோதனைகளையும் அவற்றின் அவதானங்களையும் தருக. (8)

(எ) ஒட்சைட்டுக்கள் ஒவ்வொன்றையும் மற்ற ஒட்சைட்டாக எவ்வாறு மாற்றலாம் எனக் குறிப்பிடுக. (6)

13. செறிந்த சல்பூரிக்கமிலம் ஒட்சலிக்கமிலத்துடன் தாக்கமுற்றுக் கொடுப்பது:

1. $CO$  2. $CO_2$  3. $CO, SO_2$

4✓ $CO, CO_2$  5. $CO_2, SO_2$.

14. அ. $y$ என்ற சேர்வை $5{\cdot}2\%$ $H$ ஐயும் $12{\cdot}2\%N$ ஐயும் $27\%$ $P$ யையும் ஒட்சிசனையும் மாத்திரம் கொண்டிருக்கிறது, $y$ இனது அனுபவ சூத்திரத்தைக் கணிக்குக.

$(H=1{\cdot}00,\ N=14{\cdot}00,\ P=31{\cdot}00\ \ O=16{\cdot}00)$ (7)

ஆ. $y$ நீரில்கரைந்து நீலப்பாசிச்சாயத்தைச் சிகப்பாக மாற்றும் கரைசலைத்தருகின்றது. $y$ வெப்பப்படுத்தியபோது அது சிவப்புப் பாசிச் சாயத்தினை நீலமாக மாற்றும் வாயுவைத் தருகின்றது. $y$ இனது நீர்க் கரைசலில் காணக்கூடியதான அயன்கள் எவையாக விருக்கலாம்? (3)

இ. சேர்வை $y$ இனைநீர் எவ்வாறு பெயரிடுவீர்? (2)

ஈ. $y$ இலிருந்து பொசுப்பரசினைத் தயாரிப்பதற்கான ஒரு முறையைக் குறிப்பிடுக. (8)

உ. 345 கி. கி. $NH_4HSO_4$ உடன் பூரணமாகத் தாக்கமடைவதற்குத் தேவையான $KOH$ இன் நிறையினைக் கணிக்குக.

$(K = 39{\cdot}10,\ S = 32{\cdot}00)$ (4)

ஊ. $NH_4HSO_4$ எவ்வாறு $KNO_2$ உடன் தாக்கமடையக் கூடும் என்பதை எதிர்வு கூறுக. (3)

15. $K^+$ ஐப்போன்று அதே எண்ணிக்கை இலத்திரன்களையுடையம்:

1. $Na^+$  2. $F^-$  3. $Mg^{++}$  4✓ $Cl^-$  $Ne$

16. இவ்வினா $Mg$, $Ca$, $Zn$ ஆகிய மூலகங்களுடன் தொடர்புள்ளதாகும்.

அ. ஒவ்வொரு மூலகத்தையும் பிரித்தெடுக்கப் பயன்படுத்தப்படும் அவற்றின் பிரதான இயற்கை இருக்கை வடிவம் ஒன்றின் பெயரைத்தருக. (1)



ஆ. சமன்பாடுகள் சுருக்கமான குறிப்புக்கள் ஆகியவை மூலம் மாத்திரம் ஒவ்வொரு மூலகமும் எவ்வாறு அவற்றின் பிரதான தாதுப்பொருட்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறதென்பதைக் காட்டும். (9)

இ. நீருடன் இவை எவ்வாறு எந்நிபந்தனைகளில் தாக்கம் புரிகின்றன. (4)

ஈ. வளியுடன் இவைகள் எந்நிபந்தனைகளின்கீழ் எவ்வாறு தாக்கம் புரிகின்றன (6)

உ. சமன்பாடுகள் சுருக்கமான குறிப்புகள்மூலம் மாத்திரம் அவற்றின் காபனேற்றுக்களிலும் நீரேற்றப்பட்ட குளோறைட்டுக்களிலும் நீரேற்றப்பட்ட குளோறைட்டுக்களிலும் வெப்பத்தின் விளைவுகளைக் காட்டுக.

i. காபனேற்றுக்கள் (3)

ii. நீரற்றப்பட்ட குளோறைட்டுக்கள். (3)

17. பின்வருஞ் சேர்வைகளுள் எது மிக அயனுகுந்தன்மையுடையது?

1. $NaBr$  2✓ $CsF$  3. $LiF$  4. $LiI$  5. $KCl$.

18. $A, B, C, D$ ஆகிய நான்கு சேர்வைகள் தரப்பட்டுள்ளன.

$A=NaCl$, $B=K_2Cr_2O_7$ $C=KI$ $D=H_2SO_4$

i. $A$ யில் குளோரைட்டு உண்டு என்பதை உறுதிப்படுத்த தரப்பட்ட மற்ற சேர்வைகளில் எவற்றை எவ்வாறு உபயோகிக்கலாம்?

அ. சேர்வைகள் (2)  ஆ. பரிசோதனை விபரம் (2)

இ. வேண்டிய வேறு சேர்வைகள் (2)  ஈ. அவதானம் (1)

ii. பகுதி (i)இல் நடைபெறும் இரசாயனத் தாக்கங்களுக்கு சமன்பாடுகள் தருக. (4)

iii. அ. (B) அமில ஊடகத்தில் (D) யின் முன்னிலையில் C யுடன் உறும் தாக்கத்திற்குரிய அரைத் தாக்க சமன்பாடுகளை எழுதுக. (2)

ஆ. (அ)இல் $Cr$ இன் ஒட்சியேற்ற எண் மாற்றம் யாது? (2)

iv. பகுதி (iii) இல் உள்ள அரைத்தாக்கங்களில் இருந்து $B$ யினதும் $C$ யினதும் சமவலு நிறைகளை அவைகளின் மூலக்கூற்று நிறையின் பின்னத்தில் தருக. (2)

v. கரைசலில் இருப்பது நாக அயனு அல்லது $(Al^{3+})$ அயனு என்பதை அறிவதற்கான பரிசோதனை விபரங்களைத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. வேண்டிய சோதனைப் பொருள்கள் (2)

ஆ. பரிசோதனை விபரம். (2)

19\. a. ஆவர்த்தன அட்டவணையில் கார உலோகங்களான Li தொடங்கி Na வரையுள்ளவற்றுக்கிடையிலும், Na தொடங்கி K வரையுள்ள வற்றுக்கிடையிலும் முறையே எட்டு, எட்டு மூலகங்களும் அடுத்த சோடியான K தொடங்கி Rb வரையுள்ளவற்றினுள் 18 மூலகங்களும் உள்ளன. என்பதைச் சுருக்கமாக விளக்குக. (4)

b. (Sc) ஸ்கண்டியத்தின் இலத்திரநிலையமைப்பு (Sc அணு எண் Z=21) பின்வருமாறு எழுதப்படலாம் $1s^2$, $2s^2$, $2p^6$, $3s^2$, $3p^6$, $3d^1$, $4s^2$ எனின் பின்வருவனவற்றின் இலத்திரநிலையமைப்புக்களை எழுதுக.

1. ஒரு நியோன் அணு (Ne Z=10) (1)
2. ஒரு செம்பு அணு (Cu Z=29) (1)
3. செம்பு (II) அயன் ($Cu^{+};$) (1)
4. செம்பு (I) அயன் ($Cu^{+}$) (1)

c. காபனின் இருசமதானிகள் $C^{12}$, $C^{14}$ ஆகும் இவ்விரு சமதானிகளின் இலத்திரநிலையமைப்புக்களை எழுதுக.

d. இயற்கையில் காணப்படும் இலித்தியத்தில் 7·4% $^6Li$ (சார் அணுத்திணிவு 6·02) உம் 92·6% $^7Li$ (சார் அணுத்திணிவு 7·02) உம் உள்ளன எனின் Li இன் சார் அணுத்திணிவுயாது.? (1)

e. மூலகம் செலேனியம் (Se Z=34) கந்தகத்துடன் (S; Z=16) எவ்வாறு தொடர்புள்ளதோ அதேபோல் கந்தகம் ஒட்சிசனுடன் (O; Z=8) தொடர்புள்ளது எனின் செலேனியத்தின் இலத்திரநிலையமைப்புப் பற்றி என்ன எதிர் பார்க்கிறீர்? (2)

20\. $Na_2S_2O_3$ யின் கரைசல் HCl கரைசலுடன் தாக்கமுற்றுத் தருவது

1. NaCl, $SO_3$, S, $H_2O$  2. NaCl, $SO_2$, S, $H_2O$
3. NaCl, $SO_2$, S  4. NaCl, $SO_2$, $H_2O$
5. NaCl, $SO_2$, $SO_3$, $H_2O$.

21\. ஆவர்தன அட்டவணையில் இருக்கும் மூலகங்களில் அணு எண் 10 தொடங்கி அணு எண் 17 வரையுள்ள மூலகங்களின் தொடர். Ne, Na, Mg, Al, Si, P, S, Cl ஆகும்

i. ஒவ்வொரு மூலகத்தினதும் உயர் ஒட்சியேற்ற நிலையில் உண்டாகும் ஒட்சைட்டுக்களின் சூத்திரத்தை எழுதுக. (3



ii. மேற் கூறப்பட்ட ஒட்சைட்டுக்கள் நீருடன் உறும் தாக்கங்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தந்து தாக்கத்தில் உண்டாகும் கரைசல்கள் அமில இயல்பினவா, காரஇயல்பினவா, அல்லது நடுநிலையானவையா எனக் கூறு. 2)

iii. மேலே தரப்பட்ட அட்டவணையில் உள்ள மூலகங்களுள் X, y ஆகியனவற்றைத் தெரிவுசெய்க. X உம் y உம் முறையே $X_2O_3$ $y_2O_3$ என் சூத்திரமுள்ள ஒட்சைட்டுக்களை உண்டாக்குபவை. ஒவ்வொரு ஒட்சைட்டுக்களையும் எவ்வாறு தயாரிப்பீர் என சுருக்கமாகக் கூறுக. தொடங்கு பொருளாக மூலகத்தையோ அல்லது வேறு உகந்த தொடங்கு பொருளையோ உபயோகிக்கலாம். (3)

b. மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு மூலகங்களின் முக்கியமான ஐதரைட்டுகளின் சூத்திரங்களை எழுதுக. ஏதாவது ஒரு மூலக ஐதரைட்டை உண்டாக்காது எனின் அது குறிப்பிடப்படவேண்டும். மேற்படி ஐதறைட்டுக்களில் இருக்கும் பிணைப்புக்கள் மின்வலுப்பிணைப்புக்களா, பங்கீட்டு வலுப் பிணைப்புக்களா எனவும் குறிப்பிடுக (2)

22\. A என்னும் கதிர்தாக்க இயல்புள்ள மூலகம் ஒரு அல்பாத்துணிக்கையை வெளிவிடுகிறது. உண்டான புது மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் எந்த இடத்தை வகிக்கும்?

1. A க்கு வலதுபுறமாக முதலாமிடத்தை
2. A க்கு வலதுபுறமாக இரண்டாமிடத்தை
3. A க்கு இடதுபுறமாக இரண்டாமிடத்தை
4. A க்கு இடதுபுறமாக முதலாமிடத்தை
5. A க்கு இடதுபுறமாக நன்காமிடத்தை

23\.

| மூலகம் | அயனுக்கச்சத்தி (கி. கலோரி/கிராம் அணு) | | | |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 |
| A | 520 | 7,301 | 11,817 | ———— |
| B | 578 | 1 817 | 2,746 | 10,813 |
| C | 1,087 | 2,354 | 4 621 | 6,425 |
| D | 496 | 4,566 | 6 917 | 9,546 |
| E | 590 | 946 | 4 944 | 6,469 |
| F | 409 | 2,667 | 3,881 | 4,997 |

தரப்பட்ட அயனுக்கச்சக்திப் பெறுமானங்களிலிருந்து மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. உறுதியான 3 + அயனை ஆக்கக்கூடிய மூலகம் எது? (1)

ii. ஒரு மூல் அணுவை இரு வலு அயனாக ஆக்குதற்கு, அதிக சக்தி உபயோகிக்கப்படும் மூலகம் எது? (1)

iii. அ. ஆவர்த்தன பாகுபாட்டில் ஒரே தொகுதியில் இருக்கக் கூடிய மூலகங்களை அணுவெண் உயர்வரிசையில் தருக. (1)

ஆ. நீவிர் கருதும் மூலகங்கள் எத்தொகுதியைச் சேர்ந்தன? (1)

இ. அத்தொகுதியின் பொது இலத்திரனமைப்பை $n; (n-1)$ என்ற முறையில் தருக.

iv. ஒரு மூலகத்தின் அயனாக்கச்சக்தியைப் பாதிக்கும் முக்கிய காரணிகள் யாவை? (1)

v. $B$ இன் அணுஎண் $E$ இன் அணு எண்ணிலும் ஒன்று கூடியது ஆனால் $E$ இன் முதல் அயனாக்கசக்தி $B$ யினதிலும் உயர்வானது ஏன் என விளக்குக.

24. அசிற்றைல் குளோரைட்டிலுள்ள $C-Cl$ பிணைப்பு, பின்வரும் எவ்வகையைச் சேர்ந்தது?

1. $sp^3-s$ 2. $sp^3-p$ 3. $sp^2-s$
4✓ $sp^2-p$ 5. $sp-p$

25. $X$, $Y$ ஆகிய கதிர்த் தொழிற்பாடுடைய மூலகங்களைப் பற்றிச் சிலதரவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மூலகம் | ஆவர்த்தனவட்டவணையில் இருக்கும் | | காலும் துணிக்கை | அணுத் திணிவு |
|---|---|---|---|---|
| | தொகுதி | ஆவர்த்தனம் | | |
| $X$ | VI | 6 | பீற்று | $b$ |
| $Y$ | II | 7 | அல்பா | $a$ |

அ $X$, $Y$ ஆகியவற்றின்

i. அணுவெண்கள் யாவை? (1)

ii. அதிவெளியோட்டின் இலத்திரனிலையமைப்புக்களை $2s^2$ $2s^6$ $2p^2$ என்ற உருவத்தில் தருக. (1)

ஆ. $X$, $Y$ கதிர்தொழிற்பாடடையும்போது மேலும் சிதைவடைய மாட்டாத $M$, $N$ என்ற மூலகங்களை உண்டாக்கினால்,

i. $M$, $N$ ஆவர்த்தனவட்டவணையில் உள்ள எத்தொகுதிகளைச் சேரும். (1)

ii. அறைவெப்ப நிலையில், $M$. $N$ ஆகியவை திண்மமாகவோ, திரவமாகவோ அல்லது வாயுவாகவோ இருக்கும் என நீர் எதிர்பார்ப்பீர்? (1)



iii. $X$ சிதைவடையும்போது நடைபெறும் கருத்தாக்கத்திற்கு ஒரு சமன்பாடுதருக. (1)

இ. வெற்றிடப் பாத்தரமொன்றினுள் சிறிதளவு $Y$ இன் குளோறைட்டு உண்டு. சில காலத்தின்பின் அப்பாத்திரத்தினுள் இருக்கும் பதார்த்தங்கள் யாது? (1)

ஈ. $X$, $Y$, $M$, $N$ ஆகிய மூலகங்களில் அதிஉயர் முதலாவது அயனாகற் சத்தி எதற்கு இருக்குமென எதிர்பார்ப்பீர்? (1)

உ. i. $X$ $Y$ தனது ஐதரைட்டுக்களை உண்டாக்கும்போது ஒட்சியேற்றப்படுகிறதா? தாழ்த்தப்படுகிறதா? (1)

ii, அவ்வைதரைட்டுக்களில் $X$, $Y$ ஆகியவற்றின் ஒட்சியேற்ற எண்கள் யாவை? (1)

iii. $X$ ஐதரட்டை உண்டாக்கும் தாக்கத்தில் $X$ இன் அரை இலத்திரன் சமன்பாட்டை எழுதுக. 1)

26. இரும்பு உற்பத்தியில், பின்வருவனவற்றுள் எவற்றை ஆரம்ப பொருளாக உபயோகிக்கலாம்?

a ✓ ஏமற்றைற்று b. போட்சைற்று c. புளோர்க்களிக்கல்
d. சுண்ணாம்புக்கல்

27. A, B C என்னும் மூலகங்களின் அணு எண்கள் முறையே 6, 17, 26 ஆகும்.

அ. A, B, C இன் இலத்திரனமைப்புகளை $1s^2$, $2s^2$...... என்ற வடிவத்தில் தருக. (3

ஆ. Aயும் Bயும் உருவாக்கும் ஓர் எளிய சேர்வையின் சூத்திரம் யாது? (1)

இ. (ஆ) இல் கூறப்பட்ட சேர்வையின் கேத்திரகணித வடிவத்தை தருக. (1)

ஈ. (ஆ)வில் கூறப்பட்ட சேர்வை நீருடன் தாக்கம் புரியுமா? உமது காரணங்களைச் சுருக்கமாக தருக. (2)

உ. A, B ஆகியவற்றிற்கு இல்லாததும் Bயில் காணக்கூடியதுமான இரண்டு இயல்புகள் தருக. (2)

ஊ. Bயும் Cயிம் ஆக்கக்கூடிய இரு சேர்வைகளின் சாத்தியமான சூத்திரங்களைத் தருக, (1)

எ (ஊ)வில் கூறிய சேர்வைகளுள் எது மேக்கூரிக் குளோரைட்டுடன் தாக்கமுறக்கூடியது? சமன்பாடு தருக. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஒரு சோடி எதிருருக்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எவை உண்மையானவை?

a. அவை ஒரே வெப்பநிலையில் உருகுகின்றன

b. அவை சம எதிர் தற்சுழற்சிகளையுடையன

c. ஒன்றின் ஆடிவிம்பம், மற்றையதுடன் பொருந்தக்கூடியது

d. சேதனக்கரைப்பான்களில் அவைகள் வெவ்வேறு கரைதிறன்களையுடையன.

e. அவை ஒத்த இரசாயன இயல்புகளையுடையன.

1. $a, c, d$ 2✓ $a, b, e$ 3. $b\ d\ c$ 4. $a, b, c$ 5. $c, d, e$

29. பின்வரும் எச் சேர்வையின் ஒரு கிராம்திணிவு, நீருடன் தாக்கமுற்று, மிகக்கூடிய கனவளவு ஐதரனைத்தரும்?

1. $SrH_2$ 2. $CsH$ 3. $BaH_2$ 4. $SeH_2$ 5✓ $LiH$

30. அசேதனச் சேர்வை $X$ என்பது நீரில் கரையும் வெண்பளிங்குகள் ஆகும். அது சுவாலைப் பரிசோதனையில் ஊதா நிறத்தையும் மாப்பொருள் கலந்த அதன் கரைசலுக்கு குளோரீன் நீர் சேர்த்த போது நீல நிறத்தையும் கொடுத்தது.

அ. i. $X$ இல் உள்ள உலோக அயன் யாதாக இருக்கலாம். (1)

ii. அவ்வயனுக்குரிய உறுதிப் பரிசோதனையை அவதானங்களுடன் தருக. (1)

ஆ. $X$ இன் நீர்க்கரைசலுக்கு பின்வருவனவற்றை, சேர்க்கும்போது யாது அவதானிப்பீர்?

i. $AgNO_3$ நீர்க்கரைசல் (1)

ii. $AgNO_3$ நீர்க்கரைசல் + மேலதிக ஐ $HNO_3$ (1)

iii. $AgNO_3$ நீர்க்கரைசல் + மேலதிக ஐ $NH_4OH$ (1)

iv. $Pb(NO_3)_2$ (நீர்) + வெப்பம் + குளிர்ச்சி (1)

v. சிறிதளவு $I_2$

இ. i. $X$ இன் நீர்க்கரைசலை சிறிது சிறிதாக மேக்கூரிக் குளோரைட்டு நீர்க் கரைசலுக்கு மேலதிகமாகச் சேர்க்கும் போது யாது நடைபெறும்? (3)

ii. (இ) (i) இல் நடைபெற்ற மாற்றத்திற்குச் சமன்பாடுகள் தருக. (2)

iii. பண்பறி பகுப்பில் (இல்) (i) (இல்) கிடைத்த பதார்த்தத்தின் உபயோகத்தைக் கூறுக. (2)



ஈ. கனமானப் பகுப்பில் $X$ இன் உபயோகத்தைப்பற்றிச் சிறு குறிப்பெழுகது. (8)

31. ஒரு எளிய உப்பின் நீர்ககரைசல் ஒன்று பேரியங்குளோரைட்டுக் கரைசலுடன் ஐதான நைத்திரிக்கமிலத்திற் கரையாத வெண்ணிற வீழ்படிவைக் கொடுத்தது. எளிய உப்பிலுள்ள அனயன்.

1. பொசுபேற்று ஆகும் 2. சல்பைற்று ஆகும்
3✓ சல்பேற்று ஆகும் 4. காபனேற்று ஆகும்
5. என்னவென்று திடமாகச் சொல்லமுடியாது.

32. $C_4H_{10}O$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தையுடைய $P$, $Q$ $R$, $S$ என்னும் சேர்வைகள் $PCl_5$ உடன் தாக்கமுறக் கூடியவை. $P$, $ZnCl/HCl$ உடன் உடனடியாகத் தாக்கமுற்றது. $Q$ அயடோபோம் தாக்கத்தைக் கொடுத்தது.

அ. பின்வருவனவற்றின் கட்டமைப்புகளைத் தருக. $P$, $Q$ (2)

ஆ. $R$, $PCl_5$ உடன் கொடுத்த விளைவிலிருந்து $HCl$ அகற்றப் பட்டபோது ஒரு அற்கீன் $X$ உண்டாகியது.

i. $HCl$ஐ அகற்றுவதற்குச் சிறந்த சோதனைப் பொருள் யாது? (1)

ii. $X$ இன் கட்டமைப்பு யாதாய் இருக்கலாம்? (2)

இ. $X$ இன் ஓசோனைட்டை $H_2/Pd$ உடன் சூடேற்றியபோது, $Y$, $Z$ ஆகிய இரு சேர்வைகள் உண்டாகின. $Y$ அயடோபோம் தாக்கத்தையும் $Z$ வெள்ளி ஆடிச் சோதனையையும் கொடுத்தன.

i. வெள்ளியாடிச் சோதனைக்குரிய சோதனைப் பொருளை எவ்வாறு தயாரிப்பீர் (3)

ii. பின்வருவனவற்றின் கட்டமைப்புக்களைத் தருக. (a) $Y$ (b $Z$ (2)

iii. இ(ii) இலிருந்து $R$, $S$ ஆகியவற்றின் கட்டமைப்புகளை உய்த்தறிக. (2)

ஈ. பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துவதற்குத் தேவையான படிகளையும நிபந்தனைகளையும் தருக.

i. $S$ இலிருந்து $Q$ (3)

ii. அசற்றிக் கமிலத்திலிருந்து I (2)

33. மென்றகட்டுக் கலங்களை (நெல்சன் கலங்களை)ப் பயன்படுத்தி உற்பத்திச்சாலை ஒன்றில் பெறப்பட்ட காரச்சோடாக்கரைசலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதரோக்குளோரிக்கமில
மாதிரி ஒன்றிற்கு; மிகையளவு ஐதான
மும், பொற்ருசியமயடைட்டும் சேர்க்கப்பட்டபொழுது, கடுங்
கபிலநிறம் உடனடியாக உண்டானது. இதற்கான காரணம் பின்
வருவனவற்றுள் எதுவாகவிருக்கலாம்?

1. சோடியங்குளோரைட்டின் செறிவு மிக அதிகம்
2. சோடியங்குளோரைட்டின் செறிவு மிகக் குலைவு
3. பிரயோகிக்கப்பட்ட உவோற்றளவு மிகக்குறைவு
4. மென்றகட்டில் குறைபாடு உண்டு
5. மின்பகுகரைசலின் வெப்பநிலை மிகக் குறைவு.

34. அ. i. நாகத்தின் பிரதான தாதுப்பொருளின் பெயரையும் சூத்திரத்தையும் தருக. (1)

ii. அதனுடன் சேர்ந்திருக்கும் இன்னொரு தாதுவின் பெயரையம் சூத்திரத்தையும் தருக. 3)

iii. எவ்வாறு இவையிரண்டும் வேருகப்படுகின்றன?

iv. சமன்பாடுகள், நிபந்தனைகள், குறிப்புகள் மூலம் நாகம் எவ்வாறு அதன் தாதுப் பொருளிலிருந்து வேருகப்படுகின்றது என்பதைத் தருக. (4)

ஆ. i. அலுமினியத்தைப் பெரும்பமடியாக வேருக்க உபயோகிக்கப்படும் தாதுவின் பெயரையும் சூத்திரத்தையும் தருக (1)

ii. பூமியின் மேற்பரப்பில் அலுமினியம் அதிகவீதம் காணப்பட்டபோதிலும், சில காலத்தின் முன்தான் தாதுப் பொருளிலிருந்து அது பெரும்படியாக வேருக்கத் தொடங்கப்பட்டது. இதற்குரிய காரணங்களைத் தருக. (4)

iii. ஆ (i) இல் கூறிய தாதுப்பொருள் (1) எவ்வாறு தூய்மைப்படுத்தப் படுகிறது. (3)

2. ஏன் தூய்மைப்படுத்தவேண்டும். (2)

iv. தூய்த்தாக்கிய தாதுவிலிருந்து எவ்வாறு அலுமினியம் பெறப்படுகிறது என்பதை நிபந்தனை, குறிப்புகள் ஆகியவற்றினுல் சுருக்கமாக விபரி. (4)

v 1. அலுமினியத்திலிருந்து தொடங்கி எவ்வாறு நீரற்ற அலுமினியம் குளோரைட்டு தயாரிப்பீர்? (2)

2. நீரற்ற அலுமினியங் குளோரைட்டு அறைவெப்ப நிலையிலிருந்து 800°C க்கு வெப்பமேற்றப்பட்டபோது அதன் அமைப்புக்கு யாது நடைபெறும் என்பதைச் சுருக்கமாக கூறுக. (3)



35. $Li$, $Be$, $B$, $C$, $N$, $O$, $F$ ஆகிய மூலகங்கள் ஒவ்வொன்றினதும் உயர் நேர் ஒட்சியேற்ற நிலையை உண்டாக்குவதற்குத் தேவையான அயனுக்கச்சக்தி:

1. $Li$ இலிருந்து $F$ வரைக்கும் படிப்படியாகக் குறைகின்றது
2. $Li$ இலிருந்து $F$ வரைக்கும் மாருதிருக்கின்றது
3. $Li$ இலிருந்து $F$ வரைக்கும் மிகவிரைவாக அதிகரிக்கின்றது
4. காபனில் ஓர் உயர் பெறுமானத்தை யடைகின்றது.
5. காபனில் ஓர் இழிவு பெறுமானத்தை யடைகின்றது.

36.

| | பரிசோதனை | நோக்கல்கள் | | |
|---|---|---|---|---|
| | | $x$ | $y$ | $z$ |
| (i) | $NaOH$ சேர்த்தல் (அ) குளிர்நிலையில் | —— | அமோனியா வெளியேறியது | —— |
| | (அ) சூடேற்றியபோது | அமோனியா வெளியேறியது | அமோனியா வெளியேறியது | —— |
| (ii) | குளிர்ந்த $HNO_2$ சேர்தல் | நைதரசன் வெளியேறியது | —— | நைதரசன் வெளியேறியது |
| (iii) | அற்ககோல் சேர் $KOH$உம். $CHCl_3$ உம் சேர்த்து வெப்பமேற்றல் | —— | —— | விரும்பத்தகாத மணம் |

(i) $x$, $y$, $z$ ஆகியவற்றின் பொதுச் சூத்திரங்களைத் தருக.

(ii) குளிர்ந்த நைதரசவமிலத்துடன் $x$, $z$ என்பன தாக்கமுறுவதைக் குறிக்கும் சமன்பாடுகளைத் தருக.

(iii) (அ) மூன்ரும் பரிசோதனையில் விரும்பத்தகாத மணம் எப்பதார்த்தம் உண்டாவதைக் குறிக்கிறது?

(ஆ) இத்தாக்கத்தைக் குறிக்கும் சமன்பாட்டைத் தருக:

(iv) $y$-யை $z$ஆக மாற்றுவதற்குரிய பரிசோதனை நிபந்தனைகளையும் தாக்கத்தைக் குறிக்கும் சமன்பாடுகளையும் தருக

37. குரோமேற்றயன் $(CrO_4)^{2-}$ இரு குரோமேற்றயனக $(Cr_2O_7)^{2-}$ மாற்றமடைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒட்சி யேற்றமாகும் 2. தாழ்த்தல் ஆகும்

3. பரஸ்ப ஒட்சியேற்றம் ஆகும் 4. பரஸ்பர தாழ்த்தல் ஆகும்

6✓ ஒட்சி யேற்றமுமல்ல, தாழ்த்தலுமல்ல.

38. பொசுபரசின் உற்பத்தியில், பின்வரும் எத் திரவியம் அத்தியாவசியமானது?

1✓ கற்கரி 2. செறிந்த சல்பூரிக்கமிலம் 3 உலை எண்ணெய்
4. சிலிக்கா 5. சுண்ணும்புக்கல்

39. பொசுபரசு ($32\ ^{32}P_{15}$) என்பது கதிர்த் தொழிற்பாட்டுடையதும் 14·25 நாட்களை அரை உயிர்க் காலமாகக் கொண்டதுமான பொசுப்பரசின் ஒரு சமதானியாகும்.

(அ) (i) சமதானி எனப்படுவது

(ii) பொசுபரசின் இலத்திர நிலையமைப்பை $1S^2\ 2S^2$ என்ற வடிவில் எழுதுக.

(ஆ) $^{32}P$, $a$ கதிர் வீசலின்போது X எனப்படும் ஒரு மூலகத்தைக் கொடுத்தால் X இன்

(i) அணு எண் (ii) திணிவு எண்

(iii) இலத்திரன்நிலையமைப்பு ($1S^2\ 2S^2$...என்ற வடிவில் எழுதுக?

(இ) $^{31}P_{15}$ இனுடைய பின்வரும் தாக்க சமன்பாடுகளைப் பூர்த்தி செய்க. (உ-ம் $^{14}N_7$ $(a, p$ $^{17}O_8$

(i) $^{31}P_{15}$ $(a, p)$ (ii) $^{31}P_{15}$ $(......, p)$ $^{32}P_{10}$

(ஈ) இரதபோட்டின் அணுவினது கருமாதிரி உருவைநிரூபிப்பதற்கு $a$கதிர்வீசல் எவ்வாறு பயன்பட்டது என்பதைக் குறிப்பிடுக.(4)

(உ) $\alpha$, $\beta$, $\gamma$ கதிர்களை ஒப்பிடுக.

(i) இயல்புகள் (திணிவு, ஏற்றம்) (ii) ஊடுருவும் தன்மை

(iii) வாயுக்களை அயனுக்கும் தன்மை

40. Ti, Se ஆகிய மூலகங்கள் முறையே ஆவர்த்தன அட்டவணையின் தொகுதி IV, தொகுதி VI ஆகியவற்றைச் சேர்ந்தவையாகும். தைத்தானசுசெலனேற்று வழக்கமான வலுவளவு விதிகளுக்கமைந்த ஒரு சேர்வையெனக் கருதின், அதன் சூத்திரம் பின்வருவனவற்றுள் எதுவாகவிருக்கலாம்?

1✓ $Ti(SeO_3)_2$ 2. $Ti_2(SeO_4)_3$ 3. $Ti(SeO_3)_3$
4. $Ti_2SeO_4$ 5. $Ti_2(SeO_3)_3$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org